இலங்கை துறைமுக அதிகாரசபை



ஆண்டறிக்கை
2022

எமது பணிக்கூற்று

‘‘அனைத்து சேவைகள் பெறும் நிறுவனங்களுக்கு சர்வதேச தரத்திலான துறைமுக வசதிகளையும் சேவைகளையும் வழங்குதல் ஊடாக தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல்’’

எமது தொலைநோக்கு

‘‘ உலகலாவிய சமுத்திரவியல் மற்றும் சேவை வழங்கல் மையத்தின் தரத்தில் பேணிச் செல்லும் இலங்கையின் பாரிய முன்னனி முகவர் நிலையமாக அமைத்தல்’’

உள்ளடக்கம்

எமது நிறுவனரீதியான நோக்கங்கள்	3
எமது நிறுவனரீதியான மூலோபாயங்கள்	4
எமது இயக்க கோட்பாடுகள்	5
இலங்கை துறைமுக அதிகாரசபை என்பது	6
இயக்க முக்கிய விடயங்கள்	7
நிதிசார் முக்கிய விடயங்கள்	10
எங்கள் அமைச்சர்கள்	11
தலைவரின் மீளாய்வு	12
பணிப்பாளர் சபை	17
முகாமைக் குழு	23
வர்த்தக அபிவிருத்தி	25
அபிவிருத்தி திட்டங்கள்	26
இயக்க மீளாய்வு	34
நிதி மீளாய்வு	59
மனித மூலதனம்	64
ஒன்றிணைந்த சமூகப் பொறுப்புக்கள்	65
ஒன்றிணைந்த நிர்வாக அறிக்கை	66
முக்கிய நிகழ்வுகள	69
துறைமுக புள்ளி விபரங்கள்	76
நிதி அறிக்கைகள்	81
பணிப்பாளர் சபையின் அறிக்கை	82
நிதி அறிக்கை வெளியிடல் தொடர்பான பணிப்பாளர் சபையின் அறிக்கை	85
கணக்காய்வு குழுவின் அறிக்கை	86
சட்டபூர்வ இணக்கப்பாட்டு அறிக்கை	89
இயக்க முக்கிய விடயங்கள்	90
நிதி நிலைமை தொடர்பான அறிக்கை	91
விபரமான வருமான அறிக்கை	92
திணிவு மாற்றம் மீதான அறிக்கை	93
காசுப் பாய்ச்சல் அறிக்கை	95
பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்	96
நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்	116
வரைபட மீளாய்வு	140
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	142
அமைப்பு விதி தொடர்பான தகவல்கள்	164

2022-2024 திட்டமிடப்பட்ட கால எல்லையினுள் கீழ்க்குறிப்பிடப்படும் ஏழு (07) நோக்கங்களையும் அடைந்துக்கொள்வதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபை முன்னோக்கிப் பயனிக்கின்றது.

1. நவீன தொழிநுடபம் மற்றும் ஜய கொள்கலன் முனைய நவீனமயப்படுத்தலுக்கு இணையாக பொதுப்பணிக் கட்டமைப்புக்கள் மற்றும் உயர் கட்டமைப்புக்களின் நிலையை அதிகரிப்பதன் ஊடாக திறனான துறைமுகமொன்றை உருவாக்குதல்

2. எதிர்வரும் மூன்று ஆண்டினுள் கொழும்பு துறைமுகத்தின் தரத்தை உலகளாவிய சிறந்த கொள்கலன்களை கையாளும் துறைமுகங்கள் (20) இருபதிற்கிடையே உயர்த்துதல்.

3. இலங்கை துறைமுக அதிகாரசபையின் உற்பத்தித்திறன் சிறப்புத்தன்மை மற்றும் செயற்திறனை உயர்மட்டத்தில் பேணிச்செல்வதற்கு மனித மூலதன திறன்களை உயர்வடையச் செய்தல்.

4. நன் நோக்கிலான ஒத்துழைப்புக்களை பலமான முறையில் கட்டியெழுப்பும் பொருட்டு அனைத்து துறைமுகம் தொடர்பான வர்த்தக நிறுவனங்கள், கப்பல் கம்பனிகள் மற்றும் அரச நிறுவனங்களின் ஒத்துழைப்பினை மேம்படுத்துதல்.

5. குறைந்த ஆகுசெலவில் உயர் பெறுமதியினை பெற்றுக்கொள்ளும் பொருட்டு கொடுக்கல்வாங்கல் அடிப்படையில் உச்ச அளவில் மற்றும் மொத்த திரும்பலை அதிகரித்தல்.

6. நிறுவனரீதியான விசேட நிருவாக தொழிற்பாட்டு வரையறைஇ தொகுதி மற்றும் விதிமுறைகளை விருத்தி செய்தல்.

7. ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நோக்குக்கு (UN SDGS) மற்றும் அதற்கு ஏற்றவகையில் கொழும்பு துறைமுகத்தை பசுமையான மற்றும் நிலைபேறான நிலையினை அடைந்துகொள்ளல்.

நிறுவன ரீதியான குறிக்கோள்கள் மற்றும் நீண்டகால குறிக்கோள்களை அடையும் பொருட்டு எடுக்கப்படவுள்ள உத்திகள் கீழ்வருமாறு;

சந்தையை கைப்பற்றிக்கொள்வதற்கான மூலோபாயங்கள்

அபிவிருத்தி, இயக்கம் மற்றும் விற்பனை ஆகிய பிரிவுகள் தொடர்பாக அதிகூடிய கவனம் செலுத்துவதனூடக தற்போதுள்ள சந்தையினால் பெற்றுக்கொடுக்கப்படும் துறைமுக சேவைகள் தொடப்பான சந்தை பங்குகளின் வளர்ச்சியை அதிகரிப்பது இந்த உத்திகளின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த உத்திகளினுள் மூன்று வழிமுறைகள் உள்ளடங்கியுள்ளன

- மீள் ஏற்றுமதி மைய நிலைய மூலோபாயம்
- சேவை வழங்கல் மைய மூலோபாயம்
- பசுமையான மற்றும் நிலைபேறான துறைமுக மூலோபாயம்

உற்பத்தி/ சேவை அபிவிருத்தி மூலோபாயம்

இது இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு தனது தற்போதைய உற்பத்தி மற்றும் / அல்லது துறைமுக சேவைகளை மேம்படுத்துவதன் ஊடாக அல்லது நவீனமயப்படுத்தல் மூலம் வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகள்.

பல்வகைப்படுத்தலிற்கான வழிமுறைகள்

இலங்கை துறைமுக அதிகாரசபை அதன் இயக்கங்கள் தற்போதைய சந்தை மற்றும் சேவையை தாண்டிய செயற்பாடுகளை முன்னெடுத்த போதிலும் தற்போதுள்ள வலையமைப்பு பெறுமதியை சாத்தியவளத்தின் ஊடாக இயக்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது.

ஒத்துழைப்புக்கான மூலோபாயங்கள்

பிற நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் கடல்சார் மற்றும் சேவை வழங்கல் துறையினுள் போட்டித்தன்மையான அனுகூலத்தை பெற்றுக்கொள்வதற்கான மூலோபாயங்களாகும். கீழ்வரும் ஒத்துழைப்புக்கான மூலோபாயங்கள் பயன்படுத்த முடியும்

- மூலோபாயமாக கூட்டமைத்தல்
- பரஸ்பர சேவைகளின் கூட்டமைப்புக்கள்
- அரச – தனியார் கூட்டுரிமை

வெளிவாரியாக பயன்படுத்தும் மூலோபாயங்கள்

கீழ்காணும் காரணிகள் மீது அடையாங்கண்டு கொண்ட பணிகளை வெளிவாரியாக செயற்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை தீர்மாணித்துள்ளது.

- ஆகு செலவு உற்பத்தித்திறனை அதிகரித்தல்
- ஏனைய வியாபாரங்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல்
- சேவை வழங்குனர்களுக்கு தரமான சேவையை பெற்றுக்கொடுத்தல்

மேற்குறிப்பிட்ட நிறுவனரீதியான நோக்கங்கள் மற்றும் மூலோபாயங்கள் மீது அடிப்படையாகக் கொண்ட குறுகிய கால மற்றும் நீண்டகால குறிக்கோள்களை அடைந்துக்கொள்ளும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் பல்வேறுப்பட்ட பகுதியளவிலான உத்திகள் மற்றும் இயக்க மூலோபாயங்கள் பயன்படுத்தப்படுகின்றது.

துறைமுக இயக்க செயற்பாடுகளை ஒன்றுடன் ஒன்று தொடர்புப்படுத்தி தீர்மானங்கள் மேற்கொள்ளும் இணக்கப்பாட்டு தன்மையை பேணிச் செல்வதற்கு தொடர்பாக்கிக் கொள்ளும் பொருட்டு சமனான மதிப்பீட்டு இயக்க கோட்பாடு எனக் கருதப்படுகிறது.

நிலைபேறான தன்மை

துறைமுகத்தின் அனைத்து இயக்க நடவடிக்கைகளினதும் மையமாக அமைவது நிலைபேறான அபிவிருத்தியாகும்

பசுமை துறைமுகம்

அனைத்து துறைமுகங்களினதும் கவர்ச்சிகரமான நோக்கு எல்லை சூழலுக்கு உகந்த சுற்றாடல் ஆகும்.

புதிய கண்டுபிடிப்புக்கள்

மூலோபாய நோக்கங்களை அடையும் பொருட்டு நவீன வியாபார மாதிரிகளை அபிவிருத்திக்கு பயன்படுத்தல் புதிய கண்டுபிடிப்புகளாகும்

தொழில் முயற்சி

மாற்று வியாபார வழிமுறை செயற்பாட்டின் ஆனகூலம் தொடர்பாக பின்பற்ற முடியுமான சந்தர்பங்களை ஆராய்தல்

வலையமைப்பு தொடர்பாக

வாடிக்கையாளர்களுடனான பல்மாதிரியானதும் ஆரம்ப செயற்பாடு மிக்கதுமான தொடர்பாடலை ஏற்படுத்தி பெறுமதியான பங்காளர்களை உருவாக்குதல்

உற்பத்தித்திறன்

இலங்கை துறைமுக அதிகார சபையின் சொத்துக்கள், முதலீடுகள் மற்றும் வளங்களை உன்னதமாக பயன்படுத்துதல்.

தரவுகள் தயாரித்தல்

அனைத்து மட்டத்திலும் பயனாளிகளின் உரிமம் மற்றும் தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு குறித்த மற்றும் காலத்திற்கான தகவல்கள் முன்னுரிமை பெறுகின்றன

செயற்திறனான முகாமைத்துவம்

அனைத்து முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களுக்கிடையில் அந்நியோந்நிய ஒத்துழைப்பான தொடர்பொன்று உருவாகும் வகையில் சிறந்த அனுபவங்கள் கொண்ட திறமையான ஊழியர்களை தக்கவைத்துக் கொள்ளும் தந்திரோபாய நோக்கத்திற்காக அனைத்து ஊழியர்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளனர்.

இலாபம் பங்களிப்பு

அனைத்து செயற்பாடுகளும் முழுமையான நிதி கணிப்பீட்டுடன் முன்னெடுத்து நிலையான தன்மை மற்றும் வளர்ச்சியை உறுதிப்படுத்தப்படுகிறது.

அபிலாசைகள்

ஒட்டுமொத்த இயக்க பணிகள் தொடர்பாக சரியான நோக்குடன் கூடிய கடமைகளுக்கு முன்னுரிமை வழங்கும் குழு உணர்வுடன் செயற்படும், புதிய கருத்துக்களிற்கு முன்னுரிமை வழங்கும் தலைமைத்துவத்துடன் கூடிய செயற்பாட்டு திறன் கொண்ட நிறுவனமொன்றை கட்டியெழுப்புதல்.

ஒருங்கிணைப்பு

எந்தவொரு நிலையிலும் போட்டித்தன்மையான கட்டணத்தின் கீழ் உயர் தரத்திலான சேவைகள் வழங்கும் பொருட்டு சாதாரணமான, உண்மையான மற்றும் தொழிற் தரத்தில் செயற்படுதல்.

ஒத்துழைப்பு

கூட்டிணைந்த, பயனுறுதியான மற்றும் தனியார் தொடர்புகளின் வளர்ச்சியான திறந்த மற்றும் விருந்தோம்பல் சூழலை உருவாக்குவதற்கு முயற்சித்தல்.

இலங்கை துறைமுக அதிகாரசபை 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் ஏற்பாடுகளின் மீது 1979.08.01 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டு பின்னர் 1984 இன் இல. 07 மற்றும் 35 ஆம் சட்டங்களின் ஊடாக திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 6 (1) பிரிவில் அதன் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் பின்வருமாறு வரைவிலக்கனம் அளிக்கப்பட்டுள்ளன.

- கப்பல் சுமை நடவடிக்கைகள், கப்பல்களில் ஏற்றல் இறக்கல் மற்றும் மீள் ஏற்றல், பயணிகள் தரையிறக்கல், குதங்களிடுதல், வாப்பு நடவடிக்கைகள், கலங்களுக்குத் தேவையான நீர், எரிபொருள் மற்றும் மின்சாரம் வழங்கல், பெற்றோலிய எண்ணெய் உற்பத்திகள், உராய்வு நீக்கிகள், கலங்களுக்கும் கலங்களில் இருந்து வத்தைகளுக்கும் களஞ்சியங்களுக்கும் இடையில் போக்குவரத்து செய்தல், கலங்களின் வழிகாட்டிப் பணிகள், நங்கூரமிடப்படுதல், நீர் மூழ்குதல் மற்றும் நீருக்கடியிலான கப்பல் பழுதுபார்த்தல் தொடர்பில் திறன்மிகு தொடர்ச்சியான சேவை மற்றும் அதற்கான துணை சேவைகளை வழங்கல்.

- திறன்மிகு நிலையான ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவை வழங்கல்.

- துறைமுக எல்லைகளினுள்ளும் துறைமுகங்களினது உட்புகு வழிகளிலும் கப்பலோட்டம் ஒழுங்குபடுத்தல் மற்றும் நிர்வாகம்.

- துறைமுக நிறுவுதல்களைப் பராமரித்தல் மற்றும் அவைகளின் பாவனைகளை மேம்படுத்தல் குறிப்பிட்ட துறைமுகங்களினுள் மேம்படுத்தலும் விருத்தி செய்தலும்

- ஏதாவது விசேட துறைமுகமொன்றினுள் சுங்க திணைக்களப் பணிகள் தவிர்ந்த ஏனைய சகல நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தலும் முறைப்படுத்தலும்.

- விசேட துறைமுகங்களினுள்ளும் அதன் வெளியேயும் கப்பலோட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலங்களுக்கு வழிகாட்டலும் பாதுகாப்புக்குத் தேவையான வெளிச்சங்கள் மற்றும் வேறு தேவைப்பாடுகளை இலங்கை கடற்கரையில் மற்றும் அதற்கப்பால் நிறுவுதலும் பராமரித்தலும்.

- துறைமுக அதிகாரசபை சட்டத்தின் மீது ஒப்படைக்கப்படும் வேறோதாவது அலுவல்களை நிறைவேற்றுதல்.

- சொத்துக்கள் மீள் முதலீடு செய்யப்படுவதற்கும் புதிய முதலீடுகள் ஏற்படுத்தப்படுவதற்கும் போதுமான பொது சேமிப்பு நிதியமொன்றை ஏற்படுத்தி,பராமரித்து செல்லப்படுவதற்காகவும்,அதிகாரசபையின் வருமானத்திற்கு கொடுக்கப்படுவதற்கான தகுந்த கட்டணம் செலுத்தப்படுவதற்கும்,போதுமான வருமானத்துக்கு குறையாத வருமானம் அதிகாரசபைக்கு கிடைக்கும் வண்ணம் அதிகாரசபையின் பணிகளை நடாத்திச் செல்லல். மேற்கூறப்பட்டுள்ளவாறு அதிகாரசபையினால் வழங்கப்படும் சேவை தொடர்பிலான கட்டணங்களை சம்பந்தப்பட்ட சட்டத்திற்கேற்றவாறு அறவிட்டுக்கொள்ளுதல்.

- சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக குறிப்பிட்ட துறைமுகங்கள் மற்றும் ஒவ்வொரு துறைமுகமும் நிதி அடிப்படையில் தன்நிறைவான திட்டமொன்றை முகாமைத்துவம் செய்வதற்கு முயற்சித்தல்.

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 5 (1) பிரிவின் பிரகாரம் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படும் 09 பணிப்பாளர்கள் துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையில் உள்ளடங்கப்பட்டிருப்பர்.

தலைவர், பிரதான நிறைவேற்றுனராக இருப்பதுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முழு நிர்வாகத்திற்கும் பொறுப்பாக இருப்பார்.

கப்பல்களின் வருகை (சகல துறைமுகங்களினதும்)

விபரம்	2021	2022	வித்தியாசம் (%)
கொழும்பு துறைமுகம்	3,675	3,648	-0.7
காலி துறைமுகம்	14	7	-50.0
திருகோணமலை துறைமுகம்	117	95	-18.8
ஹம்பாந்தோட்டை துறைமுகம்	374	323	-13.6
மொத்தம்	**4,180**	**4,073**	**-2.6**

கொள்கலன் கையாளல் கொள்ளளவு (இருபது சம அலகுகள்) கொழும்பு துறைமுகம்

விபரம்	2021	2022	வித்தியாசம் (%)
இலங்கை துறைமுக அதிகாரசபை (SLPA)			
இறக்குமதி	162,388	127,499	-21.5
ஏற்றுமதி	158,733	128,819	-18.8
மாற்றியேற்றல்	1,846,264	1,633,176	-11.5
மீள் அடுக்குதல்	30,949	36,401	17.6
மொத்தம்	**2,198,334**	**1,925,895**	**-12.4**
சவுத் ஏசியா கேட்வே டர்மினல்ஸ் (SAGT)			
இறக்குமதி	136,824	117,773	-13.9
ஏற்றுமதி	128,461	111,938	-12.9
மாற்றியேற்றல்	1,521,373	1,481,563	-2.6
மீள் அடுக்குதல்	52,035	40,962	-21.3
மொத்தம்	**1,838,693**	**1,752,236**	**-4.7**
கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (CICT)			
இறக்குமதி	303,223	263,068	-13.2
ஏற்றுமதி	309,426	281,133	-9.1
மாற்றியேற்றல்	2,482,410	2,520,946	1.6
மீள் அடுக்குதல்	117,272	118,906	1.4
மொத்தம்	**3,212,331**	**3,184,053**	**-0.9**
கொழும்பு துறைமுகம்			
இறக்குமதி	602,435	508,340	-15.6
ஏற்றுமதி	596,620	521,890	-12.5
மாற்றியேற்றல்	5,850,047	5,635,685	-3.7
மீள் அடுக்குதல்	200,256	196,269	-2.0
மொத்தம்	**7,249,358**	**6,862,184**	**-5.3**

கப்பற்சரக்குகள் கையாளல் (சகல துறைமுகங்களினதும்)

விபரம்	2021	2022	வித்தியாசம் (%)
மொத்த கப்பற்சரக்கு கையாளல் பரிமாணம் (மெ.தொ.மி)	109.0	100.4	-7.9

கொழும்பு துறைமுகத்தில் இறக்கப்பட்ட கப்பற்சரக்குகள்- இலங்கை துறைமுக அதிகாரசபை (ஆயிரம் தொன்களில்)

விபரம்	2021	2022	வித்தியாசம் (%)
கொள்கலனிலிடப்பட்டவை	14,935	13,607	-8.9
தொகை பிரிப்பு	854	262	-69.3
உலர் மொத்தம்	3,141	1,652	-47.4
திரவ மொத்தம்	4,679	3,945	-15.7
மொத்தம்	**23,609**	**19,466**	**-17.5**

கொழும்பு துறைமுகத்தில் ஏற்றப்பட்ட கப்பற்சரக்குகள்- இலங்கை துறைமுக அதிகாரசபை (ஆயிரம் தொன்களில்)

விபரம்	2021	2022	வித்தியாசம் (%)
கொள்கலனிலிடப்பட்டவை	13,198	11,865	-10.1
தொகை பிரிப்பு	4	2	-50.0
உலர் மொத்தம்	0	0	-
திரவ மொத்தம்	551	389	-29.4
மொத்தம்	**13,753**	**12,256**	**-10.9**

கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற்சரக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபை (ஆயிரம் தொன்களில்)

விபரம்	2021	2022	வித்தியாசம் (%)
கொள்கலனிலிடப்பட்டவை	28,133	25,472	-9.5
தொகை பிரிப்பு	858	264	-69.2
உலர் மொத்தம்	3,141	1,652	-47.4
திரவ மொத்தம்	5,230	4,334	-17.1
மொத்தம்	**37,362**	**31,722**	**-15.1**

திருகோணமலை துறைமுகத்தில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

விபரம்	2021	2022	வித்தியாசம் (%)
இறக்கப்பட்டது	3,052	1,913	-37.3
ஏற்றப்பட்டது	138	176	27.5
மொத்தம்	**3,190**	**2,089**	**-34.5**

காலி துறைமுகத்தில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

விபரம்	2021	2022	வித்தியாசம் (%)
இறக்கப்பட்டது	106	1	-99.1
ஏற்றப்பட்டது	0	0	-
மொத்தம்	**106**	**1**	**-99.1**

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

விபரம்	2021	2022	வித்தியாசம் (%)
இறக்கப்பட்டது	1710	1584	-7.4
ஏற்றப்பட்டது	539	532	-1.3
மொத்தம்	**2249**	**2116**	**-5.9**

மொத்த ஊழியர் தொகை

விபரம்	2021	2022	வித்தியாசம் (%)
கொழும்பு துறைமுகம்	8,287	7,838	-5.4
திருகோணமலை துறைமுகம்	381	363	-4.7
காலி துறைமுகம்	331	315	-4.8
மொத்தம்	**8,999**	**8,516**	**-5.4**

சகல துறைமுகங்களும்

(ரூபா மில்லியன்)

விபரம்	**2022**	**2021**	**வித்தியாசம் (%)**
வருமானம் மற்றும் செலவினம்			
மொத்த வருமானம்	99,073.9	60,606.4	63.5
செலவினம்	(43,838.7)	(32,935.8)	(33.1)
வெளிநாட்டு கடன் மீதான வட்டி மற்றும் அந்நிய செலாவணி கிடைக்கப்பெறுதல்கள் /நட்டங்களுக்கு முன்னரான இலாபம் /(நட்டம்)	**55,235.2**	**27,670.6**	**99.6**
வெளிநாட்டுக் கடன் மீதான வட்டி	(2,400.3)	(799.6)	(200.2)
அந்நிய செலாவணி (நட்டம்) / கிடைக்கப்பெறுதல்	4,190.9	(1,269.7)	430.1
வரிக்கு முன்னராக மற்றும் அந்நிய செலாவணி கிடைக்கப்பெறுதல்/(நட்டம்) பின்னரான இலாப /(நட்டம்)	**57,025.8**	**25,601.3**	**122.7**
வரிகள்			
வருமான வரி	(13,261.1)	(2,676.3)	(395.5)
மாறுபடும் வரி	(445.5)	(2,229.8)	80.0
ஒன்றினைந்த நிதிக்கான பங்களிப்பு	(1,000.0)	-	(100.0)
வரி ஏற்பாடுகளின் பின்னரான தூய இலாப/ (நட்டம்)	**42,319.2**	**20,695.3**	**104.5**
ஐந்தொகை			
நடைமுறை சாராத சொத்துக்கள்	576,363.4	396,375.5	45.5
நடைமுறை சொத்துக்கள்	151,915.1	96,245.7	57.8
நடைமுறை பொறுப்புக்கள்	44,685.4	24,698.9	(80.9)
திணிவு மற்றும் ஏனைய மூலதனம்	7,591.4	7,591.4	-
ஒதுக்கீடும் ஏற்பாடுகளும்	542,880.3	362,542.1	49.7
நடைமுறை சாராத பொறுப்புக்கள்	133,394.4	97,788.9	(36.4)
விகிதம்			
வருமானத்திற்கான இயக்க இலாபம்	51.9	43.0	
வருடாந்த வருமான வளர்ச்சி	63.5	15.1	
மூலதனமிடலின் மீதான இலாபம்	8.6	6.9	

கௌரவ நிமல் சிரிபால த சில்வா
துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

மற்றும்

கௌரவ பிரேமலால் ஜயசேகர
துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர்

பகுப்பாய்வு

பல சவால்களுக்கு முகங்கொடுத்த 2022 ஆண்டு தொடர்பாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் நிதி அறிக்கை சமர்பிக்க முடிந்தமை தொடர்பாக நான் மகிழ்ச்சியடைகின்றேன். வருடத்தினுள் முகங்கொடுத்த எதிர்பாராத தடைகளை பொருட்படுத்தாது பங்குதாரர்களின் திருப்திக்காக தமது இலக்கினை அடைந்துகொண்டு நிலைபேரான முன்னேற்றமொன்றினை அடைந்துகொள்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை ஆற்றல் பெற்றுள்ளது.

2024 ஆம் ஆண்டு ஆகும் போது கையாளும் கொள்திறனை விஸ்தரிக்கும் நோக்கத்துடன், ஜய கொள்கலன் முனைய செயல் திட்டத்தை துரிதப்படுத்துவதன் ஊடாக 2022 ஆம் ஆண்டில் எமது கையாளும் கொள்திறனை விஸ்தரிப்பதில் கூடிய கவனம் செலுத்தினோம். தற்போது கிழக்கு கொள்கலன் முனையம் பகுதியாக கையாளல்கள் முன்னெடுக்கப்படுவதோடு, நவீன துறைமேடை பாரம் தூக்கிகளை நிறுவியதுடன் ஜய கொள்கலன் முனையத்தில் தற்போது நங்கூரமிடப்பட முடியாத அதிவிசாலமான கப்பல்களை கவர்ந்துகொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம். கிழக்கு கொள்கலன் முனையத்தில் இயக்கங்கள் ஆரம்பிக்கப்படுதள் மூலம் ஆழமான துறைமுகமொன்றாக கொழும்பு துறைமுகத்தின் கவர்ச்சித் தன்மை அதிகரிப்பதோடு, எதிர்கால சந்தைப்பங்கும் விஸ்தரிக்கப்படும்.

இலங்கை துறைமுக அதிகாரசபை நவீன தொழிநுட்பத்திற்கு இசைவடைவதற்கு விசேட முயற்சிகளை மேற்கொண்டுள்ளதோடு, துறைமுக இயக்கங்களின் செயற்திறனை அதிகரித்தல் மற்றும் தொடர்ச்சியான போக்கினை உறுதிசெய்வதற்காக டிஜிடல் மயப்படுத்துவதனை ஆரம்பித்துள்ளது. சவாலான கால எல்லையினுள் பொருத்தப்பாடு மற்றும் தகவல்களை டிஜிடல் மயப்படுத்துதல் சமுத்திர போக்குவரத்து இயக்கங்களை தொடர்ச்சியாக பேணுவதற்காக மிகவும் முக்கியமானதென்பது உறுதியாகியது. வர்த்தக நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்கும் வர்த்தக செயற்பாட்டின் நன்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கும் இது ஏதுவானது மாத்திரமன்றி வழுக்கள் நிகழுவதன் அவதானம் குறைவடைவதற்கும் மற்றும் முறைகேடுகள் ஏற்படாதிருப்பதற்கும் காரணமாகியது.

2022 ஆம் ஆண்டின் நிதி செயலாற்றுகை

இலங்கை துறைமுக அதிகரசபையில் கடந்த ஆண்டில் ரூபா 24.9 பில்லியன் இயக்க இலாபத்துக்கு ஒப்பாக 2022 ஆம் ஆண்டில் ரூபா 47.2 பில்லியன் இயக்க இலாபமொன்று அறியப்பட்டது. 2021 ஆண்டில் ரூபா 60.6 பில்லியன் மொத்த வருமானத்துடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் ரூபா 99.1 பில்லியன் ஆனதோடு, அது ரூபா 38.5 பில்லியன் அதிகரிப்பாகும். 2021 ஆம் ஆண்டில் ரூபா 32.9 பில்லியன் அந்நிய செலாவணி இலாபம்/ நட்டம் மற்றும் வெளிநாட்டுக்கடன் வட்டி மற்றும் வரிகளுக்கு முன்னரான மொத்த செலவுடன் ஒப்பிடும் போது 2022 ஆண்டில் அது ரூபா 43.7 பில்லியனாவதோடு, அது 33% அதிகரிப்பாகும்.

இலங்கை ரூபாவின் பெறுமதி குறைவடைவதன் காரணமாக முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன் மீது வட்டி 200% ஆல் அதிகரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் அந்நிய செலாவணி நட்டமான ரூபா 1.27 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் அந்நிய செலாவணி இலாபம் ரூபா 4.19 பில்லியனாகியது.

அமெரிக்க டொலருக்கு ஒப்பாக இலங்கை ரூபாவின் பெறுமதி குறைவடைந்ததன் காரணமாக இலங்கை துறைமுக அதிகாரசபை 2021 ஆம் ஆண்டில் ரூபா 20.7 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 42.3 பில்லியன் வரிகளுக்கு பின்னரான தேறிய இலாபமொன்று அறியப்பட்டுள்ளது.

துறைமுக இயக்கங்கள் மற்றும் சேவை வழங்கல்கள் செயலாற்றுகை

2022 ஆம் ஆண்டில் பல சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு நேர்ந்தது. எவ்வாறாயினும், நிலையற்ற அரசியல் தன்மை மூலம் தீவிரமடைந்த கடினமான உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார நிலைமைக்கிடையே இலங்கை துறைமுக அதிகார சபையின் முனையங்களுக்கு, அவற்றின் சாதாரண கையாளல் கொள்திறனை பேணிச்செல்வதற்கு, அதேபோன்று ஆக்கத்திறன் மட்டத்தினை பேணிச் செல்வதற்கும் ஆற்றல் பெற்றுள்ளது. 2022 ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட பிரைம் ரூட் ஒப்டிமைசேசன் மாதிரி மற்றும் எஸ்பேர்ட் டெகின் ஒப்டிமைசேசன் மாதிரியின் நான்கு கட்டங்கள் மூலம் சொத்துக்களை திட்டமிடல் விதிமுறைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் தாமதமின்றி அமுல்படுத்தப்பட்டுள்ளது. இம்மாதிரிகள் மூலம் ஜயகொள்கலன் முனையத்தின் உபகரணங்கள் பயன்பாட்டை உயர்மட்டத்தில் பேணிச்செல்லக் கூடியதாக இருந்ததோடு, அதன் மூலம் நாளாந்த இயக்க ஆகுசெலவு குறைந்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்கள் மூலம் கொள்கலன்கள் இருபதின் சம அலகு 1,925,895 வருடாந்த கையாளல் கொள்ளளவு அறியப்பட்டுள்ளது. வலயத்தின் முனையங்கள் குறிப்பிடத்தக்க விதத்தில் பின்னடைவு காட்டப்பட்டுள்ள கப்பலோட்டத் தொழிலில் பின்னடைவொன்று காட்டும் நிலையில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்களில் கையாளல் கொள்ளளவு சாதாரண முறையில் பேணிச்செல்ல முடிந்துள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்களின் சாதாரண உற்பத்தித் திறன் அதீத வளர்ச்சியொன்று அறியப்பட்டிருந்த போது, 2022 ஆண்டில் பிரதான கப்பல் கம்பனிகளில் கப்பல்களின் ஆக்கத்திறன் மணிக்கு இயக்கங்கள் (MPH) 23.3 ஆனதோடு, அது கடந்த வருடத்துக்கு ஒப்பாக 2.6% வளர்ச்சியொன்றினை குறிப்பிட முடியும். 2022 ஆம் ஆண்டில் ஊட்டக் கப்பல்கள் மணிக்கு 20.99 கையாளல்கள் அறியப்பட்டதோடு, அது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 4.9% வளர்ச்சியொன்றாகும்.

2022 ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பூரண கொள்கலன்கள் இருபதின் சம அலகு 101,477 நேரடியாக ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, 48 மணித்தியாளத்திற்குள் பகுதி நிரம்பிய அனைத்து கொள்கலன்கள் தரையிறக்குதல் முன்னணி செயலாற்றுகை சுட்டி மட்டத்தினை அடைந்து கொண்டு, பகுதி நிரம்பிய கொள்கலன்கள்/ பல்வேறு நாடுகளுக்குரிய மீள் ஏற்றுமதி கொள்களன்கள் இருபதின் சம அலகு 19,156 தரையிரக்கப்பட்டுள்ளது. இலத்திரனியல் ஆவணங்கள் சமர்பித்தல், இலத்திரனியல் முறையில் செலுத்தல்கள் மேற்கொள்ளல், பொறுப்படைக்கும் வாயில் அனுமதிப்பத்திரங்கள் இலத்திரனியல் வழியாக விடுவித்தல் மற்றும் இலத்திரனியல் வழியாக கட்டளைகள் ஒப்படைத்தல் ஊடாக சேவைகள் வழங்கும் செயல்பாடு டிஜிடல் மயப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையினால் களஞ்சியப்படுத்தும் பரிமாணத்தை அதிகரித்து மற்றும் ட்ரோலர் அடிப்படையில் கொள்கலன்களில் பொதி செய்தல்/ கொள்கலன்களை வெற்றாக்கும் நடவடிக்கைகள் மற்றும் நவீனமயப்படுத்தப்பட்ட அலுவலகத்துடன் கூடிய பண்டாரநாயக்க மேடையின் களஞ்சியத் தொகுதியை புதுபிக்கும் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படுகின்றன. புதிய அதிவேக சேவையொன்று கொள்கலன்கள் கையாளும் நிலையம் I இல் (CFS – 1) முதல் தர கப்பல் முகவர்களின் பகுதி நிரம்பிய கொள்கலன்கள் 24 மணித்தியாலங்கள் பூராகவும் கையாளல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுகத்தில் சேவைகள் வழங்கும் வசதிகளை விஸ்தரிப்பதற்காக ஐக்கிய கொள்கலன் முனையம், புளுமென்டல்

பல்நோக்கு களஞ்சிய தொகுதி மற்றும் துறைமுக நகர வளாகத்தின் அருகாமையிலுள்ள நவீன களஞ்சிய தொகுதி போன்ற அபிவிருத்தி செயல் திட்டங்கள் அமுலில் உள்ளன.

கொழும்பு துறைமுக இயக்க கொள்திறனை விஸ்தரித்தல்

கிழக்கு கொள்கலன் முனையம் - இலங்கை துறைமுக அதிகாரசபை தற்போது 600 மீட்டர் நீளமாக மேடைச் சுவரொன்றை தற்போது நிர்மாணித்து நிறைவு செய்துள்ளதுடன், 20 மீட்டர் ஆழமான நங்கூரத்தளங்கள் உள்ளடங்கிய எஞ்சிய 720 மீட்டர் நீளமான மேடை சுவரை நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டளவில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பூரண உரித்துடன் கூடிய கொள்கலன் முனையமொன்றாக இயக்கும் நோக்கோடு கிழக்கு கொள்கலன் முனையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை கட்டங்களாக முன்னெடுக்கப்படுகின்றது. இம்முனையத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடையும் பொழுது மூன்று பாரிய கொள்கலன் கப்பல்களை கையாளக் கூடிய 1320 மீட்டர்கள் நீளமான மேடைச் சுவரொன்று 72 ஹெக்டேயார் பரப்பளவினைக் கொண்ட துறைமேடை மற்றும் கொள்கலன்கள் இருபதின் சம அலகு 3.0 மில்லியன் வருடாந்த கொள்ளளவை கொண்டுள்ளது. கிழக்கு கொள்கலன் முனையத்தை பூரணமாக தன்னியக்க முனையமாக்குவதற்காக கப்பலிலிருந்து கரைவரை கையாளல் முன்னெடுக்கின்ற பாரந்தூக்கிகளை பயன்படுத்தும் பொருட்டான உயரத்தை கொண்ட ஸ்ரெடல் கெரியஸ் மற்றும் புகையிரத பீலி மீது பொருத்திய தன்னியக்க பாரந்தூக்கி பகுதியான தன்னியக்க நிலைக்கு மாற்றுவதற்கு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேற்கு கொள்கலன் முனையம் - இலங்கை துறைமுக அதிகாரசபை Adani Ports and Special Economic Zone Limited கம்பனி மற்றும் அதன் உள்நாட்டு தரப்பினரொருவரான John Keells Holdings PLC கம்பனிக்கிடையே கூட்டு வியாபாரமொன்றாக 35 ஆண்டு காலத்திற்கு நிர்மாணித்து, இயக்கி கையளிக்கும் அடிப்படையின் கீழ் அரச – தனியார் கூட்டுரிமை செய்திட்டமொன்றாக மேற்கு கொள்கலன் முனையம் - I ஐ அபிவிருத்தி செய்யும் பொருட்டு மார்ச் மாதம் 1 ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. செய்திட்டத்திற்கான முனைய இயக்குனராக களம்பு வெஸ்ட் இண்டர்நெஷனல் டர்மினல் தனியார் கம்பனி எனும் பெயரில் கம்பனியொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. நிர்மாணித்து, இயக்கி கையளிக்கும் ஒப்பந்தம் 2021 செப்தெம்பர் 30 ஆம் திகதி அமுல்படுத்தப்பட்டதோடு, அதனை நடைமுறைப்படுத்தும் திகதி 2021 செப்தெம்பர் 30 ஆம் திகதியாக அறியப்பட்டது. வேலைத்தள குத்தகை வாடகை ஒப்பந்தம், பங்குரிமை ஒப்பந்தம் மற்றும் கடன் வழங்கும் நிறுவனத்தின் நேரடி ஒப்பந்தம் 2022 பெப்ரவரி 25 ஆம் திகதி அமுல்படுத்தப்பட்டது. மேற்கு கொள்கலன் முனையம் I இன் நிர்மாணப் பணிகள் 2022.11.09 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

ஜயா கொள்கலன் முனையம் - V குறைந்த கரையோர ஆழம் 15 மீட்டரான 300 மீட்டர்களை விட நீளமான இரு கப்பல்களுக்கு இடவசதிகளை வழங்கும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஜயா கொள்கலன் முனையத்தின் -IVவது கொள்கலன் மேடைச் சுவரை 120 மீட்டர்களினால் நீளமாக்கப்படுகிறது. செய்திட்டத்தின் மொத்த ஆகுசெலவு ரூபா 6,374 மில்லியன்களாகும்.

வெளியக துறைமுக அபிவிருத்தி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் வெளியக துறைமுக பொது செயற்பாடுக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் விசேட கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் துரிதமாக்கப்படுகின்றது. காங்கேசன்துறை துறைமுகத்தை வணிக துறைமுகமொன்றாக இயக்குவதற்கு அதன் அலைதாங்கி மற்றும் பாலங்களை மீளமைத்தல், புதிய வணிக துறைமுகமொன்று, நங்கூரதளமொன்று நிர்மாணித்தல் உள்ளடங்கலான பொது செயற்பாட்டு வசதிகள் தொடர்பாக இந்தியாவின் எக்சீம் வங்கி அமெரிக்க டொலர் 45 மில்லியன் நிதியுதவி

வழங்கியுள்ளது. இதன் திட்டங்கள் மற்றும் ஆலோசனை சேவைகள் தொடர்பாக இலங்கை துறைமுக அதிகாரசபை செய்திட்ட முகாமைத்துவ ஆலோசனை ஒப்பந்தமொன்று ஏற்படுத்திக்கொண்டுள்ளது. இதன் நிர்மாணப் பணிகள் 2023 இல் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், எல்லை தாண்டிய அகுசெலவினை ஈடுசெய்வதற்காக கடன் வசதிகளை அதிகரித்துக்கொள்வதற்கான அங்கீகாரத்தை எதிர்பார்த்துள்ளது. காங்கேசன்துறை துறைமுகத்தை அடுத்துள்ள 50 ஏக்கர் காணியை கையேற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது.

பயணிகள் கப்பல் இயக்குனரொருவரால் செயற்படுத்தப்படும் பயணிகள் கப்பல் சேவையொன்று காங்கேசன்துறை துறைமுகத்தில் 2023 மே மாதம் முதல் ஆரம்பிப்பதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை திட்டமிட்டுள்ளது. இலங்கை கடற்படையின் ஒத்துழைப்புடன் இத்திட்டத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் கொண்ட முனைய கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஈட்டிய நிதி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகம் தொழிநுட்ப துறைமுகமொன்றாக அபிவிருத்தி செய்யப்படுவதோடு, தற்பொழுது மட்கோவில் அமைந்துள்ள பொறியியல் நிருவாக கட்டிட தொகுதியை அவ்விடத்திலிருந்து அகற்றி பிரதான நிருவாக கட்டிடத்தில் மீளமைக்கும் திட்டங்களை இலங்கை துறைமுக அதிகாரசபை தயாரிக்கின்றது.

காலி துறைமுகத்தை வணிக துறைமுகமொன்றாக தமது பணிகளுக்கு இணையாக சுற்றுலா தொழில் சார்ந்த துறைமுகமொன்றாக அபிவிருத்தி செய்யப்படுகின்றது. ஆழமான பயணிகள் கப்பல் முனையம், அலைதாங்கி மற்றும் ஏனைய வசதிகளை நிர்மாணிப்பது துறைமுக திட்டத்தினுள் உள்ளடங்குகின்றது. இச்செய்திட்டத்தின் நோக்கமாக கொண்டிருப்பது தனியார் துறையின் முதலீடுகளை கவர்ந்துகொள்வது மற்றும் நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்துவதோடு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்வதாகும். இச்செய்திட்டத்திற்கான அபிப்பிராயம் தெரிவித்தல் வழங்கப்பட்டுள்ளதோடு தற்பொழுது முதலீட்டாளர்களின் பெயர்கள் சிறு பட்டியல்படுத்தப்படுகிறது. காலி துறைமுகத்தின் அபிவிருத்தி பணிகள் மூலம் வலயத்தில் துரித பொருளாதார வளர்ச்சியொன்று ஏற்படுவதற்கும் பொழுபோக்கு மற்றும் காணி அபிவிருத்திக்கான சந்தர்பங்களை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

டிஜிட்டல் மயமாக்கல் மூலமாக செயற்திறனை அதிகரித்தல் மற்றும் அனைத்து தரப்பினர்களையும் ஆக்கப்பூர்வமான ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் இலங்கை துறைமுக அதிகாரசபை ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் உத்தேசித்த துறைமுக தொடர்பாடல் தொகுதியை செயற்படுத்தும் சாத்தியத்தன்மையை ஆராய்யும் ஆய்வொன்றினை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலம் அனைத்து துறைமுகம் சார்ந்த பணிகளை செயற்திறகான முகாமைத்துவம் செய்வதற்கு மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் மற்றும் எதிர்கால தேவைகளை பூர்த்திசெய்துகொள்ளக் கூடிய துறைமுகமொன்றாக கொழும்பு துறைமுகத்தை நிலைநாட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் இரண்டாம் கட்டமாக துறைமுக தொடர்பாடல் தொகுதிக்கு இடைமுகமொன்றை உருவாக்கி அதனை நிதி அமைச்சின் “Single Window” தொகுதியுடன் ஒருங்கிணைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் அபிவிருத்தி தங்கியிருப்பது அதன் தற்போதைய சாத்தியமான வாடிக்கையாளருடன் உறுதியான தொடர்புகளை பேணிச் செல்வதற்கான சாத்தியத்தின் மீதாகும். நாம் எமது பல்வேறு மட்டத்திலுள்ள வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களுடன் தமது தேவைகளை அடையாளங் காண்பதற்கும் மற்றும் அவற்றை நிறைவேற்றிக்கொடுப்பதற்கான வசதிகள் மற்றும் சேவைகளை ஏற்படுத்துவது தொடர்பில்


தொடர்ச்சியாக கலந்துரையாடல்களை நடாத்துகின்றோம். இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்களில் மற்றும் கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் கையாளும் கொள்திறனை விருத்தி செய்வதற்காக, இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவத்தினால் சந்தைப்படுத்துதல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி மூலோபாயங்கள் பலவற்றினை அறிமுகப்படுத்தியுள்ளன. இயக்க நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கும் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையுடனான ஒத்துழைப்பை உறுதி செய்யும் பொருட்டு பிரதான கப்பல் கம்பனிகளுடன் பல முனைய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்களில் இயக்கக் கொள்திறனை அதிகரித்துக்கொள்வதற்காக பூர்வாங்க அறிவித்தலின்றி வருகைதருகின்ற கப்பல்கள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்களுக்கு கவர்ந்துகொள்ளப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டில் எமது பயணப்பாதையில் பல்வேறு எதிர்பாராத சவால்களும் தடைகளுக்கும் முகங்கொடுக்க நேர்ந்த போதிலும், எமது குழு அவற்றினை சிறப்பாக வெற்றிகொண்டு தற்போது அவை அனைத்துக்கும் வெற்றிகரமாக முகங்கொடுத்தது உலகளாவிய ரீதியில் ஸ்திரமான நிலையொன்றினை கடந்து வந்துள்ளது. இவ்விடையூறு மிக்க கால எல்லையினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு ஜய கொள்கலன் முனையம், சவுத் ஏசியாக கேட்வே டேர்மினல் கம்பனி மற்றும் களம்பு இண்டர்நெஷனல் கன்டேனர் டேர்மினல் கம்பனி ஆகிய மூன்று முனையங்களதும் பாரிய ஒத்துழைப்பு கிடைத்துள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் உயர் முகாமைத்துவத்தின் மற்றும் ஒட்டுமொத்த பணிக்குழுவினரின் அர்பணிப்பில் 2022 ஆம் ஆண்டினை வெற்றிகரமான ஆண்டொன்றாக முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்கு எமக்கு ஆற்றல் கிடைத்ததோடு, இச்சவால்கள் கொண்ட கால எல்லையினுள் வழங்கிய தகுந்த வழிகாட்டல் தொடர்பாக குறித்த தலைமைத்துவத்துக்கு எனது இதயபூர்வ நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, இதற்கு முன் முகங்கொடுத்திராத கடினமான கால எல்லையினுள் பெற்றுக்கொடுத்த மதிப்பான வழிக்காட்டல் தொடர்பாக கௌரவ துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர், கௌரவ இராஜாங்க அமைச்சர், அமைச்சின் செயலாளர், அமைச்சின் உத்தியோத்தர்கள் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை பணிப்பாளர் சபைக்கு எனது நன்றிகனை தெரிவிக்கின்றேன்.

இறுதியாக எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் வருடம் பூராகவும் காட்டிய பூரண ஒத்துழைப்பு தொடர்பாக பணிப்பாளர் சபை சார்பில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து ஊழியர்களுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

ஆபத்தான சூழ்நிலையிலிருந்து எமது எல்லைகளை துரிதமாக கடந்து சென்று உலகளாவிய எல்லையினுள் புது நோக்கத்துடன் நாம் புதிய ஆண்டிற்குள் நுழையவேண்டியுள்ளது. உலகளாவிய போட்டித்தன்மையின் முன்னோக்கிய நிலையில் நிலைத்திருப்பதற்கு ஆற்றல் பெறும்வாறு எமது நாட்டின் சமுத்திர நடவடிக்கைகளை மேம்படுத்தி முன்னோடி சமுத்திர கேந்திர நிலையமாக எமது வசதிகளை மேம்படுத்துவதற்கான கோரிக்கையினை நிறைவேற்றிக்கொள்வதற்கு அர்பணிப்புடன் இருப்பதனை இறுதியாக குறிப்பிட விரும்புகின்றேன்.



கீத் டி பேர்னாட்
தலைவர்

கீத் டி பேர்னாட்
தலைவர்

திரு கீத் டி பேர்னாட் அவர்களின் 40 வருடகால செயற்பாட்டுச் சேவைக்காலத்தினுள் நிருவாகப் பிரிவில் பல்வேறு துறைகளில் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான பதவிகளில் 30 வருட கால அனுபவம் பெற்றுள்ளார். இலாபம் திரட்டாத அமெரிக்க உதவி (USAID) யாக நிதி வழங்கும் தனியார் பிரிவின் அபிவிருத்தி திட்டங்களில் சிரேஷ்ட முகாமைத்துவ பதவியில் சேவையாற்றியுள்ளதோடுஇ இலங்கை அச்சக நிறுவனத்தில் பணிப்பாளர் நாயகமாகவும் கடமையாற்றியுள்ளார். இலங்கை காப்புறுதி கூட்டுதாபனத்தில் சாதாரண காப்புறுதி துறையில் முதல் இடம்வகித்த காலப்பகுதியில் அவர் அரசுக்கு சொந்தமான கூட்டுக் காப்புறுதியாளரான இக்காப்புறுதிக் கம்பனியின் இணை முகாமைப் பணிப்பாளராகவும் மற்றும் அதன் இணை நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்/ தலைவராகவும் கடமையாற்றியுள்ளதோடுஇ அரசுக்குரிய நிறுவனங்களின் வழு முகாமைத்துவம் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் உதவிகள் பெற்றுக்கொடுக்கும் பொறுப்புக்கொண்ட அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட அரசாங்க தொழிலுனர் அபிவிருத்தி அமைச்சின் நிபுனத்துவ குழுவின் அங்கத்தவரொருவராகவும் அவர் செயற்பட்டுள்ளார். மேலும்இ அவர் நிதிச் சேவைகள் மற்றும் தொலைத்தொடர்பு பிரிவில் மூலோபாய, வர்த்தக ஒழுங்குபடுத்தல் மற்றும் நோக்கங்களை தயாரித்தல் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் ஆலோசக செயற்பாடுகள் பெற்றுக்கொடுத்துள்ளார்.

திரு பேர்னாட் அவர்கள் பல்வேறு துறைகளின் முன்னனி கம்பனிகளில் மற்றும் அரச பொறுப்புக்கூறுகின்ற கம்பனிகளில் (PLC) பணிப்பாளர் சபையின் பதவிகள் வகித்துள்ளார்.

அவர் பட்டய கணக்கியல் முகாமைத்துவ நிறுவனம் (ஐக்கிய இராஜ்ஜியம்) மற்றும் பட்டய உலகலாவிய கணக்கியல் முகாமைத்துவ நிறுவனத்தின் அங்கத்தவரொருவராவதுடன், பட்டய விற்பனை நிறுவனத்தின் அங்கத்தவரொருவருமாவார். எபர்டீன் இல் ரொபட் கோடன் பல்கலைக்கழகத்தின் எபர்டீன் வணிக பாடசாலையில் வர்த்தக நிருவாகம் தொடர்பான முதுமானிப் பட்டத்தினையும் (MBA) கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளியல் விஞ்ஞானம் தொடர்பான முதுமானிப் பட்டமொன்றினையும் பெற்றுள்ளார். வர்த்தக நிருவாகம் தொடர்பான முதுமானி (MBA) பட்டம் கற்கும் காலத்தினுள் வெளிகாட்டிய நோக்கங்களை வெற்றிக்கொள்ளல், உட்சாகம் மற்றும் படைப்பாற்றல் தொடர்பாக Douglas Gourlay விருதினைப் பெற்றுக்கொள்வதற்கும் அவரால் முடிந்துள்ளது.

திரு. ஜி. யு. கே. அல்கேவத்தகே
உப தலைவர்

திரு. அல்கேவத்தகே அவர்கள் தற்போது இலங்கை துறைமுக அதிகார சபையின் உப தலைவராக பணியாற்றுவதுடன் வ/ப சவுத் ஏசியா கேட்வே டர்மினல்ஸ் தனியார் கம்பனி (SAGT), வ/ப களம்பு இண்டர்நெஷனல் கண்டேனர் டர்மினல் தனியார் கம்பனி (CICT), வ/ப களம்பு வெஸ்ட் இண்டர்நெஷனல் டர்மினல் தனியார் கம்பனி, வ/ப ஹம்பாந்தோட்டை இண்டர்நெஷனல் போர்ட் குரூப் கம்பனி தனியார் நிறுவனம் (HIPG), வ/ப ஹம்பாந்தோட்டை இண்டர்நெஷனல் போர்ட் சர்விசஸ் கம்பனி தனியார் நிறுவனம் (HIPS) மற்றும் வ/ப இலங்கை கப்பற் கூட்டுதாபனம் போன்ற அரசாங்கத்தினால் பட்டியலிடப்பட்ட மற்றும் தனியார் கம்பனிகளின் பணிப்பாளர் சபைகளின் உறுப்பினரொருவராக செயற்படுகின்றார்.

திரு அல்கேவத்தகே அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம் தொடர்பான முதுமானிப்பட்ட பிரிவின் நாவலை திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையில் பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞான பட்டமும் பெற்றுள்ளார்.

அவர் சிறந்த தலைமைத்துவ அனுபவத்துடன் கூடிய பல்வேவேறு திறமைகள் கொண்ட அர்பணிப்புடன் பணிபுரிகின்ற அனுபவமிக்க சிரேஷ்ட முகாமைத்துவ உத்தியோகத்தராவதோடு, நிறுவனமொன்றின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மற்றும் கனிஷ்ட உத்தியோகத்தர்களுக்கிடையே பரஸ்பர தொடர்புகளை பேணிச்செல்வதற்காக எதிர்வினை

ஆற்றல் மற்றும் நேர முகாமைத்துவத்தை பயன்படுத்தும் வலுவான மற்றும் உறுதியான தொடர்பாளராவார்.

2018 ஆண்டு ஒக்தோபர் மாதம் முதல் 2022 ஜூன் மாதம் வரை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் ஆக்கத்திறன் அதிகாரியொருவராக பணியாற்றிய காலத்தில் தேசிய ஆக்கத்திறன் செயலகத்தின் பணிப்பாளரொருவராகவும் அதேபோன்று ஆசிய உற்பத்தி நிறுவனத்தின் மாற்றீட்டு பணிப்பாளரொருவராகவும் பணியாற்றியுள்ளார். 2006 ஆண்டில் இலங்கை நிருவாக சேவையில் பணியை ஆரம்பித்துள்ள அவர் 16 வருடங்களுக்கு மேலாக சிறப்பான சேவைக்காலத்துக்கு உரித்துக் கூறுவதோடு, தற்போது அவர் இலங்கை நிருவாக சேவையின் முதல் தர உத்தியோகத்தரொருவராவார். இக்காலத்தினுள் பல பிராந்திய செயலாளர் காரியாலயங்களில் பிராந்தி செயலாளர் ஒருவராகவும் சேவையாற்றிய 10 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் பெற்றுள்ளார்.

திரு உபுல் ஜயதிஸ்ஸ
முகாமைத்துவப் பணிப்பாளர்

திரு உபுல் ஜயதிஸ்ஸ அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபர பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான (விசேட வர்த்தக நிருவாகம்) பட்டமொன்றை பெற்றுள்ளார் அதற்கு மேலதிகமாக, சுவீடனில் வேர்ல்ட் மெரிடைம் பல்கலைக்கழகத்தில் துறைமுக முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானிமாணி பட்டமொன்றையும், ஐக்கிய இராட்சியத்தில் Wigon & Leigh College கல்வி நிறுவனத்தில் சந்தைப்படுத்தல் தொடர்பான டிப்ளோமா ஒன்றிணையும் பெற்றுள்ளார்.

பட்டத்தைப் பெற்ற பின் 1986 ஆம் ஆண்டில் முகாமைத்துவ பயிலுனராக இலங்கை துறைமுக அதிகாரசபையில் சேர்ந்த திரு. ஜயதிஸ்ஸ அவர்கள் துறைமுகத் துறையில் 35 வருடங்களுக்கு மேற்பட்ட சேவை அனுபவத்தைப் பெற்றுள்ளார். மத்திய கிழக்கு வலயத்தின் துறைமுங்களில் அதாவது குவைட் அரசாங்கத்தில் Ports Public Authority – Shuaiba Container Terminal மற்றும் ஐக்கிய அரபுக் குடியரசின் Sharjah Ports of Khorfakkan Container Terminals இல் முனைய வடிவமைப்பாளர் ஒருவராக ஐந்து வருட அனுபவம் பெற்றுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகம;, மொரட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் றுஹுனு பல்கலைக்கழகம் உட்பட பல்கலைக் கழகங்கள் பலவற்றிலும் இலங்கையில் ஏனைய முன்வரிசையிலுள்ள நிறுவனங்கள் பலவற்றிலும் தற்காலிக விரிவுரையாளரொருவராக 14 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தொட்டு பணிபுரிகின்றார்.

திரு. உபுல் ஜயதிஸ்ஸ அவர்கள் 2021 ஆம் ஆண்டில் ஜூன் மாதத்தில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவ பணிப்பாளர் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. பீ. ஏ. எஸ். அத்துல குமார
பணிப்பாளர்

திரு. பீ.ஏ.எஸ் அத்துல குமார அவர்கள் கம்பஹா பண்டாரநாயக்க வித்தியாலயத்தின் பழைய மாணவராவதுடன், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம் (அரச நிருவாகம்) (விசேட) தொடர்பில் பட்டம் பெற்றுள்ளார். அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிகக் கல்வி தொடர்பாக விஞ்ஞான முதுமானி பட்டத்தை பெற்றுள்ளார். இலங்கை கணக்காளர் சேவையில் முதல் தர உத்தியோகத்தரான திரு. அத்துல குமார அவர்கள் இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின், அங்கத்தவரொருவராவதுடன், லண்டன் பட்டய அரச நிதி மற்றும் கணக்கியல் நிறுவனத்தின் உறுப்பினரொருவருமாவார்.

1991 ஆம் ஆண்டு கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தில் கணக்காய்வு பரீட்சகராக பணியில் இணைந்து, 1992 ஆண்டில் இலங்கை கணக்காளர் சேவையில் இணைந்து கொண்டதன் பின்னர், 1992-1997 வரையிலான காலப்பகுதியில் பொலன்னறுவை மாவட்டத்தின் லங்காபுர பிரதேச செயலகத்தில் கணக்காளராகவும், அநுராதபுரம் மாவட்டத்தின் தலாவ பிரதேச செயலகத்தில் கணக்காளராகவும் பணியாற்றியுள்ளார். 1997- 2005 வரையிலான காலப்பகுதியில் வடமத்திய மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் கணக்காளராக பணியாற்றியதன் பின் பத்தரமுல்லையில் அமைந்த மஹாவலி மற்றும் நீர்பாசனம், ரஜரட்ட அபிவிருத்தி மற்றும் விவசாய அமைச்சின் பணிப்பாளர் அலுவலகத்தில் இரண்டு வருடகாலம் பணியாற்றியுள்ளார்.

2007 ஆம் ஆண்டு நிதி அமைச்சின் பொது தொழில்முயலுனர்கள் திணைக்களத்தில் இணைந்த திரு.அத்துல குமார அவர்கள் அங்கு பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். தற்பொழுது அவர் பொது தொழில்முயலுனர்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றுகின்றார்.

அவர் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்/ பல்கலைக்கழகங்களில் கணக்கியல் நிதி முகாமைத்துவம் தொடர்பான மூலோபாய திட்டங்கள் மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பாக பயிற்சி பெற்றுள்ளார்.

மேலும், திரு அத்துல குமார களம்பு கொமர்ஷெல் பசளை கம்பனி, வ/ப மன்னாய் சோல்ட் கம்பனி, கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம், வ/ப சிலோன் எக்ரோ இன்டஸ்ரிஸ் கம்பனி, வ/ப லங்கா ஹய்ட்ரோலிக் கம்பனி, சிலோன் செரமிக் கார்பரேஷன் ஆகிய நியதிச்சட்ட நிறுவனங்களில் பணிப்பாளர்/ பணிப்பாளர் சபை உறுப்பினராக கடமையாற்றியுள்ளதுடன், இலங்கை போக்குவரத்து சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிக்கால் அமைப்புச் சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகிய நிறுவனங்களில் நிபுணத்துவ குழுக்களின் உறுப்பினரொருவராகவும் பணியாற்றியுள்ளார். இதற்கு மேலதிகமாக, 2012 முதல் 2014 வரையில் தேசிய அபிவிருத்தி நிதியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகவும் செயற்பட்டுள்ளார்.

திரு. பீ. பி. எஸ். சீ. நோனிஸ்
பணிப்பாளர்

திரு சரத் நோனிஸ் அவர்கள் அரசாங்க சேவையில் பல்வேறு பிரதான பதவிகள் வகித்து 03 தசாப்தங்களுக்கு மேலான சேவை அனுபவத்துடன் கூடிய அரசாங்க சிரேஷ்ட நிருவாக உத்தியோகத்தரொருவராவார். அவர் தற்போது இலங்கையில் சுங்க பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றுவதோடு, சுங்க வருமானத்தை அறவிடுதல், குறித்த சட்டங்களை அமுல்படுத்துதல் மற்றும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பணியினரை நிருவகித்தல் தொடர்பான பொறுப்பு நேரடியாக அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வர்த்தக நிருவாகம் தொடர்பான கௌரவப்பட்டம் பெற்றுள்ளதோடு, இலங்கை பட்டய கணக்காளர்களின் நிறுவனத்தில் உரிமச் சான்றிதழ் பெற்றுள்ளார். அவுஸ்திரேலிய மானியத்தின் கீழ் அடெலேட் இன் ப்லின்டார்ஸ் பல்கலைக்கழகத்தினால் அரச நிருவாகம் தொடர்பான முதுமானிப் பட்டமொன்று பெற்றுள்ளார்.

1988 ஆண்டில் கண்காய்வாளர் நாயகம் திணைக்களத்தில் கணக்காய்வு பரிசோதகரொருவராக அரசாங்க சேவைக்கு இணைந்த அவர் 1997 இல் இலங்கை கணக்காளர் சேவையில் இணைந்துகொண்டார். 1998 இல் இலங்கை நிருவாக சேவையில் சேர்ந்து மீன்பிடி மற்றும் நீரியல் வழங்கல் அமைச்சின் உதவிச்செயலாளராக சேவையாற்றினார். அதன் பின், நிதி அமைச்சுக்கு இடமாற்றப்பட்டு, பொது வருமான கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் திணைக்களத்தில் மற்றும் வர்த்தக அறவீட்டுமுறைகள் மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களத்தில் சேவையாற்றியுள்ளார்.

இளைஞர் விவகாரம் மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சின் தொழில் வழிகாட்டல் நிபுணரொருவராக நியமிக்கப்படுவதற்கு முன் பெற்றோலிய தொழில் அமைச்சின் மேலதிக செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். அவர் இலங்கையின் முதலாவது கட்டுப்பாட்டு ஜெனரலாவதோடு, அரசுக்குரிய நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பில் ஏற்படுகின்ற தவறான முகாமைத்துவம் மற்றும் வீண்விரயத்தை தடுக்கும் நோக்கில் மத்திய தரவுகள் அமைப்பொன்றை உருவாக்கி, அரசாங்கத்தின் சொத்துக்களை செயற்றிறனாக, ஆக்கப்பூர்வமாக மற்றும் பாதுகாப்பாக பயன்படுத்தும் செயற்பாடு தொடர்பில் கட்டுப்பாட்டு ஜெனரல் பதவி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதன் பின், அவர் தேசிய வரவு செலவு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் பதவியுயர்த்தப்பட்டார். தேசிய வரவு செலவு தயாரித்தல், அரசாங்க செலவுகள் முகாமைத்துவம், வணிகரீதியான, களஞ்சிய, அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகளின் எல்லைகளை தீர்மானித்தல் மற்றும் செலவுகள் பொறுப்பேற்கும்

நிறுவனங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் எல்லைகளை திருத்துதல், வரவு செலவு கண்காணிப்பை அமுல்படுத்துதல், வரவு செலவு பிரேரனைகளின் கீழ் உத்தேசித்த புதிய நிகழ்ச்சிகள்/ செயல்திட்டம் தொடர்பாக நிதி வளங்கள் ஒதுக்குதல் அவரின் பொறுப்புக்களுள் உள்ளடங்கின.

பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராகவும் அவர் சேவையாற்றியுள்ளதோடு, இரு தரப்பு மற்றும் பல்தரப்பு பாதுகாப்பு தொடர்பாடல் உள்ளடங்கலாக யுத்த உபகரணங்களின் கொள்வனவு தொடர்பான அனுமதிகள் பெற்றுக்கொடுத்தல், முப்படைகள் சேவையின் உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வுகள், ஓய்வு பெறுதல் மற்றும் சேவை நீடிப்புகளை அனுமதித்தல் உட்பட பாதுகாப்பு கொள்கைரீதியான பொறுப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. அதேபோன்று முப்படை சேவையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள், சுற்றுப்பயணங்கள் மற்றும் கருத்தரங்குகளுக்கு அனுப்புதல், பதக்கங்கள் அணிவிப்பதற்கான அனுமதி பெற்றுக்கொடுத்தல் மற்றும் சம்பள முரண்பாடுகளை சீர்செய்தல், ஊனமுற்ற மற்றும் ஓய்வு பெற்ற முப்படை உத்தியோகத்தர்களின் மற்றும் ஆயுதப் படையின் தேர்ச்சி பெற்றவர்களின் சம்பள நட்டஈடு செலுத்துதல் ஆகிய பணிகள் தொடர்பான பொறுப்புக்களை சுமந்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் அபிவிருத்தி மாநாடு/ உலக வர்த்தக ஸ்தாபனம் (UNCTAD/WTO) சர்வதேச வர்த்தக மையம் மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட " அரச கொள்கைகள் தயாரிக்கும் செயற்பாட்டினை உறுதிசெய்தல்". வர்த்தக பாதுகாப்பு ஆவணங்கள் ஐரோப்பிய ஆணைக்குழு சட்டங்கள் மற்றும் நடைமுறைகள், வர்த்தக பாதுகாப்பு ஆவண சட்டங்கள் மற்றும் நடைமுறைகளை அறிமுகப்படுத்தும் பாடநெறிகள் மற்றும் " பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள்" போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பயிற்சி நெறிகளில் பங்கேற்றுள்ளார்.

மேலும், அவர் மூலோபாய கல்வி தொடர்பான சர்வதேச நிறுவனத்தின் புளர்ர்டன் ஒன்றியத்தின் (IISS Fullerfon Forum) மற்றும் சர்வதேச நாணய நிதியம்/ உலக வங்கயின் வருடாந்த கூட்டங்கள் உட்பட ஆசிய மற்றும் தென்மேற்கு ஆசியாவின் நிலைபேறான அபிவிருத்திக்கான உட்கட்டமைப்பு வசதிகள், நிதி மூலோபாயம் தொடர்பான கொள்கைகள் சொற்பொழிவு தொடர்பான கூட்டங்கள், அரசாங்க பெறுகைக்கான செயற்பாட்டின் திருத்தப்பட்ட உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தம், போக்குவரத்து வர்த்தக சேவைகள் வழங்குதல் மற்றும் வர்த்தக வசதிகள் தொடர்பான விஷேட பல்லாண்டு கூட்டங்கள்- பாகிஸ்தான்- இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (FSFTA) மற்றும் இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையேயான விரிவான பொருளாதார கூட்டமைப்பு ஒப்பந்தத்தின் கீழ் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட தொழிநுட்ப மட்டத்திலான கலந்துரையாடல்கள் உட்பட பல்நோக்கு வர்த்தக மற்றும் ஏனைய சர்வதேச தூதுக்குழுக்களில் பங்குபற்றியுள்ளார்.

திருமதி என். ஏ. ஏ. பி. எஸ். நிஸ்ஸங்கா
பணிப்பாளர்

திருமதி நிஸ்ஸங்கா அவர்கள் 1990 ஆண்டில் அரச நிர்வாக சேவையில் இணைந்து தற்போது மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சின் மேலதிகச் செயலாளராக (சமூக அபிவிருத்தி) கடமையாற்றுகின்றார்.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளராகவும் கடமையாற்றியுள்ள இவர் மாகோ, நாத்தன்டிய போன்ற பிரதேசங்களில் பிரதேச செயலாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

திரு. ஜே. ஆர். யூ. த. சில்வா
பணிப்பாளர்

புதிய முயற்ச்சியாளரான திரு.ரொஹான் த சில்வா அவர்கள் புத்திசாதுர்யமான முறையில் வெற்றி பாதையை நோக்கி பயணிக்கும் 75 இற்கும் அதிகமான வியாபார நிறுவனங்களை உருவாக்கி மெக்லரன்ஸ் கூட்டு வியாபாரத்தை நாடளாவிய ரீதியில் பல பிரதேசங்களில் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். சிறந்த முன்னுதாரனமான எதிர்கால பயணத்தை

வடிவமைத்து நிறுவனத்தினுள் பணியாற்றும் கலாச்சாரத்தினை ஏற்படுத்தி வியாபாரத்தை பல்வகை தன்மையுடன் வழிநடத்துகின்றார்.

திரு ரொஹான் த சில்வா மெக்லரன்ஸ் கம்பனியின் தற்போதைய தலைவராக பணியாற்றுகின்றார். அதன் பணிப்பாளர் சபை மற்றும் அதன் பணிகள் தொடர்பாக தன் குழுவை வழிநடத்திஇ கம்பனியின் இலாபகத்தன்மை மற்றும் புதிய கப்பற்றுறை, சமுத்திரவியல் மற்றும் சேவை வழங்கல் ஆகியவற்றுடன் தொடர்புடைய சேவைகளின் பொறுப்புக்களை ஏற்று பணியாற்றுகின்றார். மேலும்இ புதிய முதலீடுகள், முயற்சியான்மை மற்றும் சிரேஷ்ட ஆற்றல் முகாமைத்துவம் ஆகிய பகுதிகள் மீது அதிக ஆர்வம் காட்டுகின்றார். இலங்கையிலுள்ள துறைமுகங்களில் கப்பற்றுறை சேவையை முன்னேற்றும் பணிகளிலும் ஈடுபட்டுள்ளார்.

அரச துறை மற்றும் தனியார் துறையின் பல முன்னனி திட்டங்களுடன் தொடர்புடைய விசேட பணிகள் அவருடைய தொழிற்சார் வாழ்க்கையில் உள்ளடங்கியுள்ளது.

உலகளாவிய சமுத்திரவியல் மற்றும் சேவை வழங்களுக்காக இலங்கையினுள் முறையான கப்பற்றுறை மத்திய நிலையமொன்றை உருவாக்கும் செயன்முறையில் தன்னுடைய ஒத்துழைப்பை வழங்கி/ நல்கி அரச மற்றும் தனியார் துறைகளில் பல செயற்பாடுகளிற்கு ஒத்துழைப்பை நல்கி வருகின்றார். அவர் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் ஹம்பாந்தோட்டை இண்டர்நெஷனல் போர்ட் குறூப் கம்பனியின் மற்றும் ஹம்பாந்தோட்டை இண்டர்நெஷனல் போர்ட் சேர்விசஸ் கம்பனியின் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார். மேலும், அவர் ஜயாக கொள்கலன் முனைய கம்பனியின் மற்றும் களம்பு இண்டர்நெஷனல் கண்டேனர் டர்மினல் கம்பனியின் பணிப்பாளராகவும் இருப்பதுடன் அவர் இலங்கை கப்பல் முகவர்களின் ஆலோசணை குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றுகின்றார்.

திரு ரொஹான் த சில்வா அவர்கள் நமீபியாவிற்கான இலங்கை துணை தூதுவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தன் காலத்தை கம்பனிகள் மற்றும் பல குழுக்களில் சேவையாற்றுவதில் செலவிடுகின்றார்.

மேலும்இ பல வருடங்களாகஇ மோட்டார் கார் பந்தயங்கள் பலவற்றில் பங்குபற்றி பல சாதனைகள் புரிந்துள்ளார். திறமையான பெட்மின்டன் வீரரான திரு ரொஹான் த சில்வா அவர்கள் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பல வெற்றிகளை சூடியுள்ளார். அவற்றுள் முதற்தர வீரர்களுக்காக நடாத்தப்படுகின்ற போட்டிகளில் வழங்கப்படும் '' இலங்கை தேசிய சம்பியன்ஷிப்'' உம் உள்ளடங்கும். அவர் சர்வதேச போட்டிகளில் தங்க பதக்கங்களை பெற்றுள்ளார்.

பெட்மின்டன் விளையாட்டுக்காக பல ஆண்டுகளாக அர்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்கியுள்ள திரு ரொஹான் த சில்வா 2019 ஆம் ஆண்டு இலங்கை பெட்மின்டன் சம்மேளனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டதுடன் இதுவரை அப்பதவியில் சேவையாற்றுகின்றார். அதன் ஒட்டோமொபைல் போட்டி மற்றும் இலங்கை மோட்டார் வாகன ஓட்டுனர்கள் குழுவின் நிருவாக குழுவின் அதிகாரியுமாவார்.

அவருடைய அறிவுரைகளுக்கேற்ப மெக்லரன்ஸ் கூட்டு வியாபாரம் மூலமாக அனாதை இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்கள் பலவற்றிற்கு உதவிகளை வழங்குவதுடன் நிலைபேறான சமூக பொறுப்புக்கள் / புண்ணிய காரியங்கள் திட்டமொன்றாக வெலிகடை சிறைச்சாலை கைதிகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிற்கு பல்வேறு மட்டங்களில் உதவிகள் வழங்கப்படுகின்றது. மெக்லரன்ஸ் கூட்டு வியாபாரத்தின் ஒவ்வொரு பகுதியும் தூர நோக்குடைய தொழிலதிபர் மற்றும் தலைவரான ரொஹான் த சில்வா அவர்களினால் வழிநடத்தப்படுகின்றது. அவர் தொழிலதிபர்களுக்கு வழங்கும் எளிமையான அறிவுரை யாதெனில் எந்தவொரு நிறுவனமும் உயர் தரத்திலான உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், அதற்கான காலத்தை, முயற்சியை, அர்பணிப்பை, வழிக்காட்டலை மற்றும் உரிய நோக்கம் முக்கியமாவதுடன், அதன் மூலமாக மிகவும் கடினமான காலப்பகுதிகளிலும் வியாபாரத்தை பலம் பொருந்திய முறையில் முன்னெடுக்க இயலும் என்பதாகும். ''ஓயாமல் உழைத்தல், அவதானமாக செயற்படல், சந்தர்ப சூழ்நிலைக்கு ஏற்ப சவால்களுக்கு முகங்கொடுத்தல்'' இந்நடைமுறையான, யதார்த்தமான மனிதாபிமான மிகு தலைவரான திரு ரொஹான் த சில்வா அவர்களின் ஆலோசணையாகும்.

திரு. என். ஆர். ஹேவாதந்திரி
பணிப்பாளர்

கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் பட்டம் பெற்றுள்ளார் திரு.என்.ஆர் ஹேவாதந்திரி அவர்கள் சிவில் மற்றும் மனித உரிமைகள் வழக்குகள் தொடர்பாக ஆஜராகும் பிரதான தர தொழில்ரீதியான வழக்கறிஞராவார்.

அவரின் தொழில் வாழ்க்கைக்கு மேலதிகமாக குறிப்பிடுகையில், 1995 ஆம் ஆண்டில் கொழும்பு கேஸ் கம்பனியின் சட்ட ஆலோசகராகவும், 1996 இல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் முகாமைத்துவ குழுவிலும், 2001 இல் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் சட்ட வரைபாக்கக் குழுவின் அங்கத்தவராகவும், 2004 ஆண்டில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரொருவராகவும், 2016 இல் வ/ப இலங்கை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியின் பணிப்பாளரொருவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். 2010 ஆம் ஆண்டில் சுகாதார ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஆரம்பகால அங்கத்தவரொருவருமாவார். திரு. ஹேவாதந்திரி அவர்கள் தற்போது தொழில்சார் நன்நடத்தைக் குழுவின் மருத்துவ முதுமானிப்பட்ட நிறுவனத்தின் அங்கத்தவரொருவருமாவார்.

டாக்டர் உபுல் அஜித் மென்டிஸ் அவர்கள்
பணிப்பாளர்

டாக்டர் உபுல் அஜித் மென்டிஸ் அவர்கள் 2022 ஜூன் மாதத்தில் விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) தனியார் கம்பனியின் உப தலைவராக நியமிக்கப்பட்டார். இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து அவர் விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) தனியார் கம்பனியின் கீழ் நடாத்தப்படுகின்ற சர்வதேச ஐந்து விமான நிலையங்களின் நிருவாகம் மற்றும் இயக்க நடவடிக்கைகளை கண்காணிக்கும் மிகவும் முக்கியமான பொறுப்பினை நிறைவேற்றியுள்ளார். இதற்கு மேலதிகமாக, விமான நிலையங்கள் தொடர்பாக தற்போதுள்ள பொதுமக்களின் தோற்றப்பாட்டினை அதிகரிக்கும் பொருட்டு துறையின் நிபுணர்கள், பிரதான தரப்பினர்கள், ஊடாக நிறுவனங்கள் மற்றும் ஏனைய உள்ளக அமைப்புகளுடன் நெருக்கமாக நடவடிக்கை மேற்கொள்ளுகின்றார்.

சுகாதார துறையின் உயர் முகாமைத்துவ மட்டத்தில் 45 வருடங்களுக்கு மேலான அனுபவம் டாக்டர் மென்டிஸ் அவர்களுக்கு இருப்பதோடு, அரசாங்க மற்றும் தனியார் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பல நிறுவனங்களில் உயர் பதவிகள் வகித்துள்ளார். சுகாதார துறையில் அவர் புகழ்பெற்ற தொழில்துறையில் 2007 முதல் 2012 வரை 05 வருட கால எல்லையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றிய டாக்டர் மென்டிஸ் அவர்கள் நெவில் பெர்னாந்து போதனா வைத்தியசாலையின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளதோடு, இலங்கை மருந்துகள் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார். தற்போது இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் கடமையாற்றுகின்றார். டாக்டர் மென்டிஸ் அவர்கள் பொதுமக்கள் தொடர்பில் பாரிய பங்களிப்பொன்றினை பெற்றுக்கொடுத்து செயற்படுவதோடு, இலங்கையின் சனத்தொகை சேவை தொடர்பாக உள்நாட்டு பணிப்பாளராகவும் (Country Director) கடமையாற்றுகின்றார்.

டாக்டர் உபுல் மென்டிஸ் அவர்களிடம் பல்வேறு விடயங்கள் தொடர்பான நிபுணத்துவ அறிவினை, விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் பல்வேறு வர்த்தகப் பிரிவுகளின் மேம்பாடு தொடர்பாக பங்களிப்பு செய்துள்ளதோடு, சர்வதேச சிவில் விமான நிலையங்கள் மற்றும் விமான சேவை நிறுவனங்களை முன்னேற்றி மேம்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றார்.

திருமதி செஹாரா நவரத்ன
சட்ட ஆலோசகர்/பணிப்பாளர் சபையின் செயலாளர்

திரு. கீத் டி பேர்னாட்
தலைவர்

திரு. ஜி. யு. கே. அல்கேவத்தகே
உப தலைவர்

திரு. உபுல் ஜயதிஸ்ஸ
முகாமைத்துவ பணிப்பாளர்

திரு. சுசந்த அபேசிறிவர்தன
மேலதிக முகாமைத்துவ பணிப்பாளர் (தொழிநுட்ப)

திரு. எச்.எம் பிரபாத் ஜயந்த
மேலதிக முகாமைத்துவ பணிப்பாளர் (நிருவாகம்/ இயக்கம்)

திரு. டி. எல். ஆர். வீரசிங்க
பணிப்பாளர் (துறைமுக இயக்கம்)

திரு. டப்.எம் நளின் அபோன்சு
பணிப்பாளர் (மனிதவள அபிவிருத்தி)

திரு. பி. ஏ. ஆர். டி. பதிராஜ
பணிப்பாளர் (தொழிநுட்பம்)

மேஜர் ஜெனரல் சுதத் பெரேரா (ஓய்வு பெற்ற)
பணிப்பாளர் (பாதுகாப்பு)

திரு. எல். பிரேமசிறி டி சில்வா
பணிப்பாளர் (நிதி)

திரு. ஜி. வி. ரி. நானாயக்கார
பணிப்பாளர் (அபிவிருத்தி)

திரு. கே. ஜீ. எஸ் தயானந்த
பணிப்பாளர் (விற்பனை மற்றும் ஊடகம்)

திரு. சி. ஜே. வீரவிக்ரம
பணிப்பாளர் (சேவை வழங்கல்)

திருமதி அபர்னா திலக்கரத்ன
பிரதான சட்ட அலுவலர்

திரு. நிர்மால் டி. பொன்சேக்கா
பிரதான முகாமையாளர் (தகவல் பொறிமுறை)

திரு. ஜே. ஏ. சந்திரரத்ன
பிரதான பொறியியலாளர் (இயந்திர வேலைகள்)

திரு. டி. ஜி. ஆர். எம். பத்திவில
பிரதான பொறியியலாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு)

கெப்டன் கே.எம்.என்.பீ.சில்வா
ஹாபர் மாஸ்டர்

திருமதி எஸ். எச். எஸ். பத்மினி
பிரதான பயிற்சி முகாமையாளர்

திருமதி நெலும் அனவரத்ன
பிரதான முகாமையாளர் (நிருவாகம்)

திரு. சித்ரால் ஜயவர்ன
பிரதான முகாமையாளர் (தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள்)

திருமதி. ஜி. என். லியனகே
பிரதான உள்ளக கணக்காய்வாளர்

திரு. எ. எல். எம். நௌபர்
பிரதான பொறியியலாளர் (அபிவிருத்தி)

திரு.ரீ. சி. கே. பரனவித்தான
பிரதான பொறியியலாளர் (சிவில்)

திருமதி. எப். எம். ஹுசைன்
பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)

திருமதி. ஜி. இசட் மிஸ்கின்
பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்)

திரு. கே. எஸ். ஹெட்டியாரச்சி
பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்)

திரு. எஸ். எச். திலக்கபால
பிரதான முகாமையாளர்

திரு.எச். ஜே. கே. யூ. குமார
பிரதான முகாமையாளர்(நல்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள்)

திரு. எல். பி. எஸ். சந்தன
பிரதான முகாமையாளர் (மரபு ரீதியான கப்பற்சரக்கு கையாளல்)

திரு. ஆர். எம்.றம்சீன்
பிரதான மனிதவள முகாமையாளா

திரு.என். என். ஜே. ஏ. குமார
பிரதான பொறியியலாளர் (கடலகம்)

திரு. டி. கே. ஜி. எல். ஹேமசந்திர
பிரதான பொறியியலாளர் (மின்சாரம் மற்றும் இலத்திரனியல்)

2022 ஆம் ஆண்டில் சிரேஷ்ட முகாமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

ஓய்வு பெறுதல் மற்றும் விலகுதல்

திருமதி. சிரானி வன்னியாரச்சி, பணிப்பாளர் (நிதி) – இலங்கை துறைமுக அதிகார சபை சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

திரு. எஸ். எஸ். தேவப்பிரிய, பணிப்பாளர் (அபிவிருத்தி) சுய விருப்பின் பேரில் இலங்கை துறைமுக அதிகாரசபை சேவையிலிருந்து விலகினார்.

திரு. எம். எஸ். ஏ. பத்திரகே, பிரதான பொறியியளாளர் (இயந்திர உபகரணம்) - இலங்கை துறைமுக அதிகாரசபை சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

நியமனங்கள்

திரு. எச். எம் பிரபாத் ஜயந்த, மேலதிக முகாமைத்துவ பணிப்பாளராக (நிருவாகம்/ இயக்கம்) நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. கே. ஜீ. எஸ் தயானந்த, பணிப்பாளராக (விற்பனை மற்றும் ஊடகம்) நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. எல். பிரேமசிறி டி சில்வா, பணிப்பாளராக (நிதி) நியமிக்கப்பட்டுள்ளார்
.

திரு. சி. ஜே. வீரவிக்ரம, பணிப்பாளராக (சேவை வழங்கல்) நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. ஜி. வி. ரி. நானாயக்கார, பணிப்பாளராக (அபிவிருத்தி) நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. ஆர். எம். றம்சீன், பிரதான மனிதவள முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. எச். ஜே. கே. யூ. குமார, பிரதான முகாமையாளராக (நல்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள்) நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. எஸ். எச். திலகபால, பிரதான முகாமையாளர் (நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள்) நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி. ஜி. என். லியனகே, பிரதான உள்ளக கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. என். என். ஜே. ஏ. குமார, பிரதான பொறியியலாளராக (கடலகம்) நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. டி. கே. ஜி. எல். ஹேமசந்திர, பிரதான பொறியியலாளராக (மின்சாரம் மற்றும் இலத்திரனியல்) நியமிக்கப்பட்டுள்ளார்.

வருடத்தினுள் கொழும்பு துறைமுகத்தில் இருபதின் சம அலகுகள் 6.86 மில்லியன் கையாளப்பட்டதோடு, அது கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 5.3% குறையொன்றை காட்டியது. முனையம் என்றவகையில் குறிப்பிடும் பொழுது முறையே களம்பு இண்டர்நெஷனல் கம்பனியினால் 3.18 மில்லியன்கள் கொள்கலன்களும், இலங்கை துறைமுக அதிகார சபையினால் 1.9 மில்லியன் கொள்கலன்களும், சவுத் ஏசேசியா கேட்வே டர்மினல் கம்பனியினால் 1.75 மில்லியன் கொள்கலன்களும் கையாளப்பட்டுள்ளது. அதற்கேற்ப, இலங்கை துறைமுக அதிகார சபை, சவுத் ஏசியா கேட்வே டர்மினல் கம்பனி மற்றும் களம்பு இண்டர்நெஷல் கண்டேனர் கம்பனி ஆகிய முனையங்களினால் காட்டப்பட்டுள்ள செயற்திறன் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது கையாளல் வளர்ச்சியில் பின்னடைவொன்று காட்டுகின்றது. எவ்வாறாயினும், இக்கால எல்லையினுள் கிழக்கு கொள்கலன் முனையத்தினால் கொள்கலன்கள் இருபதின் சம அலகுகள் 346,174 கையாளப்பட்டதனை கவனத்திற்கொள்ள முடியும்.

2021 ஆம் ஆண்டில் களம்பு இண்டர்நெஷனல் கண்டேனர் டர்மினல் கம்பனி, இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் சவுத் ஏசியா கேட்வே டர்மினல் கம்பனி ஆகிய முனையங்களில் சந்தை பங்குகள் முறையே 44%, 30% மற்றும் 25% ஆவதோடு, 2022 ஆம் ஆண்டில் முறையே 46%,28% மற்றும் 25% ஆகியது ஆழமான இரண்டு முனையங்களிலும் கையாளல்கள் மேற்கொள்ளப்படவில்லை ஆயின் கொழும்பு துறைமுகத்துக்கு 14.25 மீட்டரை விட கூடிய ஆழங்கொண்ட 230 கொள்கலன் கப்பல்கள் தொடர்பாக கையாள்வதற்கான இடவசதிகள் ஏற்படுத்துவதற்கு முடியாதிருந்திருக்கும்.

தொன் பிரமனாமாக கருதும் பொழுது 2021 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்தினால் கையாளப்பட்ட தொன் 103 மில்லியனுடன் ஒப்பிடும் பொழுது 2022 ஆம் ஆண்டில் தொன் 7.4% மில்லியன் 96 குறைப்பாடொன்று காட்டியது.

ஏனைய துறைமுகங்களின் செயலாற்றுகை தொடர்பாக கருதும் பொழுது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு 323 கப்பல்கள் வருகைதந்திருந்த போது அதன் மூலம் கையாளப்பட்ட தொன் பிரமானம் 5.9% குறைப்பாடொன்றாக காட்டியது. எவ்வாறாயினும், அம்பாந்தோட்டை துறைமுகத்தில் மோட்டார் வண்டிகள் கையாளல் 13.1% இனால் அதிகரித்திருந்தது. இதற்கிடையே, 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது திருகோணமலைக்கு வருகைத்தந்த கப்பல்களில் 18.8% ஆக குறைந்ததோடு அதன் மூலம் கையாளப்பட்ட தொன் பிரமானத்தில் குறைப்பாடு 34.3% ஆக காட்டியது.

2022 சனவரி மாதத்தில் காலி துறைமுகத்தின் துறைமுக அபிவிருத்தி செய்திட்டத்தை முன்னேற்றுவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடலக துறையில் சுமார் 400 பேர் பங்குபற்றிய கலந்துரையாடல் மகாநாடொன்று எதிர்பார்த்த முதலீட்டாளர்களுக்காக நடாத்தப்பட்டது.

உலகளாவிய தொற்று நோய் நிலைமையை காரணமாகக் கொண்டு கப்பல் கம்பனிகள் மற்றும் ஏனைய தரப்பு நிறுவனங்களின் செயலாற்றுகை மதிப்பீடு தொடர்பாக நடாத்தப்படுகின்ற “Port of Colombo Awards Night” விருது வழங்கும் விழாவை நடாத்தமுடியவில்லை.



அபிவிருத்தி திட்டங்கள்
ஆண்டறிக்கை 2022

நாட்டின் ஒட்டு மொத்த துறைமுகங்களின் பொதுப்பணி வசதிகள் மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கமாகக் கொண்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல அபிவிருத்தி திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இயக்க கொள்திறனை விருத்தி செய்தல், செயற்றிறனை அதிகரித்தல், சர்வதேச சந்தை நடவடிக்கைகள் மற்றும் முதலீட்டினை கவர்ந்து கொள்வதற்காக இச்செய்திட்டம் மூலம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்பு அபிவிருத்தி பகுதிகளினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பல முன்னணி அபிவிருத்தி செய்திட்டங்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டில் அவை தொடர்பான முன்னேற்றங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளது.

1. கிழக்கு கொள்கலன் முனையம் (ECT)

கொழும்பு தெற்கு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையம் மற்றும் மேற்கு கொள்கலன் முனையத்தின் - I (WTC) அபிவிருத்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தி, துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது இலங்கை துறைமுக அதிகார சபையின் கொள்கையாகும்.

440 மீட்டர்கள் நீளங்கொண்ட நங்கூரதளத்தை துரிதமாக இயக்கும் நோக்கோடு, 2015 ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகார சபை 440 மீட்டர் நீளங்கொண்ட இயக்க மட்டத்திலான நங்கூரத்தளமொன்றுடன் கூடிய, 600 மீட்டர் நீளமான மேடைச் சுவர், 18 ஹெக்டேயார் மேடை பிரதேசம், முனையப் பாதைகள் மற்றும் குறித்த வாயில் கதவு தொகுதி தற்பொழுது நிர்மாணிக்கப்பட்டுள்ளன. 600 மீட்டர் நீளங்கொண்ட தற்போதைய துறைமேடை 18 மீட்டர் ஆழங்கொண்ட நங்கூரத்தளம் உள்ளடங்கலாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 720 மீட்டர் கொண்ட மேடைச் சுவரின் அத்திவாரம், 20 மீட்டர் ஆழங்கொண்ட நங்கூரத்தளமொன்று உள்ளடங்கலாக நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டாகும் போது கிழக்கு கொள்கலன் முனையத்தை இலங்கை துறைமுக அதிகார சபையின் பூரண உரித்துடன் கூடிய முனையமொன்றாக மாற்றியமைக்கும் நோக்கில் இலங்கை துறைமுக அதிகார சபையினால் கிழக்கு கொள்கலன் முனையம் அபிவிருத்தி செய்யப்படும். கிழக்கு கொள்கலன் முனையம் பாரிய மூன்று கொள்கலன் கப்பல்களை கையாள்வதற்கான இட வசதிகளை ஏற்படுத்தும் 18-20 மீட்டர்கள் வரையிலான ஆழங்கொண்ட 1320 மீட்டர் நீளமான மேடைச் சுவரைக் கொண்டது. முனையம் இருபதின் சம அலகுகள் 2.4 மில்லியன் வருடாந்த கொள்திறனைக் கொண்ட சுமார் 72 ஹெக்டேயார் பிரதேசமொன்றை உள்ளடக்குகின்றது.

தற்போதைய முன்னேற்றம்

- கிழக்கு கொள்கலன் முனையத்தின் நிர்மாணப் பணிகள் 2022.01.04 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டு திசெம்பர் ஆகும் போது முன்னேற்றம் கீழ்வருமாறு
  நிதிசார் முன்னேற்றம் - அ.டொ.3.91 மில்லியன்கள்
  இலங்கை ரூபாய்களில் 5,083 மில்லியன்கள்.
  பொது விடயங்களின் முன்னேற்றம் - 26%
  அகழ்வுகள் மற்றும் நிரப்புதல் வேலைகள் 30%
  மேடைச் சுவரை நிர்மாணிக்கும் முன்னேற்றம் - 1.2%

- கிழக்கு கொள்கலன் முனையத்தின் இயக்க செயற்பாடுகளுக்கு தேவையான கப்பலிலிருந்து கரைவரை இயக்கங்களை மேற்கொள்ளுகின்ற 12 பாரந்தூக்கிகள் மற்றும் பீலி மீது பொருத்தியுள்ள 40 தன்னியக்க பாரந்தூக்கிகளின் பெறுகை செயற்பாடு முன்னெடுக்கப்படுவதுடன், அவற்றின் உற்பத்தி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2. மேற்கு கொள்கலன் முனையம் (WTC-1)

செய்திட்டத்தின் விபரம்

கொழும்பு தெற்கு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையம் -I, 400 மீட்டர் அல்லது அதை விட கூடிய நீளத்தையுடைய 03 பாரிய கொள்கலன் கப்பல்களை ஒரே நேரத்தில் கையாளக்கூடியவாறு 1400 மீட்டர் நீளத்துடன் கூடிய, 20 மீட்டர் ஆழமான நங்கூரத்தளமொன்று மற்றும் பின்புற மேடை பிரதேசத்துடன் கூடியது. முனைய பிரதேசம் பருமட்டாக 64 ஹெக்டேயார் ஆவதோடு, முனையத்தின் மதிப்பிடப்பட்ட வருடாந்த கொள்ளளவு கொள்கலன்கள் இருபதின் சம அலகு 03 மில்லியன்களாகும்.

தற்போதைய முன்னேற்றம்

இலங்கை துறைமுக அதிகார சபை, Adani Ports Special Economic Zone Limited கம்பனி மற்றும் தமது உள்நாட்டு கூட்டுரிமை கம்பனியான John Keels Holdings PLC கம்பனிகளுடனான கூட்டு வியாபாரமொன்றின் மூலம், 35 வருடங்களிற்கு நிர்மாணித்து, இயக்கி, கையளிக்கும் அடிப்படையில் அரச தனியார் கூட்டுரிமை வியாபாரமாக, மேற்கு கொள்கலன் முனையம் -I இனை அபிவிருத்தி செய்வதற்காக, 2021.03.01 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

மேற்கு கொள்கலன் முனையம் - I அபிவிருத்தி மற்றும் இயக்க பணிகளை அமுல்படுத்துவதற்காக முனைய இயக்குனராக Colombo West International Terminal தனியார் கம்பனி (CWIT) எனும் கம்பனியொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

நிர்மாணித்து, இயக்கி, கையளிக்கும் ஒப்பந்தம் 2021.09.30 ஆம் திகதி அமுல்படுத்தப்பட்டுள்ளது. வேலைத்தளத்தின் குத்தகை வாடகை ஒப்பந்தம், பங்குரிமை ஒப்பந்தம் மற்றும் கடனாளிகளின் நேரடி ஒப்பந்தம் 2022.02.25 ஆம் திகதி செயற்படுத்தப்பட்டுள்ளன. அதற்கேற்ப, நிர்மாணித்து, இயக்கி, கையளிக்கும் ஒப்பந்தம் அமுலுக்கு வரும் திகதி 2022.02.26 ஆக அறியப்பட்டது.

மேற்கு கொள்கலன் முனையம் - I இன் நிர்மாணப் பணிகள் 2022.11.09 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

3. கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்தி செயல்திட்டத்தின் சாத்தியவள ஆய்வு மேற்கொள்வதற்கான ஆலோசனை சேவைகள்

இலங்கை துறைமுக அதிகார சபை, தனது கொள்கலன்கள் கையாளும் கொள்திறனை அடுத்த 30 ஆண்டுகளுள் விஸ்தரிப்பதற்காக நீண்டகால திட்டமொன்று தயாரித்துள்ளது. இந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தற்போதுள்ள கொழும்பு துறைமுகத்தின் வடக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள கொழும்பு வடக்கு துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்காக, இலங்கை துறைமுக அதிகார சபை பரிந்துரைத்துள்ளது. உத்தேசித்த துறைமுக திரவ தொகை, உலர் தொகை, ரோ ரோ மற்றும் கொள்கலன் கையாளல்களை மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்படுவதோடு, கோரிக்கைகளின் மீது அடிப்படையாக கட்டங்களாக அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கின்றது. கோரிக்கைக்கு போதிய அளவில் தகுந்த உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் துறைமுக சேவைகளை வழங்குவதற்கு இலங்கை துறைமுக அதிகார சபை கவனம் செலுத்தியுள்ளது.

துறைமுகம் சார்ந்த கைத்தொழிற்துறையில் இருக்கும் கோரிக்கைகளை பூர்த்திசெய்வதற்கு, ஏனைய துறைமுக சேவைகளை பேணுவதற்கு உறுதி செய்து, கொள்கலன் கையாளல் கொள்திறனை விஸ்தரிக்கும் நோக்கோடு, இலங்கை துறைமுக அதிகார சபை நிகழ்காலத்தில் கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்தி செயல்திட்டத்துக்காக, சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. போக்குவரத்து திட்ட ஆரம்பகட்ட வசதிகளின்

கீழ், ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி வழங்கப்படுகின்ற இவ்வாய்வு 15 மாதத்திற்குள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

தேவையான களநிலை பரிசீலனை, மேடை வடிவமைப்பு மற்றும் கடலக மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதன் பின், இலங்கை துறைமுக அதிகார சபையின் மூலம் மீளாய்வு செய்யும் பொருட்டு, நகல் சாத்தியவள ஆய்வறிக்கை ஆலோசகரினால் சமர்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகார சபை நகல் அறிக்கை தொடர்பாக தமது அவதானிப்பு மற்றும் கருத்துக்களை பெற்றுக்கொடுத்துள்ளதோடு, ஆலோசகரினால் அப்பிரேரனையை உள்ளடக்கிய சாத்தியவள ஆய்வறிக்கை தற்போது பூர்த்தியாகும் நிலையில் உள்ளது.

இதற்கு மேலதிகமாக, சூழல் தாக்கம் தொடர்பான மதிப்பீட்டு நகல் அறிக்கை ஆலோசரினால் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சமர்பிக்கப்பட்டுள்ளதோடு, அதனை கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கல் முகாமைத்து திணைக்களத்துக்கு தொழிநுட்ப மதிப்பீடு மேற்கொள்வதற்காக சமர்பிக்கப்பட்டுள்ளது. 2022 செப்தெம்பர் மாதத்தில் தொழிநுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதோடு, 2022 நவம்பர் மாதத்தில் கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கல் முகாமைத்துவ திணைக்களத்தினூடாக குறித்த தரப்பினர்களின் அவதானிப்பு மற்றும் கருத்துக்கள் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு கிடைத்துள்ளன. ஆலோசகர் தற்போது இந்த கருத்துக்கள்/ பிரேரணைகளை உள்ளடக்கிய சூழல் தாக்க மதிப்பீட்டு நகல் அறிக்கை நிறைவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளதோடு, இறுதி சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொது மக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு எதிர்காலத்தில் சமர்பிக்கப்படவுள்ளது.

4. ஐயா கொள்கலன் முனையத்தின் V ஆவது செய்திட்டம் (JCT V) – ஆழமான நங்கூரதளத்தின் கொள்திறனை அதிகரிக்கும் செய்திட்டம்

330 மீட்டரை விட அதிகமான நீளத்தை கொண்ட இரு கப்பல்களை ஒன்றுக்கொன்று சமாந்தரமாக நிறுத்திவைப்பதற்கு குறைந்தபட்ச 16 மீட்டர்கள் ஆழம் வரை ஐய கொள்கலன் முனையம் IV இல் உள்ள கொள்கலன் துறைமேடையை 120 மீட்டர்களால் நீளமாக்குவதற்கு இலங்கை துறைமுக அதிகார சபை 2017 ஆம் ஆண்டு முதல் திட்டமிட்டிருந்தது. இவ் அபிவிருத்தி ஒப்பந்தத்தின் சிவில் வேலைப்பாகங்கள் 2018 ஆம் ஆண்டில் வெளி ஒப்பந்தக்காரரொருவருக்கு வழங்கப்பட்டதுடன், இலங்கை துறைமுக அதிகார சபையின் கட்டுப்பாட்டுக்கு புறம்பான காரணிகள் மீது ஒப்பந்த வேலைகளை செயற்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. இறுதியாக, அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஒப்பந்தக்காரருடன் கலந்துரையாடல் மூலம் இணக்கப்பாடொன்றுக்கு வந்து ஒப்பந்த வேலைகள் 2020 நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டு வரையில் தொடர்ச்சியாக பணிகள் முன்னெடுக்கப்பட்டன. செய்திட்ட ஒப்பந்தம் ரூபா 6,374 மில்லியன் மொத்த ஆகுசெலவிற்கு கையளிக்கப்பட்டதுடன் முதற்கட்ட ஒப்பந்த காலப்பகுதி 20 மாதங்களாகும்.

5. காலி துறைமுக அபிவிருத்தி செயல்திட்டம்

பிராந்தியத்தின் வணிக துறைமுகமொன்றாக காலி துறைமுகத்திலிருக்கும் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக உல்லாச கைத்தொழிலுடன் தொடர்பான துறைமுகமொன்றாக அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. 1960 ஆம் ஆண்டு காலப்பதியிலிருந்து முயற்சிகள் மேற்கொண்ட போதிலும், கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்கள் தொடர்பாக முக்கிய இடத்தினை பெற்றுக்கொடுப்பதன் காரணமாக அதன் அபிவிருத்தி பணிகள் மந்த கதியில் நடைப்பெற்றது. எவ்வாறாயினும், வலயத்தினுள் பொருட்கள் போக்குவரத்து கையாளலுக்காக, அதிகரித்துச் செல்லும் கேள்வியுடன் இலங்கை துறைமுக அதிகார சபையினால் காலி துறைமுக மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் பொருட்டு, காலி துறைமுகத்தில் ஆழமான பயணிகள் கப்பல் முனையமொன்று, அலை தாங்கி பிரவேச ஓடைப்பாதை மற்றும் தடாகத்தை அகழ்ந்து ஆழமாக்குதல் மற்றும் ஏனைய வசதிகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டுள்ளன.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புக்கான முகவர் நிறுவனத்தின் (JICA) குழுவினரால் தயாரிக்கப்பட்ட உத்தேசித்த அபிவிருத்தி செயல்திட்டத்தின் மூலம் ஓத அலைகளினால் காலி குடாவை பாதுகாப்பது மட்டுமன்றி, உல்லாச நடவடிக்கைகள் மற்றும் பயணிகள் கப்பல்களின் வருகை தொடர்பாகவும் உகந்த பிரதேசமொன்றாகின்றது. நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்தி நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக, தனியார் பிரிவின் முதலீட்டினை கவர்ந்துக்கொள்வதற்கு, இலங்கை துறைமுக அதிகார சபை நோக்காகக் கொண்டுள்ளது. உலகளாவிய ரீதியில் காலி குடாவின் விசேடமான அமைப்பின் அனுகூலமான நிலைமையை பயன்படுத்தி உல்லாச மற்றும் காணிகள் சொத்துகள் அபிவிருத்தி செய்யும் சந்தர்ப்பம் இத்திட்டத்தின் மூலம் விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கருத்து தெரிவிப்பதனை இது வரை செய்திட்டத்தின் முன்னேற்றத்தில் உள்ளடக்கப்படுவதோடு, இக்கருத்து கோரல் சிறு பட்டியல்படுத்தப்பட்டுள்ளது. சிறு பட்டியல்படுத்தப்பட்ட முதலீட்டாளர்களுக்கு வழங்கும் நோக்கத்தோடு, நகல்கள் பிரேரணைக்கான மனுக்கோரல் (RFP) மற்றும் செய்திட்ட ஒப்பந்தம் தற்போது நிறைவுசெய்யப்படுகிறது. உல்லாச கைத்தொழிலில் கவனம் செலுத்தி, காலி துறைமுகம் பிராந்திய வணிக துறைமுகமொன்றாக அபிவிருத்தி செய்வதனூடாக வலயத்தினுள் விசேட பொருளாதார அபிவிருத்தியொன்றினை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

6. துறைமுக தொடர்பாடல் தொகுதி

தேசிய துறைமுக பிரதான திட்டத்தினால், துறைமுக தொடர்பாடல் தொகுதியொன்று ஆரம்பிக்கும் தேவைப்பாட்டினை அடையாளங் கண்டுள்ளது. துறைமுக தொடர்பாடல் தொகுதி, துறைமுக துறையின் வர்த்தக செயற்பாட்டினை பூரணமாக்குவதற்காக தொடர்பினை ஏற்படுத்தும் சுயாதீன தனியாக இயங்கும் மென்பொருள் ஒன்றாவதோடு, ஏதாவது செயற்பாட்டின் வர்த்தக வட்டத்தை பூரணப்படுத்துவதற்காக குறித்த கொடுக்கல் வாங்கல்களை மாத்திரம் முன்னோக்கி கொண்டு செல்வதற்கு அல்லது நிறுத்துவதற்காக பொது இடைக்கால பொதுவான இடைமுகமொன்று இதன் மூலம் உருவாக்கப்படுகின்றது.

தற்போதைய முன்னேற்றம்

இலங்கை துறைமுக அதிகார சபை 2020 ஆம் ஆண்டில் இச்செயல்திட்டம் தொடர்பாக தேசிய திட்டமிடல் திணைக்களத்தில் அங்கீகாரம் பெற்றுக்கொண்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழிநுட்ப மற்றும் நிதி உதவியோடு பூர்வாங்க சாத்தியவள ஆய்வொன்று மற்றும் தரப்பினரின் மாதிரி திட்டமொன்று 2019 இல் பூரணபடுத்தப்பட்டுள்ளதோடு, இச்செயல்திட்டம் தொடர்பாக நிருவாக மாதிரியொன்று 2021 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பிரதான தரப்பினர்களுடன் ஒருங்கிணைப்பதற்கு மற்றும் செயல்திட்டத்தை இலகுவாக அமுல்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக, செய்திட்ட இயக்க குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. துறைமுக தொடர்பாடல் தொகுதியின் பூர்வாங்க திட்டம் மற்றும் சாத்தியவள ஆய்வு மேற்கொள்வதற்காக இலங்கையில் KPMG நிறுவனம் மற்றும் நெதர்லாந்தின் Port of Rotterdam க்கு இடையில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் கூட்டு வியாபாரமொன்று 2021.10.28 ஆம் திகதி ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த குறித்த ஆய்வின் கீழ் மூலாரம்ப அறிக்கை, தகவல் தொகுதி ஆய்வு, தரப்பினர்களின் தொடர்பாடல் திட்டம் மற்றும் முகாமைத்துவ திட்டத்தை மாற்றுவது நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

வர்த்தக செயற்பாட்டின் மீள் பொறியியல் அறிக்கை இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சமர்பிக்கப்பட்டுள்ளதோடு, அதனை நிறைவு செய்யும் பணிகள் செயற்பாட்டிலுள்ளன. துறைமுக தொடர்பாடல் தொகுதி செயற்படுவதனூடாக துறைமுக துறையின் இயக்க செயற்திறன் மற்றும் உற்பத்தித் திறன் பாரிய அளவில் அதிகரிப்பதனை எதிர்பார்க்கப்படுகின்றது.

7. பிரதான உள்ளக துறைமுக பாதைகளை விஸ்தீரனமாக்குதல், விஜய இளவரசர் துறைமேடையின் மற்றும் ஜயா கொள்கலன் முனையத்தின் பாதைகளின் புனரமைப்பு நடவடிக்கைகளின் இரண்டாவது கட்டம், போர்க்லிப்ட் இயந்திரங்கள் திருத்தும் பிரிவின் நிர்மானப் பணிகள்.

2020 திசெம்பர் மாதத்தினுள் தீயணைப்பு அலகிலிருந்து சமர்ஹில் வரை தூர பிரமானம் தொடர்பில் கவனம் செலுத்தி பிரதான உள்ளக துறைமுக பாதைகளை நிர்மாணிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, 2022 ஆண்டு வரை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. இச்செய்திட்டத்தின் ஒப்பந்த பெறுமதி ரூபா 289 மில்லியின் மொத்த தொகைக்கு திருத்தப்பட்டுள்ளது.

விஜய இளவரசர் துறை மேடையை சீரமைக்கும் பணிகளின் இரண்டாவது கட்டம் 2021 இல் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2022 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக 2022 ஆம் ஆண்டில் திசெம்பர் மாதத்திர் ஜய கொள்கலன் முனையத்தில் கொள்கலன் மேடையின் மேற்பரப்பினை சீர்செய்யும் வேலைகள் ரூபா 307.5 மில்லியன் ஆரம்ப ஒப்பந்த விலைக்கு துவங்கப்பட்டுள்ளது. இச்செய்திட்டங்கள் மேடையின் மொத்த வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

துறைமுக பிரவேச அதிவேக மேம்பால திட்டத்தின் ஒரு பகுதியாக உபகரண பராமரிப்பு குளிர்சாதனங்கள் மற்றும் குளிரூட்டிகளை திருத்துதல் மற்றும் Fork Lift இயந்திரங்களை திருத்துதல் ஆகிய பிரிவுகளுக்கான மூன்று வேலைத்தளங்களை நிர்மாணிக்கும் பணிகள் ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்பு பகுதிக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. முதலாவது வேலைத்தளங்கள் இரண்டும் 2021 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நிர்மாணிக்கப்பட்டு நிறைவுசெய்யப்பட்டுள்ளது. Fork Lift இயந்திரங்கள் திருத்தும் வேலைத்தள நிர்மாணப் பணிகள் நடைபெறுவதோடு, கடந்த வருடம் பூராகவும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது.

8. காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைத்தல்

வெளிநாட்டு கடன் நிதியை பயன்படுத்தி முன்னெடுக்கும் அபிவிருத்தி வேலைகள்

காங்கேசன்துறை துறைமுகத்தை வணிக துறைமுகமொன்றாக கையாளல்களை முன்னெடுப்பதற்கு தேவையான அலைதாங்கி மற்றும் பாலங்களை புனரமைத்தல், புதிய வணிக நங்கூரத்தளமொன்றை நிர்மாணித்தல் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் உள்ளடங்கலாக காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைப்பதற்காக அமெரிக்க டொலர் 45 மில்லியன் நிதியை இந்தியாவின் எக்சீம் வங்கியினால் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

2017 மே 2 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்தியாவின் எக்சீம் வங்கியுடன் கடன் ஒப்பந்தமொன்றுக்கு இலங்கை அரசாங்கம் 2018 சனவரி 10 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதன் பின்னர், இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு இடையில் கடன் விடுவிப்பு ஒப்பந்தம் 2018 ஒக்தோபர் மாதம் 17 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

செய்திட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்காக, திட்டம் மற்றும் ஆலோசனை சேவைகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபை செய்திட்ட முகாமைத்துவ ஆலோசனை ஒப்பந்தமொன்றுக்கு கைச்சாத்திடப்பட்டதோடு, அதன் பணிகள் 2020 ஒக்தோபர் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப, மொத்த ஆலோசனை சேவைகளில் 47% நிறைவடைந்துள்ளதுடன் இதுவரை ஆலோசகருக்கு ரூபா 273 மில்லியன் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. ஆகுசெலவு எல்லையை கடந்துள்ளமை உள்ளடங்கும் பொருட்டு போதிய கடன் தொகையொன்றை வழங்குவதற்கு இந்தியாவின் எக்சீம் வங்கியின் உடன்பாடு கிடைக்கப்பெற்றதன் பின்னர் செய்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2023 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ளது.

உள்நாட்டு நிதியை பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் வேலைகள்.

மேலே குறிப்பிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை இலகுபடுத்தும் பொருட்டு, புதிய வாயிற் கதவு தொகுதி மற்றும் எல்லை மதிற் சுவரை அமைத்தல், நீர் சேகரிப்பு தாங்கி, உயரத்தில் நிர்மாணிக்கப்படும் நீர் தாங்கி மற்றும் வீதி நிர்மாணப் பணிகள் மற்றும் செய்திட்ட நிருவாக நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட வீட்டின் திருத்த பணிகளை இலங்கை துறைமுக அதிகாரசபை தனது நிதியை பயன்படுத்தி நிறைவு செய்துள்ளது. காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள 50 ஏக்கர் காணியை (ஏக்கர் 16 மற்றும் ஏக்கர் 34) கையப்படுத்துவதற்கு / கொள்வனவு செய்வதற்கு தேவையான காணிகள் கையேற்கும் நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு தெல்லிப்பளை மாவட்ட செயலாளர் நடவடிக்கை மேற்கொள்கின்றார்.

9. துறைமுக உட்பிரவேச அதிவேக மேம்பால பாதை செய்திட்டத்தின் கீழ் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் அமுல்படுத்தும் செய்திட்டங்கள்

இங்குருகடை சந்தியிலிருந்து ஆரம்பமாகும் துறைமுக உட்பிரவேச அதிவேக மேம்பால பாதை செய்திட்டம் இலங்கை துறைமுக அதிகாரசபை வளாகம் ஊடாக காலிமுகத்திடல் வரை செல்கின்றது. அதன் நீளம் 5.3 கிலோ மீட்டர்களான 4 நிரல்களைக் கொண்ட அதிவேக மேம்பால பாதையாகும். 300 மில்லியன் அமெரிக்க டொலர் செய்திட்ட ஆகு செலவினை ஆசிய அபிவிருத்தி வங்கியினால் செலவிடப்படுகிறது.

சமுத்திரவியல் வசதிகளை வழங்கும் மத்திய நிலையம் (இலங்கை துறைமுக அதிகார சபையின் பிரதான அலுவலக கட்டிடம்)

இலங்கை துறைமுக அதிகாரசபையின் சேவை நிலையங்களிலிருந்து வெளியேற நேரிட்ட பணிக்குழுவினருக்காக, கெனல் துறைமேடை வளாகத்தில் 17 மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு இச்செய்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இச்செய்திட்டத்தை வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பேற்றுள்ளது.

மதிப்பிடப்பட்ட செய்திட்ட ஆகுசெலவு ரூபா 6,200 மில்லியன்கள் ஆவதுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியிலிருந்து முன்னேக்கப்படுகின்றது. உப கட்டமைப்பு மற்றும் விசேட கட்டமைப்பென இரு கட்டங்களாக நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. நிர்மாணப் பணிகளின் 19.5% நிறைவு செய்யப்பட்டுள்ளது.

புதிய வேலைத்தள கட்டிட தொகுதி

துறைமுக உட்பிரவேச அதிவேக மேம்பால செய்திட்டம் காரணமாக, இலங்கை துறைமுக அதிகார சபையின் வேலைத்தளங்களை மீளமைத்து வேண்டியுள்ளதோடு 4 கட்டிடங்கள் உள்ளடங்கிய வேலைத்தள தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மதிப்பிடப்பட்ட செய்திட்டத்தின் ஆகுசெலவு ரூபா 1090 மில்லியன்கள் ஆவதோடு (நிகழாவற்றுக்கான செலவு, குத்தகை மற்றும் விலை அதிகரிப்பு ஆகியன தவிர்ந்து) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியை பயன்படுத்தி இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் செயற்படுத்தப்படவுள்ளது.

ஒப்பந்தக்கார கம்பனியான BEL – DGES JV யிடம் கையேற்கும் கடிதம் 2021 ஆகஸ்ட் 06 ஆம் திகதி வழங்கியுள்ளதோடு அதன் பணிகள் 2021 செப்தெம்பர் 09 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நிர்மாணப் பணிகள் 54.04% நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் ஒப்பந்தக்காரரிடம் இது வரையில் விடுவிக்கப்பட்டுள்ள மொத்த நிதி ரூபா 488 மில்லியன்களாகும்.

10. ஒலுவில் துறைமுகம்

தற்பொழுது ஒலுவில் துறைமுகத்தில் அதன் உட்பிரவேச பாதையில் சேற்றுப்படிவுகள் ஒன்று சேரும் சிக்கலுக்கு முகங்கொடுத்துள்ளதோடு, இதன் காரணமாக கப்பல்களுக்கு வணிக துறைமுகத்திற்குள் மற்றும் மீன்பிடி துறைமுகத்திற்குள் உள்நுழைவதற்கு முடியாதுள்ளது. Danish Hydraulic Institute எனும் நிறுவனத்துடன் இணைந்து இது தொடர்பாக

பொறியியலாளர்கள் ஆய்வொன்றை முன்னெடுத்துள்ளதுடன் துரிதமான தீர்வொன்றை மற்றும் துறைமுக செயற்பாட்டு நிலைமையை பேணிச் செலவதற்காக பொறிமுறையொன்று இப்பரிந்துரையில் உள்ளடங்குவதுடன் இதற்கான பாரிய நிதி தொகையொன்று செலவாகின்றது. நிதி மற்றும் தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக எவ்வித செயன்முறையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஒலுவில் துறைமுகத்தை கட்டங்களாக மீன்பிடி துறைமுகமாக அபிவிருத்தி செய்யும் செய்திட்டத்திற்காக 2021.09.22 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மான இல CP/211574/311/023 மூலமாக அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், முதற் கட்டமாக குளிரூட்டி மற்றும் அதனுடன் தொடர்புடைய வசதிகள் மீன்பிடி அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி அமைச்சிடம் கையளிக்கப்பட்ட மீன்பிடி துறைமுக வளாகத்திற்கு மேலதிகமாக, காணி மற்றும் நிருவாக கட்டிடம், உணவகம், பொறியியல் பணியாளர்களிற்கான கட்டிடம், வதிவிட முகாமையாளர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் பொறியியலாளர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லம், வணிக துறைமுகத்திற்குள் உள்ளடங்குவதுடன் அக்கட்டிடங்கள் இதுவரை இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் உள்ளது.

வணிக துறைமுக காணிகள் மற்றும் கட்டிடங்களை குத்தகைக்கு வழங்குவதற்கு தேவையாயின் அபிப்பிராயம் தெரிவித்தல் மற்றும் பிரேரணைகளுக்கான மனுக்கோரல் உள்ளடங்கும் வகையில் போட்டியான விலைமனுகோரும் செயன்முறையை முன்னெடுப்பதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் அமைச்சரவை பத்திர இலக்கம் 22/1787/628/016 மூலம் தற்பொழுது கிடைக்கப்பெற்றுள்ளது. காணி மற்றும் கட்டிடங்களை குத்தகைக்கு விடுவதற்காக முதலீட்டாளர்களின் பிரேரணைகளை பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஆவணங்களை தயாரிக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் அபிவிருத்தி செய்திட்டங்கள் மூலம் இலங்கை இந்திய கடலக வலயத்தினுள் சமுத்திர மற்றும் சேவைகள் வழங்கும் மையமாக ஆக்குவதற்குள்ள அரசாங்கத்தின் அர்ப்பணிபில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. துறைமுகத்தின் இயக்கக் கொள்திறனை விருத்தி செய்தல் பொதுப்பணி வசதிகளை அதிகரித்தல் மற்றும் முதலீட்டினை கவர்ந்து கொள்ளல் மூலம் வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துதல் தொழில் முயற்சிகளை உருவாக்குதல் மற்றும் நாட்டின் பொருளாதார மேம்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.



இயக்க மீளாய்வு

ஆண்டறிக்கை 2022

இயக்கப் பகுதி

உலகளாவிய மற்றும் தேசிய பொருளாதார நெருக்கடிகள் மற்றும் நிலையற்ற அரசியல் சூழ்நிலைக்கு மத்தியிலும், கொள்கலன்கள் கையாளல் பரிமாணம் மற்றும் எதிர்பார்த்த உற்பத்தி திறன் மட்டத்தை பேணிச் செல்வதற்கு இலங்கை துறைமுக அதிகார சபையினால் கூட்டு முயற்சியொன்று முன்னெடுக்கப்பட்டது. பொருளாதார நெருக்கடி, எரிபொருள் பற்றாக்குறை, நாடு முழுவதிலும் ஏற்பட்டிருந்த எதிர்ப்புக்கள் காரணமாக முனைய சேவை ஒப்பந்தங்களை புதுப்பிப்பதற்கான முக்கிய கலந்துரையாடல்களுக்கு மத்தியிலும், வருடாந்த கொள்கலன்கள் கையாளல் பரிமாணம் குறைவடைவதை மட்டுப்படுத்திக்கொள்வதற்கு ஜய கொள்கலன் முனைத்தினால் முடிந்துள்ளது. இந்நெருக்கடி நிலைமையிலும் உயர் தரத்தினாலான சேவைகளை வழங்குதல், செம்மையாக்கலை பேணுவதற்கு மற்றும் வினைத்திறனை உறுதிச்செய்தல் தொடர்பாக இப்பகுதி தனது கவனத்தை செலுத்தியுள்ளது. இதன் விளைவாக 2022 ஆம் ஆண்டில் சாதாரண ஆக்கத்திறனான வளர்ச்சியொன்று ஏற்பட்டுள்ளது.

உலகளாவிய வர்த்தகத்தில் ஏற்பட்ட பணவீக்கத் தாக்கம் ஜய கொள்கலன் முனைய இயக்க செயற்பாடுகளிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. MSC, Ever Green, CMA, CGMA போன்ற பிரதான கப்பல் சேவைகளின் முனைய சேவை ஒப்பந்தங்கள் காலாவதியான காரணத்தினால் உலகளாவிய நெருக்கடி மேலும் சிக்கல் நிலையை அடைந்ததன் காரணமாக இலங்கை துறைமுக அதிகார சபையின் முகாமைத்துவம் மற்றும் பிரதான கப்பல் சேவைகளுக்கிடையே முக்கிய கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன. நாட்டினுள் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஜய கொள்கலன் முனையத்தின் நாளாந்த கையாளல் செயற்பாடுகளுக்கு பாரிய சவால்கள் எதிர்கொண்டதுடன், இயக்க பணிக்குழுவினர் நாளாந்தம் துறைமுகத்திற்கு வருகைத்தருவதற்கான போக்குவரத்து வசதிகளை இலங்கை துறைமுக அதிகார சபையினால் வழங்க நேரிட்டது. அனைத்து தடைகளுக்கு மத்தியிலும், 2021 ஆம் ஆண்டு இலங்கை துறைமுக அதிகார சபையின் முனையங்களினால் கொள்கலன்கள் இருபதின் சம அலகு 1,925,895 கையாளப்பட்டதுடன், சந்தை கொள்ளளவு குறைவடைதல் மற்றும் 2022 ஆம் ஆண்டில் முகங்கொடுக்க நேரிட்ட பல்வேறு சவால்களிற்கு மத்தியில் இதனை விசேட வெற்றியாக கருத முடியும்.

பிரதான கப்பல் சேவைகளின் சாதாரண பாரந்தூக்கிகளின் உற்பத்தித்திறன் மணித்தியாலத்திற்கு பாரந்தூக்கி கையால்கள் அளவு 23.3 ஆக அறியப்பட்டுள்ளதோடு, அது 2021 ஆம் ஆண்டின் உற்பத்தித் திறனுக்கு ஒப்பாக 2.6% அதிகரிப்பொன்றாகும். அதன்படி, 2022 ஆம் ஆண்டு ஊட்டக் கப்பல் சேவைகளில் சாதாரண பாரந்தூக்கிகளின் உற்பத்தித்திறன் மணித்தியாலத்திற்கு பாரந்தூக்கிகள் கையாளல்கள் முறைகள் 20.99 ஆக அறியப்பட்டதோடு, இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.9% வளர்ச்சியாகும். இதன் விளைவாக இலங்கை துறைமுக அதிகார சபையின் முனையங்களின் உற்பத்தித்திறன் மற்றும் செயற்திறன் தொடர்பாக அனுகூலமான வளர்ச்சியொன்று காட்டப்பட்டுள்ளது.

நாட்டினுள் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலைமையிலும் கூட, கப்பல்கள் கையாளல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு தேவையான பணிக்குழுவினை கடமைக்கு வரவழைப்பதற்கு இலங்கை துறைமுக அதிகார சபைக்கு முடிந்துள்ளது. இதன் விளைவாக இலங்கை துறைமுக அதிகார சபையின் நெகிழ்வுத்தன்மை மற்றும் செயற்திறனான சேவைகளை வழங்குவது தொடர்பாக காட்டப்பட்ட அர்பணிப்பினை வெளிக்காட்டி முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் இலங்கை துறைமுக அதிகார சபையின் முனைய உற்பத்தி திறன் மட்டம் 2022 ஆம் ஆண்டில் அதிகரிப்பொன்றினை காட்டியுள்ளது.

2022 ஆம் ஆண்டில், நாட்டினுள் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது முனையங்களுக்கிடையான ட்ரக் வண்டிகள் பரிமாற்றம் (ITT) 52.6% இனால் குறைந்துள்ளது. முனையங்களுக்கிடையேயான ட்ரக் வண்டிகள் பரிமாணத்தை குறைப்பதற்காக முனைய சேவை ஒப்பந்தங்கள் இருந்தும், எந்தவொரு முனையத்திலும் நங்கூரமிடுவதற்காக இடமளித்தல் அல்லது இரண்டு முனையங்களில் சேவையாற்றுவதற்கு (Double Dips) மூன்று முனையங்களுக்குமான ஒப்பந்தமொன்றுக்கு உட்பட்டுள்ளது. இதற்கு

மேலதிகமாக முனையங்களுக்கிடையேயான ட்ரக் வண்டி போக்குவரத்தினை குறைப்பதற்கு மற்றும் முனையங்களுக்கிடையேயான ட்ரக் வண்டிகள் கையாளுவதற்கு ஏற்படும் தாக்கத்தினை குறைப்பதற்காக கப்பல் கம்பனிகள் தமது சேவைகளை மறுசீரமைத்துள்ளது. அனைத்து சவால்களுக்கு மத்தியிலும் தீர்வுகளை தேடுவதற்கு மற்றும் இயக்கங்களின் செயற்திறனை பேணிச்செல்வதற்காக இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் அவர்களின் தரப்பினர்களினால் காட்டப்பட்ட அர்பணிப்பு இதன் மூலம் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் மரபு ரீதியான கப்பற்சரக்குகளை கையாளும் முனையங்களுள் கையாளப்பட்ட உலர் தொகை கப்பற் சரக்குகள் தொன் பரிமாணம் முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 47.3% இனால் குறைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் கையாளப்பட்ட தொன் பிரமாணம் 1,652,453 ஆனதோடு, 2021 ஆம் ஆண்டில் இது 3,140,637 தொன்னாக இருந்தது. கையாளப்பட்ட திரவ தொகை கப்பற் சரக்குகளின் பிரமாணம் குறைந்துள்ளதோடு, தொன் 5,230,059 மற்றும் 2022 ஆம் ஆண்டில் 4,333,670 தொன்கள் கையாளப்பட்டுள்ளது. இது 17.1% குறைவொன்றாகும். 2021 ஆம் ஆண்டில் கையாளப்பட்ட தொன் 857,883 உடன் ஒப்பிடும் போது தொகை பிரிப்பு கப்பற் சரக்குகள் கையாளல்கள் தொன் பிரமாணம் 2022 ஆம் ஆண்டில் தொன் 263,302 கையாளப்பட்டதோடு, இது 69.3% குறைவாகும். 2021 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்தினுள் கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்கு தொன் பிரமாணம் 103,823,774 உடன் ஒப்பிடும் பொழுது 2022 ஆம் ஆண்டில் தொன் 96,169,811 கையாளப்பட்டுள்ளதோடு, இது 7.4% குறைவொன்றாகும். கையாளல் பரிமாணம் குறைவதற்கான காரணமாக கொவிட் 19 தொற்று நிலமை உலகளாவிய பொருளாதாரத்துக்கு தாக்கம் விளைவித்ததோடு, இது இலங்கைக்கும் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியாக குறிப்பிடப்பட முடியும்.

வருடத்தினுள் முகங்கொடுத்த பல்வேறு சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்து இயக்கங்களை தொடர்ச்சியாக பேணிச்செல்வதற்கு மற்றும் தேவையான உற்பத்தித் திறன் மட்டத்தினை பேணிச்செல்வதற்காக இலங்கை துறைமுக அதிகார சபையினால் 2022 ஆம் ஆண்டில் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வழிமுறைகள் பின்வருமாறு;

- எரிபொருள் நெருக்கடி ஏற்பட்ட கால எல்லையில் ஊழியர்களுக்கு கடமைக்கு வருவதற்கிருந்த சிக்கல்களை தவிர்த்துகொள்வதற்காக போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்துதல்.
- எரிபொருள் நெருக்கடி காரணமாக முனைய இயக்கங்களுக்கு ஏற்பட்ட பாதகமான விளைவுகளை குறைத்துக்கொள்வதற்காக 48 மணித்தியால வேலை முறையொன்றை அமுல்படுத்துதல்.
- இலங்கை துறைமுக அதிகார சபையின் ஊழியர்களுக்கு தொடர்ச்சியாக சேவைக்கு வருவதற்காக எரிபொருள் பெற்றுக்கொடுத்தல்.
- உபகரணங்களின் பயன்பாட்டை சிறந்த மட்டத்தில் செயல்படுத்துவதற்கு மற்றும் இயக்க ஆகு செலவினை குறைப்பதற்காக ஜய கொள்கலன் முனையத்தின் (N4) மேம்படுத்தல் தொகுதியை அமுல்படுத்துதல்.
- மேடையில் கொள்கலன் ஏற்றுதல், இறக்குதல் செயற்பாட்டை அதிகரிப்பதற்காக Expert Decking தொகுதியின் கட்டம் 04 இனை அமுல்படுத்துதல்
- இயக்க ஆக்கத்திறனை அடைந்துக்கொள்ளலில் குறிப்பிடத்தக்க தடையாக இருந்த மேடைகளின் மேற்பரப்பு பிரதேசத்தை திருத்துதல்.

சேவை வழங்கல் பகுதி

துறைமுகத்தில் தரையிறக்கப்படும் பூரண கொள்கலன்கள் (FCL), பகுதி நிரம்பிய கொள்கலன்கள் (LCL), தொகை பிரிப்பு, பொதி செய்யப்பட்ட சரக்குகள், மோட்டார் வாகனங்கள் மற்றும் செய்திட்ட கப்பற்சரக்குகள் உள்ளடங்கலான அனைத்து கப்பற்சரக்குகளையும் முறையாகவும், செயற்திறனாகவும் ஒப்படைத்தல் மூலம் மற்றும் கப்பற்சரக்குகளுடன் தொடர்பான ஏனைய சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் சேவை வழங்கல் பகுதி 2022 ஆம் ஆண்டினுள் பாரிய பங்களிப்பொன்றை நிறைவேற்றியுள்ளது.

நாளொன்றின் 24 மணித்தியாலங்கள் முழுவதும் சேவைகள் வழங்குவதே இப்பகுதியின் பிரதான பங்களிப்பாவதுடன், அதன் விளைவான பூரண கொள்கலன்கள் (FCL) இருபதின் சம அலகுகள் 101,322 இனை நேரடியாக கையளிப்பதன் மூலமாக ரூபா 3,826.15 மில்லியன்கள் மொத்த வருமானமொன்றை ஈட்டிக்கொள்ள முடிந்துள்ளது.

கப்பற் சரக்குகளை கையளிக்கும் செயன்முறையை மிகவும் வினைத்திறனுடன் மற்றும் சேவை பெறுனர்களுக்கு நட்பு ரீதியான செயற்பாடொன்றாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக இலங்கை துறைமுக அதிகார சபை பல்வேறு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. ஆவணங்களை எழுத்து மூலம் சமர்ப்பிக்கும் போது மற்றும் கொடுப்பணவு செய்யும் போது ஏற்படும் சிக்கல்களை குறைத்துக்கொள்ளும் பொருட்டு நிறை கொள்கலன்கள்/ பகுதி நிரம்பிய கொள்கலன்களை கையளிப்பதற்காக இலத்திரனியல் செலுத்தல் தொகுதியொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் இப்பகுதியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பகுதி நிரம்பிய கொள்கலன்கள் (LCL) மற்றும் பல்வேறு நாடுகளுக்குச் சொந்தமான மீள் ஏற்றுமதி கொள்கலன்கள் (MCC) இருபதின் சம அலகுகள் 19,156 மில்லியன்கள் கொள்கலன்கள் கையாளும் நிலையத்தில் கையாளப்பட்டதுடன், அதன் மூலம் ரூபா 389.04 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. பகுதி நிரம்பிய கொள்கலன்கள் மற்றும் தொகை பிரிப்பு கப்பற் சரக்குகளை கையளிக்கும் கட்டணமாக ரூபா 1,560.90 மில்லியன்கள் ஈட்டப்பட்டுள்ளது. பல்வேறு நாடுகளுக்குச் சொந்தமான மீள் ஏற்றுமதி கொள்கலன்கள் மற்றும் விசேட வகையான கப்பற்சரக்குகளை பொதிசெய்தல் மற்றும் வெற்றாக்கும் செயற்பாடுகள் மூலமாக ரூபா 307.05 மில்லியன்கள் மற்றும் ரூபா 77.13 மில்லியன்கள் ஈட்டிக்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, வெற்று கொள்கலன்களிற்கான தாமதக் கட்டணம் மற்றும் மீள் ஏற்றுமதி கொள்கலன்கள் மற்றும் கொள்கலன்களின் தன்மையை மாற்றுதல் மூலமாக ரூபா 381.10 மில்லியன்கள் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

கொள்கலன்கள் கையாளல் நிலைய (CFS-V) களஞ்சியத்தை திருத்தியமைத்தல் மூலம் பிணைமுறி கப்பற்சரக்குகளுக்கான களஞ்சிய வசதிகள் விஸ்தீரணமாவதுடன் அதன்மூலம் பிணைமுறி வியாபாரத்தில் அதிகரிப்பொன்று ஏற்பட்டதோடு, அதன் மூலம் ரூபா 119.51 மில்லியன் வருமானமொன்று பெறப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட இலங்கை துறைமுக முகாமைத்துவ சேவைகள் மற்றும் ஆலோசனை கம்பனி ஊடாக கழிவு இரும்பு, அகற்றப்பட்ட எண்ணெய், பயன்படுத்தப்பட்ட டயர் ஆகியவற்றை விற்பனை செய்ததன் மூலமாக ரூபா 17.84 மில்லியன் மேலதிக வருமானமொன்று ஈட்டப்பட்டதோடு, கைவிடப்பட்ட கப்பற் சரக்குகள் மற்றும் கழிவு கப்பற் சரக்குகளை அகற்றுவதற்கு விலைமனு கோருவதூடாக பகிரங்க ஏலத்தின் மூலம் ரூபா 315.21 மில்லியன் மொத்த வருமானமொன்று ஈட்டப்பட்டுள்ளது.

2022 ஆண்டினுள் சரக்குகள் அகற்றிச் செல்லும் முகவர் நிறுவனங்களுக்கு புதிதாக 79 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதோடு, ரூபா 48.44 மில்லியன் மொத்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளதோடு, மொத்தமாக 1267 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 1188 அனுமதிப்பத்திரங்கள் புதுபிக்கப்பட்டுள்ளன. வாப்பு இலிகிதர்களுக்கான "A", "B" வகையான மற்றும் பசளைகளை அகற்றுவதற்கான அனுமதிபத்திரங்களை வழங்குதல் மற்றும் புதுபித்தல் மூலமாக ரூபா 7.82 மில்லியன் மொத்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. ஆண்டினுள் வழங்கப்பட்ட மற்றும் புதுபிக்கப்பட்ட மொத்த "A" அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 2664 என அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் "B" அனுமதிபத்திரங்களின் எண்ணிக்கை 257 மற்றும். பசளைகளை அகற்றிக்கொள்வதற்காக 12 அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

2022 ஆண்டினுள் சேவைகள் வழங்கும் பகுதியினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட சேவைகள் மூலம் ஈட்டப்பட்டுள்ள வருமானம் ரூபா 7,050.33 மில்லியன் ஆகும்.

2022 ஆம் ஆண்டில் சேவை வழங்கல் பகுதிக்கு துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் ஊடாக வாடிக்கையாளர்களிடம் கட்டணம் அறவிடுவதை கைவிடும்

146 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. இவற்றுள் 67 விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்டதுடன் அவற்றுள் 4 நிராகரிக்கப்பட்டன. எஞ்சிய விண்ணப்படிவங்கள் கட்டணங்களை கைவிடும் குழுவின் மற்றும் அமைச்சின் அங்கீகாரம் கிடைக்கும் வரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

- இலத்திரனியல் முறை ஊடாக ஆவணங்களை சமர்ப்பித்தல், இலங்கை சுங்கத்திலிருந்து இலத்திரனியல் முறை மூலமாக மற்றும் இலத்திரனியல் முறையில் செலுத்தல்களை மேற்கொள்வதற்கான வசதிகள் ஊடாக கடதாசி பாவனையின்றி இலத்திரனியல் முறையில் பூரண கொள்கலன்களை ஒப்படைக்கும் செயற்பாடு அறிமுகப்படுத்தல்.

- இலங்கை துறைமுக அதிகார சபையின் பணியினரை குறைத்து வாடிக்கையாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்துவதற்கு பல்வேறு நாடுகளுக்குரிய மீள் ஏற்றுமதி கொள்கலன்களை ஒன்று திரட்டுதல் மீள அடுக்குதல் மற்றும் வெற்று கொள்கலன்களை அகற்றும் செயற்பாடு தொடர்பாக இணையவழி ஆவணங்களை பொறுப்பேற்றல்.

- கப்பற்சரக்குகளை களஞ்சியப்படுத்தும் நெஸ்ட்டேனர் களஞ்சியங்களின் உபயோகத்தினை அதிகரிப்பதனூடாக களஞ்சியப்படுத்தும் கொள்ளளவை அதிகரித்தல்.

- பிணைமுறிக் களஞ்சியங்களின் வெப்பக் கட்டுப்பாட்டு பிரதேசத்தை விஸ்தரித்தல், இராக்கைகளை குறைந்த எண்ணிக்கையில் பொருத்துதல் மூலம் இடப்பிரமானத்தை அதிகரித்தல் மற்றும் பட்டியல் பொருட்கள் ஆவணத்தை செம்மையாக பேணிச்செல்வதற்காக அனைத்து பிணைமுறி கப்பற் சரக்குகளுக்கு, கப்பற்சரக்கு களஞ்சியப்படுத்தும் பத்திரங்களுக்கு ‘‘கார்ட்’’ முறையொன்று அறிமுகப்படுத்தல்.

- பிணைமுறி கப்பற் சரக்கு கையாளலை மேம்படுத்தி பிணைமுறி களஞ்சிய முகாமைத்துவ தொகுதியை ஆரம்பித்தல்.

- கையாளல் மேடை பிரதேசம் உள்ளடங்கலாக, அனைத்து களஞ்சியங்களிலும் CCTV கமெரா தொகுதியொன்று பொருத்துவதோடு, அதன் மூலம் கப்பற் சரக்குகள் காணாமற்போதல் மற்றும் சிதைவடைவதை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதனூடாக சேவைகள் பெறுனர்களின் திருப்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- களஞ்சிய கையாளல்களில் உற்பத்தித்திறன் மட்டத்தை மேம்படுத்துவதற்கு பண்டாரநாயக்க பாலத்திலுள்ள கொள்கலன்களை வெற்றாக்குதல் / கொள்கலன்களில் அடைத்தல், டிரேலர் முறையில் கையாளல்களை மேற்கொள்வதற்கான வசதிகளை அதிகரித்தல் மற்றும் பண்டாரநாயக்க துறைமேடை களஞ்சிய தொகுதியின் காரியாலய ஓய்வறைகளை திருத்துதல் மற்றும் ஏனைய பொது வசதிகளை திட்டமிடுவதன் மூலமாக அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்தல்.

- பகுதி நிரம்பிய கொள்கலன்களை கப்பல்களில் ஏற்றும் முன்னோடி கப்பல் நிறுவனங்கள் மூலமாக ஏற்றுமதியை 24 மணித்தியாலங்களிற்குள் முன்னெடுக்கும் கடுகதி சேவையொன்றினை கொள்கலன் கையால் நிலையம் I இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கையாளப்படும் கப்பற் சரக்குகளின் பரிமாணத்தை சடுதியாக அதிகரிக்கும் நோக்கில் துறைமுக வளாகத்திற்குள் ஏற்றுமதி செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலமாக பெருமளவிலான கப்பல் முகவர்களை கவர்ந்துக்கொள்ளும் பொருட்டு இப்புதிய சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கப்பலோட்டப் பகுதி

வழிகாட்டிச் சேவை

மீளாய்வுக்குட்பட்ட 2022 ஆம் ஆண்டினுள் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்த அனைத்து வகை கப்பல்கள் தொடர்பாக வாரத்தில் அனைத்து தினங்களிலும் 24 மணி பூராகவும் வழிகாட்டி சேவைகள் வழங்கப்பட்டன.

பிரதான இழுவைக்கல அதிபர் பிரிவு

மீளாய்வாண்டினுள் இழுவைக் கல அதிபர் பிரிவு கப்பல்கள் தொடர்பாக செயற்றிறனாக மற்றும் தொடர்ச்சியாக இழுவைக் கல சேவைகளை வழங்கி சிறப்பாக பணியாற்றியுள்ளது.

கப்பல்கள் அங்குமிங்கும் கொண்டு செல்வதற்காக போதியளவு இழுவைக் கலங்கள் நாளாந்தம் ஈடுபடுத்தப்பட்டுள்ளதோடு, அவசர தேவைப்பாடுகளுக்காக ஒரு இழுவைக் கலம் காத்திருப்பு சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தினுள் நங்கூரமிடும் இழுவைக் கலங்கள் மொத்தமாக 17,511 பயணங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு, இதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் இழுவைக் கலங்களின் 9,490 பயணங்களும், வாடகை இழுவைக் கலங்களின் 8,021 பயணங்களும் உள்ளடங்குகின்றன. இழுவைக் கலங்கள் வழங்குவதனூடாக ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 1,584 மில்லியன்களாகும்.

பிரதான பொறியியல் அலுவலர் பிரிவு

ஆளணியினர்

2022 ஆம் ஆண்டினுள் அனைத்து இழுவைக் கலங்கள், வழிகாட்டிக் கலங்கள் மற்றும் மூவரின் மிதவைக் கலங்களின் இயக்கங்கள் மற்றும் திருத்தும் பணிகளுக்கு அமைவாக ஆளணியினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கலங்களை இழுத்துச் செல்லல், வழிகாட்டி சேவைகள் மற்றும் இயக்கங்களுக்கு தேவையான கலங்களின் அன்றாடம் ஈடுபடுத்தப்படுகின்ற நாளாந்தப் பயணங்களுக்கு மேலதிகமாக இப்பிரிவின் ஆளணியினரால் அன்றாடம் நிறைவேற்றப்பட வேண்டிய பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

முகாமைத்துவத்தின் சிபாரிசின் மீது, வேலைத்தளத்திற்கு தேவையான கருவிகள் வழங்குவதோடு, இழுவைக் கலங்களின் அன்றாட பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு பிரதான பொறியியல் அலுவலகர் பிரிவு செயற்படுகிறது.

துறைமுக தீயணைப்பு படைப்பிரிவு (PFB)

எமது தீக்காப்பு நியமங்கள் அனுசரிக்கப்பட்டு பேணப்பட்டு, தீப்பற்றும் சம்பவங்கள் மற்றும் ஏனைய சடுதியான ஆபத்துக்களினால் ஏற்படுகின்ற பாதிப்புகளை கட்டுப்படுத்தி 2022 ஆம் ஆண்டினுள் தீயணைப்பு படையினால் அவசர சேவைகள் செயற்றிறனாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

2022 பிஸ்கல் ஆண்டினுள் (Fiscal year) துறைமுக தீயணைப்பு படையினால் தீப்பற்றும் சம்பவங்களுக்கு 2,336 விளைவுகள் காட்டப்பட்டுள்ளதோடு, அதன் மூலம் 97 மில்லியன் வருமானமொன்று ஈட்டப்பட்டுள்ளது.

துறைமுக காப்பு பிரிவு

அபாயகரமான கப்பற் சரக்குகளை பாதுகாப்பாக கையாள்வது கொழும்பு துறைமுகத்தின் பொறுப்பாகும். அதிவெப்ப வேலைகளுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொடுப்பதற்கு முன் வேலைத்தளங்களை பரிசீலித்தல் மேற்கொள்ளப்படுவதோடு, சட்டவிரோதமான அதிவெப்ப வேலைகள் தொடர்பான சம்பவங்கள் அறியப்பட்டு, அவற்றை நிறுத்துவதற்கு நடவடிக்கை

எடுக்கப்பட்டுள்ளது. மேலும், கடல் மாசடைதல் தொடர்பாகவும் பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல்வேறு நபர்களினால் மற்றும் கடலக கலங்களினால் ஏற்படுத்தப்படுகின்ற கடல் மாசடைதல் தொடர்பான பரிசீலனைகள் துறைமுகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த வருத்தினுள் அனைத்து துறைமுகங்களுக்கும் 5,933 கப்பல்கள் வந்துள்ளதோடு, அவற்றுள் உள்நாட்டின் அபாயகரமான கப்பற் சரக்குகள் 217,655.786 மெற்றிக்தொனகளும் மற்றும் மீள் ஏற்றுமதி கப்பற் சரக்குகள் 766,198.572 மெற்றிக்தொன்களும் தரையிறக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, மீள் ஏற்றுமதி அபாயகரமான கப்பற்சரக்கு கொள்கலன்கள் 48,263 கையாளப்பட்டுள்ளது. எண்ணெய் போக்குவரத்து கப்பல்கள் 250 கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகத்திற்கு வந்துள்ளதோடு, திரவப் பேற்றோலியம் வாயு மெற்றிக்தொன் 315,075.164 எரிவாயு எண்ணெய் / Jet Ai / கெசொலின், கப்பல் எண்ணெய் 2,230,259.038 மெற்றிக் தொன்னும், மசகு எண்ணெய் 644,948.836 மெற்றிக் தொன்னும், எரிபொருள் எண்ணெய் 559,051.014 மெற்றிக் தொன்னும், சுத்திகரிக்கப்படாத எண்ணெய் (Base Oil) 9,428.645 மெற்றிக் தொன்னும் தரையிறக்கப்பட்டது.

தீவிரமாக வெடிக்கக் கூடிய பொருட்கள் (GPIE) 81,322 மெற்றிக் தொன்னும் மற்றும் வெடிக்கும் தன்மையுடைய பொருட்கள் (GPIAE/IIE) 15273.90 மெற்றிக் தொன்னும் கையாளப்பட்டுள்ளது. துறைமுக தீயணைக்கும் படையின் உதவியுடன் இரசாயனப் பொருட்கள் கசிதல் தொடர்பான சம்பவங்களை தடுத்தல் மற்றும் பல தீயணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உதவி துறைமுக காப்பு பரிசோதகர்களின் உதவியோடு, ஆபத்தான கப்பற் சரக்குகள் களஞ்சியங்கள் உட்பட களஞ்சியங்களை பரீட்சித்தல் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டன. உயர் வெப்ப வேலைகளுக்காக அங்கீகாரம் வழங்குவதற்கு தேவையான பரிசீலனைகள் மற்றும் சமுத்திரங்கள் மாசடையும் சம்பவங்கள் ஏற்படுவதை பரீட்சித்தல் மற்றும் சமுத்திர மாசடைவு சம்பவங்களை தடுப்பதற்காக வழிகாட்டுதல் மற்றும் குறித்த பணிகள் தொடர்பாக அவதானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக கைத்தொழில் மற்றும் சமுத்திரங்களின் சடுதியான விபத்துகள் தொடர்பாக விசாரணைகள் நடாத்தப்படுகின்றன. தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் பாவிக்கப்படுகின்றதா என்பதை கவனத்திற் கொண்டு, கப்பலோட்டப் பகுதிக்கு இணைக்கப்பட்டுள்ள மூவரின் குழுக்களின் பாதுகாப்பு தொடர்பாக கண்காணிக்கப்படுகின்றது. இது தொடர்பாக மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலையினால் பயிற்சி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

உதவி துறைமுக காப்பு பரீட்சகர்களின் உதவியோடு திரவப் பெற்றோலிய வாயு மற்றும் பெற்றோலியம் எண்ணெய்கள் தரையிறக்கல் நடவடிக்கைகள் நித்தம் கண்காணிக்கப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக் காரர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற கழிவுகள் மற்றும் மாசடைந்த எண்ணெய் (Sludge Oil) அகற்றும் நடவடிக்கைகள் சமுத்திர சூழல் மாசடையும் அதிகாரசபை (MEPA) உடன் இணைந்து நித்தம் கண்காணிக்கப்படுகின்றன.

ஜயகொள்கலன் முனையத்தில் மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையத்தில் அபாயகரமான கப்பற் சரக்குகள, அடுக்கி வைத்தல் உதவி துறைமுக காப்பு பரீட்சகர்களின் உதவியோடு தொடர்ச்சியாக பரீட்சிப்புக்கு உட்படுத்தப்படுகின்றது. அபாயகரமான கப்பற் சரக்குகள் வெளிப்படுத்தப்படாத கப்பல் முகவர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கரையோர வெளிச்ச வீட்டுப் பிரிவு

சர்வதேச கப்பல் மார்க்கங்கள் ஊடாக நீடிக்கப்பட்ட மேற்கு மற்றும் தெற்கு கரையோரங்களில் அமைந்துள்ள வெளிச்ச வீடுகள் முறையாக பராமரிக்கப்படுகின்றன.

பிரவேச ஓடைப்பாதைகளிலுள்ள மிதப்பிகள்

துறைமுகம் அதன் மிதப்பிகளை பரீட்சித்து பராமரிக்கப்பட்டு ஏதாவது பழுதுபார்ப்பு நிலைமைகள் இருப்பின் அது தொடர்பாக சுற்று நிருபங்கள் மூலம் லங்கா கப்பல் முகவர்களின்

நிறுவனம் (CASA), இலங்கை கப்பல் முகவர்களின் நிறுவனம் (SLAVO) மற்றும் இலங்கை கப்பல் உரிமையாளர்களின் சங்கம் LASO ஆகியவற்றிற்கு எச்சரிக்கைகள் விடுக்கப்படும்.

துறைமுகத்தினுள் 2022 ஆம் ஆண்டில் வெளிச்சவீட்டுக் கட்டணங்களாக ரூபா 1,888 மில்லியன் தொகை ஈட்டப்பட்டுள்ளது.

துறைமுக கலப் பிரிவு

கொழும்பு துறைமுகத்தில் கலங்களை பாதுகாப்பாக கட்டி வைப்பதற்கு மற்றும் விடுவிப்பதற்கான சான்றிதழ்கள் வழங்கும் பொறுப்பு துறைமுகக் கலப்பிரிவு தொடர்பாக மூவரின் குழுக்கள் மற்றும் பணியினர்களை வழங்குதல் மற்றும் ஒத்துழைப்பு நல்குவதற்கு துறைமுக கலப்பிரிவு நடவடிக்கை மேற்கொள்கின்றது.

நீரியல் ஆய்வுப் பிரிவு

இப்பிரிவின் நில அளவையாளர்களினால் இலங்கை துறைமுக அதிகாரசபை துறைமுகங்களின் கோரிக்கைகளுக்கு காணிகள் அளவீட்டுப் பணிகள், நீரியல் ஆய்வு சேவைகள் பெற்றுக்கொடுக்கப்படுவதோடு, கொழும்பு, காலி, திருகோணமலை, காங்கேசன்துறை, ஒலுவில் ஆகிய துறைமுகங்கள் தொடர்பாக பல்வேறு ஆய்வுகளின் மீது அடிப்படையான நடவடிக்கைகள் இப்பிவிரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. துறைமுக தடாகம் மற்றும் மிதப்பிகள் அமைந்துள்ள பிரதேசம் தொடர்பாக ஆய்வுகள் நடாத்துதல், செய்திட்டம் தொடர்பான ஆலோசனை நடவடிக்கைகள் ஒன்றிணைந்த ஆய்வு நடவடிக்கைகள் குத்தகை வாடகை ஒப்பந்தங்கள் தொடர்பான ஆய்வுகள் திட்டமிடும் நடவடிக்கைகள் ஓத அலைகள் மற்றும் கால நிலை தரவுகள் நிலையத்தை அவதானித்தல் மற்றும் பராமரித்தல், காணிகள் அனுமதியின்றி பெற்றுக்கொள்ளல் தொடர்பான ஆய்வுகள், உத்தேசித்த பாதைகள் மற்றும் புகையிரத பாதைகளை கையகப்படுத்தல் தொடர்பான கூட்டங்கள் பயணிகள் போக்குவரத்து முனையம் தொடர்பான மாதிரி வரைபடங்கள் தயாரித்தல், மீள் குடியேற்றல் ஆய்வுகள் தொடர்பான ஆவண நடவடிக்கைகள் மற்றும் காணிகள் தொடர்பான குத்தகை வாடகை திட்டம் இப்பணிகளுள் உள்ளடங்குகின்றன.

கடலகப் பிரிவு

கப்பல்களுக்கு பொருட்கள் வழங்குவோர், மிதவைக் கலங்கள் இயக்குனர்கள், சமுத்திர ஆய்வாளர்கள், சிறு மற்றும் மத்திய பரிமாண திருத்தும் வேலைத்தளங்கள், எண்ணெய் மற்றும் எண்ணெய் கலந்த நீர்க் கழிவுகளை அகற்றும் வசதிகளை ஏற்படுத்தும் நபர்கள் உள்ளடங்கலாக பல்வேறு கடலக நிறுவனங்களுக்கு வருடாந்தம் பதிவு செய்தல் மற்றும் அனுதிப்பத்திரங்கள் வழங்குதல் இப்பிரிவின் பொறுப்பாகும். வருடத்தினுள் 446 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதோடு, இதன் மூலம் 44.5 மில்லியன் ரூபா வருமானமொன்று ஈட்டப்பட்டுள்ளது.

இயந்திர வேலை பொறியியல் பகுதி

அனைத்து துறைமுகங்களின் கட்டமைப்புகள் மற்றும் துறைமுகங்களின் இயக்கம் மேற்கொள்ளுகின்ற/ இயக்கங்கள் மேற்கொள்ளப்படாத இயந்திர மற்றும் உபகரணங்களின் கட்டமைப்பு செயற்பாடுகளை பேணுதல் இயந்திர உபகரண வேலை பொறியியல் பகுதியின் பிரதான பணிகளாகும்.

நங்கூர இழுவைக்கலம், வழிகாட்டிக்காலம், சேறுவாரிக்கலங்கள் மற்றும் ஜய கொள்கலன் முனையத்தின், ஐக்கிய கொள்கலன் முனையத்தின் மற்றும் கிழக்கு கொள்கலன் முனையத்தின் அனைத்து கொள்கலன் கையாளல் உபகரணங்களில் மற்றும் சிறு கொள்கலன் போக்குவரத்து ட்ரேலர் வண்டிகளின் அனைத்து கட்டமைப்புக்களையும் திருத்துவதற்கான சேவைகளை வழங்குதல், உருக்கினால் அமைக்கப்பட்ட கட்டிடங்கள், களஞ்சியங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்களை புதிதாக நிர்மாணித்தலும், பழைய உருக்கினாலான கட்டிடங்கள் சார்ந்த கட்டமைப்புக்களையும் கழற்றி அகற்றுவதும் நடைபெறுவதோடு, நங்கூர இயக்க உபகரணங்கள் கடலகக் கலங்கள் மற்றும் அனைத்து துறைமுக மற்றும் துறைமுகம் சார்ந்த

நடவடிக்கைகளிலும் இயக்கத் தேவைகள் தொடர்பான ‘‘கிரப்’ கலங்களில் சங்கிலிகள் மற்றும் கொழுக்கிகளை பரீட்சித்தல் மற்றும் பராமரித்தலும் இப்பகுதியினால் நிறைவேற்றப்படுகின்றன.

இவ்வாண்டினுள் இப்பகுதியினால் நிறைவு செய்யப்பட்ட பிரதான மற்றும் சிறு பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- ஜய கொள்கலன் முனையத்தின் புதிய பிரதான களஞ்சிய கட்டடத்திற்கான கட்டமைப்பினை தயாரித்தல் மற்றும் அமைத்தல்.
- ஜய கொள்கலன் முனையத்தின் / ஐக்கிய கொள்கலன் முனையத்தின் கொள்கலன் பாரந்தூக்கிகளின் பிரதான கட்டமைப்பை புதுப்பித்தல்.
- ஐக்கிய கொள்கலன் முனையத்தின் எண்ணெய் குழாய்களை நீளமாக்குதல்.
- பயன்படுத்த இயலாத பழைய கதவுகளிற்கு பதிலாக வேறு கதவுகளை பொறுத்துதல் மற்றும் அறைகளை வேறாக்குதல் உள்ளடக்கலாக பண்டாரநாயக்க மேடையின் களஞ்சியத்தை புனரமைத்தல்.
- இலங்கை துறைமுக அதிகார சபையின் மத்திய சமையலறையிலிருந்து புகையை வெளியேற்றுவதற்கான குழாய்யை புதுப்பித்தல்.
- பண்டாரநாயக்க மேடையில் நலன்புரி கட்டடத்தின் படிகட்டுக்களை நிர்மாணித்தல்
- ஜய கொள்கலன் முனையத்திலிருந்து ஐக்கிய கொள்கலன் முனையம் வரையில் கொண்டுவருவதற்காக TT16 மற்றும் TT17 ஆகிய பரிமாற்று பாரந்தூக்கிகளின் கட்டமைப்பை மாற்றுதல்
- பேலியகொட கொள்கலன் கையாளல் மத்திய நிலைய களஞ்சிய பிரதேசத்தை புனரமைத்தல்
- ‘‘கதிர்காமம்’’ மற்றும் ‘‘நுவரெலியா’’ விடுமுறை விடுதிகளை புனரமைத்தல்.
- பட்டறைகளில் வாயுவினால் இயங்குகின்ற அகற்றி வேறு இடங்களில் பொருத்துதல்
- சமர்ஹில் பிரதேசத்தில் உள்ள உணவு சமைக்கு எண்ணெய் குழாய்யை வேறொரு இடத்தில் பொருத்துதல்.
- பேரே பிரதேசத்தில் உள்ள பாதுகாப்பு பயிற்சி கட்டிடத்தை புனரமைத்தல்.
- சைக்கிள்களை நிறுத்தி வைப்பதற்கான கொட்டகைகளை அமைத்தல்.
- ஜய கொள்கலன் முனையத்தின் I மற்றும் II பிரதேசங்களில் மின் கம்பங்களின் உயரத்தை அதிகரித்தல்.

மேற்குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு மேலதிகமாக, இலங்கை துறைமுக அதிகார சபையின் ஏனைய பகுதிகளினால் கோரப்படுகின்ற அனைத்து திருத்த பணிகள், புனரமைப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் இப்பகுதியினால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இயந்திர உபகரண பொறியியல் பகுதி

அனைத்து வகையான இயக்க இயந்திர உபகரணங்கள், வாகனங்கள் மற்றும் உபகரணங்களை உரிய தரத்தில் பேணுகின்றமைக்கான உறுதிப்பாட்டை வழங்குவது இலங்கை துறைமுக அதிகார சபையின் இயந்திர உபகரண பொறியில் பகுதியின் பொறுப்பாகும். கென்றி பாரந்தூக்கிகள் பராமரிப்பு அலகு, கப்பற்சரக்குகளை கையாளுகின்ற உபகரணங்களை பராமரிக்கும் இரு அலகுகள் (02), மோட்டார் கராஜ் மற்றும் டீசல் என்ஜின் திருத்தும் அலகு மற்றும் போக்குவரத்து பிரிவு உள்ளடங்கலாக 09 பிரிவுகளை இப்பகுதி உள்ளடக்குகின்றது. மொபைல் கிரேன், மண் அகழ்வு இயந்திரம் மற்றும் கட்டட நிர்மாண உபகரணங்களை பராமரித்தல் மற்றும் கண்காணித்தல் ஆகிய பணிகள் இப்பகுதியினால் முன்னெடுக்கப்படுகின்றது.

இலங்கை துறைமுக அதிகார சபையின் வாகனங்களை குத்தகை வாடகைக்கு எடுத்தல் / குத்தகைக்கு விடுதல் மற்றும் பயன்பாட்டிலுள்ள எண்ணெய் தாங்கி தொகுதிகள் இரண்டினதும் குத்தகை வாடகைக்கு விடுதல் மற்றும் பராமரிப்பு செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்தல் இப்பகுதியின் பொறுப்பாகும்.

2022 ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட பிரதான செய்திட்டங்கள்

- கப்பற்சரக்குகள் கையாளுவதற்காக தொன் 45 இன் மூன்று (03) Reach Stackers உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதோடு துறைமுக தீயனைப்பு அலகுக்கு புதிய தீயணைப்பு ட்ரக் வண்டியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

- கிழக்கு கொள்கலன் முனையத்தின் இயக்க செயற்பாடுகளிற்கு தேவையான 12 கப்பலிலிருந்து கரைவரை இயக்கங்களை மேற்கொள்ளுகின்ற பாரந்தூக்கிகள் மற்றும் பீலி மீது பொருத்தியுள்ள 40 தன்னியக்க பாரந்தூக்கிகளின் பெறுகை செயற்பாடு முன்னெடுக்கப்படுவதுடன் அவற்றின் உற்பத்தி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிவில் பொறியியல் பகுதி

துறைமுகம் தொடர்பான கட்டமைப்புக்கள், வசதிகள் வழங்கும் கட்டிடங்கள், இலங்கை துறைமுக அதிகார சபையின் உத்தியோகபூர்வ இல்லங்கள், துறைமுக தடாகத்தின் ஆழம் பிரவேசப் பாதையின் பராமரிப்பு நடவடிக்கைகளை பேணிச்செல்லல், உள்ளக பாதைகள், கொள்கலன் முனையங்கள், மேடைச்சுவர்கள், நீர் வழங்குதலை பராமரித்தல் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபையின் பங்காளர்களுக்கான ஏனைய பல்வேறு சேவைகள் வழங்குதல், அதேபோன்று நாட்டில் பல பிரதேசங்களில் அமைந்துள்ள வெளிச்ச வீடுகளை பராமரித்தல் உள்ளடங்கலாக இலங்கை துறைமுக அதிகார சபையின் கீழ் நிருவகிக்கப்படும் அனைத்து துறைமுகங்களுக்குரிய சமுத்திரக் கட்டமைப்புக்களை பராமரிக்கும் சேவைகளை பெற்றுக்கொடுத்தல் சிவில் பொறியியல் பகுதியின் பிரதான பொறுப்புகளாகும்.

விலைகோரல் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், பொருட்கள் கொள்வனவு செய்தல், நிர்மாணித்தல் பணிகளை மேற்பார்வை செய்தல், தரக்கட்டுப்பாட்டை உறுதிச்செய்தல் மற்றும் உள்ளக ஊழியர்களின் அறிவை பயன்படுத்தி நிர்மாண திட்டங்கள் மற்றும் சிறு புதிய நிர்மாணப்பணிகள் தொடர்பாக ஒப்பந்த முகாமைத்துவம் செய்தல் உட்பட செய்திட்ட முகாமைத்துவம் செய்தல் மற்றும் அமுல்படுத்துதல் சிவில் பொறியியல் பகுதியினால் செயற்படுத்தப்படுகிறது. பிரதான சிவில் பொறியியல் பராமரிப்பு நடவடிக்கைகளை அடையாளங்காணப்பட்ட தேவைப்பாடுகளுக்கேற்ப பூர்வாங்கமாக திட்டமிடப்படுவதோடு, சிறு சிவில் பராமரிப்பு பணிகள் உள்ளக ஊழியர்களினால் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு மேலதிகமாக திண்ம கழிவு முகாமைத்துவ தொகுதியொன்று இப்பகுதியினால் வெற்றிகரமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

சிவில் பொறியியல் பகுதியினால் 2022 ஆம் ஆண்டினுள் பிரதான புனரமைப்பு திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு, நவீனமய செய்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஜய கொள்கலன் முனைய மேடையை புனரமைத்தல் CFS 1 களஞ்சியம் தொடர்பாக புதிய நீர் இரைக்கும் நிலையமொன்றுடன் புதிய தீயணைக்கும் தொகுதியொன்றை பொருத்துதல், கொழும்பு துறைமுகத்தின் எல்லை மதிலை திருத்துதல், பண்டாரநாயக்க மேடை களஞ்சிய வசதிகளை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல், உத்தேசித்த பிரதான களஞ்சிய கட்டிடத்தை நிர்மாணித்தல், ஐக்கிய கொள்கலன் முனையத்தில் எண்ணெய் குழாய்களை இடுதல் மற்றும் நீர் கோபுரங்களை திருத்துதல் மற்றும் வர்ணம் தீட்டுதல் இவற்றினுள் உள்ளடங்குகிறது.

மின்சாரம் மற்றும் இலத்திரன் பொறியியல் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிருவாகத்தின் கீழுள்ள அனைத்து துறைமுகங்களினதும் மின்சாரம், மின்னனுசக்தி மற்றும் தொடர்பாடல் ஆகிய துறைகளிலுள்ள சகல பொறியியல் செய்திட்டங்கள் மற்றும் வசதிகளை திட்டமிடுதல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் அமுல்படுத்துதல் மின்சாரம் மற்றும் இலத்திரன் பொறியியல் பகுதியின் பொறுப்பாகும்.

துறைமுக கையாளல் பகுதிகளுடன் தொடர்புடைய அனைத்து வகை சேவைகள் 95% ஐ விட அதிகளவில் பேணிச்செல்வதற்காக மின்சாரம் மற்றும் தொடர்பாடலுடன் தொடர்பான அனைத்து சேவைகளையும் பேணிச் செல்லும் பொருட்டு பிரதான பொறியியளாளர், பிரதி பிரதான

பொறியியலாளர்கள் இருவர் மற்றும் மூன்று மின் கண்காணிப்பு பொறியியளாளர்களின் கீழ் உயர் தகுதிகளைக் கொண்ட தொழிற்சார் மட்டத்தில் மின் பொறியியலாளர்கள் குழுவொன்றினால் 24 மணித்தியாலங்கள் பூராகவும் செயற்படுத்தப்படும்.

மின்சாரம் மற்றும் இலத்திரன் பொறியியல் பகுதியின் விடயதானத்தின் கீழ் பின்வரும் பணிகள் 2022 ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

- உயர் மின்னழுத்தம் மற்றும் குறைந்த மின்னழுத்தத்துடன் கூடிய மின்சக்தியை பகிர்ந்தளித்தல் தொடர்பான பொறியியளாளர் திட்டம், கிழக்கு கொள்கலன் முனையத்தின் தரவுகள் வலையமைப்பு மற்றும் CCTV கட்டமைப்பை ஒழுங்குபடுத்தல் மற்றும் அமுல்படுத்துவதற்கு விலைமனு கோருவதை முன்னெடுத்தல்.
- ஜய கொள்கலன் முனையத்தில் கட்டம் 01 இல் 11 கிலோ வோல்ட் மின் ஆளி பலகை மற்றும் ஜய கொள்கலன் முனையத்தில் கட்டம் 02 இல 3.3 கிலோ வோட் ஆளி பெனல் பலகையை அகற்றிவிட்டு புதிதாக பொருத்துதல்.
- ஜய கொள்கலன் முனையத்தின் 5 ஆம் கட்டத்தில் புதிய மின் உப நிலையத்தில் 11 கிலோ வோல்ட் மின் சக்தியை பகிர்ந்தளிக்கும் ஆளி பலகையை பொருத்துதல் மற்றும் பரிசோதித்தல்.
- மிட்சுய் (Mitsui) வகையிலான 05 துறைமேடை பாரந்துாக்கிகளில் பழைய DOS வகை PLC கட்டுப்பாட்டு தொகுதி எமது விசேட அறிவுத் திறனை மாத்திரம் பயன்படுத்தி 05 உள்ளக விசேட திறனை பயன்படுத்தி வின்டோஸ் அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாட்டு தொகுதியொன்றாக அமைத்தல்.
- 1000 வோட்டிற்கும் அதிகமான மின் திறன் செலவிடப்படுகின்ற கட்டம் I மற்றும் II முனைய மின்குமிழ்களிற்கு பதிலாக குறைந்தளவு மின்சாரம் செலவாகின்ற LED மின்குமிழ்களை பொருத்துதல்.
- கிழக்கு கொள்கலன் முனையத்தில் மற்றும் ஜய கொள்கலன் முனயத்தின் கம்பி இன்றிய மற்றும் கம்பி கொண்ட தரவுகள் தொடர்பாடல் வலையமைப்பை மேம்படுத்துதல்.
- பேலியகொட களஞ்சிய தொகுதிக்கு CCTV கமரா கட்டமைப்பை செயற்படுத்துதல்.
- அதிவேக மேம்பால பாதை தூன்கள் நிர்மாணிப்பதை இலகுபடுத்தும் பொருட்டு மின்சாரம், தரவுகள் மற்றும் தொலை தொடர்பு கம்பிகளை மீள இழுத்தல்.
- திருகோணமலை துறைமுகத்தில் மற்றும் காலி துறைமுகத்தில் உயர் மின் அழுத்தத்துடன் கூடிய மின்சக்தி வலையமைப்பை தரமுயர்த்துதல்.
- குறைந்த மின்னழுத்தத்துடன் கூடிய மின்சாரத்தை பகிர்ந்தளித்தல், தொலைபேசி வலையமைப்பு கம்பிகள் கொண்ட மற்றும் கம்பிகளற்ற தரவுகள் தொடர்பாடல் வலையமைப்பை தரமுயர்த்துதல், இழுவை கலங்கள், மிதவைக் கலங்கள், கடலக உபகரணங்கள் மற்றும் சமுத்திரவியல் தொடர்பாடலுக்காக பயன்படுத்தும் மின் தொகுதியை மேம்படுத்தல்.
- ரேடார் மற்றும் வானொலி தொடர்பாடல் தொகுதியை பொருத்துதல், பராமரித்தல் மற்றும் நாடு முழுவதிலுமுள்ள அனைத்து வெளிச்ச வீடுகளையும் பராமரித்தல்.
- எரிசக்தியை சேமிக்கும் செயல்முறை மற்றும் புத்தாக்க சக்தி மூலமொன்றை செயற்படுத்துதல்.

கடலக பொறியியல் பகுதி

கடலக பொறியியல் பகுதி கொழும்பு துறைமுகத்துக்கு வருகின்ற அனைத்து கப்பல்களையும் இயக்குவதற்காக கடலக பொறியியல் பகுதியுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்கின்ற இலங்கை துறைமுக அதிகாரசபையின் முக்கிய பகுதிகளுள் ஒன்றாகும். இப்பகுதியின் முக்கிய பொறுப்பாவது, இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து மிதவைக் கலங்களை பராமரித்தல் மற்றும் நாளாந்த, காப்பு மற்றும் மீள்தொழில்நுட்ப நிகழ்ச்சிகளின் படி அக்கலங்களை சிறந்த இயக்க நிலையில் பேணுவதாகும். கடலக இயக்க, சிவில் பொறியியல் மற்றும் பாதுகாப்பு பகுதிகளின் தேவைப்பாட்டிற்கேற்ப உகந்த மட்டத்திலான துறைமுகமொன்றை பேணும் பொருட்டு மிதவைக் கலங்களை வழங்குவதற்கான 100% ஆல் பூர்த்தி செய்வதற்கான போதிய தொழில் ரீதியான சாத்தியங்கள், தேர்ச்சி மற்றும் ஆக்கத்திறன்

போன்ற பண்புகளினால் இப்பகுதியில் இணைக்கப்பட்டு சேவையாற்றும் 350 ஊழியர்களும் தகுதி பெற்றுள்ளனர்.

கொழும்பு துறைமுகத்தில் கடலக கலங்கள் பாதுகாப்பாக கையாளுகின்ற சர்வதேச துறைமுகமொன்றாக உறுதி செய்து மிதவைக் கலங்களை லொயிட் ஆவணத்தின் (Lioyds Registry) சட்டதிட்டங்களுக்கு ஏற்ப வகைப்படுத்தி பேணிச் செல்வதற்கு இப்பகுதி பொறுப்புடன் கடமைப்பட்டுள்ளது.

இயக்கப் பகுதியில் தொகை பிரிப்பு கப்பற் சரக்குகளை கையாள்வதற்காக படகுகள் போன்ற உபகரணங்களின் தேவைகளை பூர்த்தி செய்யதல் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மத்திய சமயலறையின் உபகரணங்களை பராமரித்தலும் இப்பிரிவிற்குரிய ஏனைய பொறுப்புக்களாகும்.

செயற்றிறனான முகாமைத்துவம் தொடர்பாக கடலக பொறியியல் பகுதி கடலக பொறியியல் 1 மற்றும் கடலக பொறியியல் 11 என இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டள்ளன. இப்பிரிவுகளினால் மேற்கொள்ளப்படும் பிரதான பணிகள் பின்வருமாறு.

கடலகப் பிரிவு I

இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய அனைத்து நங்கூர இழுவைக் கலங்கள், சேறுவாரிக் கலங்கள் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மேக" தீயணைக்கும் கலம் மற்றும் வெளியே மோட்டார் பொருத்தப்பட்டுள்ள அனைத்து கலங்களினதும் காப்பு மற்றும் மீள் தொழில்நுட்ப பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் இப்பிரிவின் பொறுப்பாகும். நீருக்கடியில் சேறுவாரும் "ஹன்சகாவா" மற்றும் "தியகொவுலா" கீரப் ஹொப்பர் கலம் உரிய முறையில் பராமரிக்கப்பட்டதோடு, இலங்கை துறைமுக அதிகாரசபையின் பாதுகாப்பு, கப்பலோட்ட மற்றும் சிவில் பொறியியல் பகுதிகளினால் பாவிக்கப்படுகின்ற அனைத்து வெளியில் மோட்டார் பொருத்தப்பட்ட கலங்களின் நாளாந்த திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

துறைமுக பொறியியல் கலப்பிரிவு

மிதவைக் கலங்கள், மூவரிங் கலங்கள் மற்றும் வேறு கலங்களை திருத்துதல் மற்றும் பராமரித்தல் துறைமுக கலங்கள் பொறியியல் பிரிவின் பிரதான பொறுப்பாகும். "வழிகாட்டி 12" "வழிகாட்டி 10" மற்றும் "எகோ 3" ஆகிய வழிகாட்டி மற்றும் மிதவைக் கலங்கள் இவ்வாண்டில் பழுதுபார்க்கப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டில் திருகோணமலை துறைமுகம் மற்றும் காலி துறைமுகத்தில் பயன்படுத்தப்படுகின்ற கலங்களின் பழுதுபார்க்கும் பணிகள் உள்ளடங்கலாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து வழிகாட்டி மிதவைக் கலங்கள், பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் வெற்றிகரமான முறையில் நிறைவு செய்யப்பட்டது. சகலவிதமான வழிகாட்டி மிதவைக் கலங்கள் மற்றும் மூவரிங் கலங்களிற்கான வகையீட்டு ஆய்வு இவ்வாண்டில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

கடலகப் பிரிவு 11

கப்பற் சரக்கு கலப்பிரிவு

கடலகப் பகுதியினால் இயக்கப்படுகின்ற சகல விதமான கலங்கள் மற்றும் இயக்கப் பகுதிக்கு விடுவிக்கப்பட்டுள்ள இழுத்துச் செல்லும் இழுவைக் கலங்கள், மோட்டார் மிதவைக் கலங்கள், நீர் வத்தைகள் மற்றும் அடுக்கு வத்தைகளின் உருக்கு மற்றும் கட்டமைப்பு ரீதியான பழுதுபார்க்கும் பணிகள், வெளிப்புறத்தை திருத்துதல் மற்றும் வர்ணம் பூசுதல் கப்பற் பொருட்கள் கலப் பிரிவின் பொறுப்பாகும். இவ்வாண்டில் வழிகாட்டி மிதவைக் கலங்கள் 10, 12 மற்றும் 14, மூவரிங் 1 கலம், "நந்தமித்ர" "ஜராவண" மற்றும் "தீர" ஆகிய நங்கூரமிடும் இழுவைக் கலங்களின் முக்கிய பழுதுபார்க்கும் பணிகள் இப்பிரிவினால் முன்னெடுக்கப்பட்டது. மேலும், நீர் வத்தைகள் 17,18 ஜீலாவா இழுவைக் கலம் மற்றும் எக்கோ 111 ஆகிய கண்காணிப்பு கலங்களின் முக்கிய பழுதுபார்ப்பு பணிகள் இப்பகுதியினால் முன்னெடுக்கப்படுகின்றது.

இலங்கை துறைமுக அதிகாரசபை போன்று வேறு வெளி நிறுவனங்கள் தொடர்பாக தேவைப்படுகின்ற கம்பி (Wire Slings) திரைகள், கென்வஸ் மறைப்பு விதானங்கள் மற்றும் கூடாரங்கள் துணிகள் போன்றன உற்பத்தி செய்து வழங்கும் வாசத்தியம் இப்பகுதிக்கு உள்ளது. கேஸ் அடுப்பு சோறு சமைக்கும் பொய்லேறு அலுமினியம் சட்டிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் பராமரிக்கப்படுவதோடு புறக்கோட்டை படகு முனையத்தில் படகுகளை சறுக்கு வழக்கு எடுத்தல் மற்றும் சறுக்கு வழியில்லிருந்து வெளியே எடுக்கும் இயக்க நடவடிக்கைகளும் நிறைவேற்றப்படுகின்றது.

புதிய பேரே முனையம்

இயக்கப்பகுதியினால் பயன்படுத்தப்படும் உருக்கு வத்தைகளை திருத்துதல் மற்றும் பராமரித்தல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. நீர் வத்தைகள் 17, அடுக்கு வத்தைகள் 15 மற்றும் டிகர் 4 ஆகிய கலங்களின் திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு பணிகள் இப்பிரிவினால் இவ்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டன.

கப்பல் நிர்மாணப் பிரிவு

இலங்கை துறைமுக அதிகார சபையின் அனைத்து மிதவைக் கலங்களினதும் மரத்திலான திருத்த வேலைகள் மற்றும் வைபர் கிளாஸிலாலான பழுதுபார்ப்பு பணிகளை நிறைவேற்றுவது கப்பல் நிர்மாணப் பிரிவின் முக்கிய பொறுப்புக்களாகும். கப்பலோட்டப் பகுதியில் பயன்படுத்தப்படும் நங்கூரமிடும் இழுவை கலங்களினதும் மற்றும் வழிக்காட்டி கலங்களினதும் மரத்திலான தண்டுப் பகுதியை திருத்தும் பணிகள், கப்பல் நிர்மாண பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோன்று 600 தொன் பாரம் கொண்ட கப்பல் பேர்டன்ட் சறுக்கு வழிக்கு கொண்டு சென்று திருத்தப் பணிகள் மற்றும் வழிகாட்டி இயக்கங்கள் மேற்கொள்ளும் பணிகளும் இப்பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றன.

துறைமுகத்தின் மிதவைக் கலங்கள் பராமரிப்பு நடவடிக்கைகளை உரிய முறையில் பேணிச் செல்வதை உறுதிப்படுத்துதல் மற்றும் இயக்க நடவடிக்கைகள் தொடர்பாக உரிய ஆயத்தங்கள் இருப்பதாக உறுதி செய்து இப்பகுதி நிறைவேற்றுகின்ற பணிகளை தொடர்ச்சியாக பேணிச் செல்வதோடு 2022 ஆம் ஆண்டினுள் பகுதியின் பணிக்குழுவினர் தமது பொறுப்புக்களை வெற்றியாக மற்றும் அர்ப்பணிப்புடன் நிறைவேற்றுகின்றனர்.

செயலக பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிருவாக மையமாவது செயலகப்பகுதியாகும். தலைவர் காரியாலயம், உப தலைவர் காரியாலயம், முகாமைப்பணிப்பாளர் காரியாலயம் மற்றும் மேலதிக முகாமைத்துவப் பணிப்பாளர் காரியாலயம் செயலகப்பகுதியில் அடங்குவதோடு அதிகாரசபையின் ஒட்டுமொத்த நிருவாக நடடிக்கைகளை இயக்குகின்றது.

அனைத்து பகுதிகள்/ பிரிவுகள் ஒருங்கிணைத்து உயர் முகாமைத்துவம் மற்றும் வெளி நிறுவனங்களுக்கு (துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, இராஜாங்க அமைச்சு, ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள்) தேவையான தகவல்களை சரியாக வழங்குவது முக்கிய பொறுப்பாகும். நிருவாக நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக பிரதான விழாக்களை ஒழுங்குசெய்தல், உயர் முகாமைத்துவத்தின் பங்குபற்றலில் நடைபெறும் கூட்டங்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதல், சமூகப் பொறுப்பு செயற்பாடுகள் (CSR) தொடர்பாக முன்னுரிமை வழங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற பிரதான பணிகள் செயலகப் பகுதியினால் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

2022 ஆம் ஆண்டினுள் 2021 ஆண்டின் பின் வருடாந்த அறிக்கை, செயற்பாட்டுத் திட்டம், கணக்காய்வு அறிக்கைக்கான பதில்கள், 2022 வருடம் தொடர்பான பாராளுமன்றக் குழுவின் துறைமுக அதிகாரசபை தொடர்பான அறிக்கைகள், பாராளுமன்றத்தில் அமைச்சரிடம் சமர்பிக்கப்படும் கேள்விகளுக்கான விடைகள், காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் தொடர்பாக குறித்த பகுதிகளுடன் ஒருங்கிணைந்து தயாரித்து நிறைவு செய்து உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அதேபோன்று, துறைமுக அதிகார சபையின் சில நிறைவேற்றுத்தரமல்லாத ஊழியர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஒழுக்காற்று தண்டனைகளுக்கு எதிராக குறித்த ஊழியர்களினால் சமர்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுப்பதும் மற்றுமொரு பணியாகும். 2022 ஆம் ஆண்டினுள் இவ்வாறான ஊழியர் மேன்முறையீடுகள் 28 கிடைத்துள்ளதுடன், வருட இறுதியாகும் போது அதில் 06 இன் செயற்பாடுகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. எஞ்சிய 22 தொடர்பாக மேன்முறையீட்டு சபையினால் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. 2022 ஆம் ஆண்டு 31 கணக்காய்வு வினாக்கள் கிடைக்கப்பெற்றதுடன் அவை அனைத்திற்குமான கணக்காய்வு பதில்கள் அனுப்பப்பட்டுள்ளன.

நிருவாகப் பணிகள் முறையான நடைமுறைகளுக்கேற்ப பேணிச்செல்வதற்காக உயர் முகாமைத்துவத்தினால் அடிக்கடி எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் தொடர்பாக பெற்றுக்கொடுக்கும் ஆலோசனைகளுக்கு ஏற்ப 2022 வருடத்தில் செயலக பகுதியினால் 41 சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

	ஊழியர்களின் எண்ணிக்கை	ஒரு ஊழியனுக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை	உரித்து கூறப்பட்ட தொகை
மருத்துவமனையில் இருந்தவர்கள்	1,311		85,067,465.00
பயங்கர நோய்கள்	59		29,346,821.00
இடுப்பு எண்பு /முழங்கால் என்பு பொருத்துதல் சத்திரசிகிச்சை	2		314,680.00
மரணங்கள்			16,800,000.00
1. இயற்கை மரணம்	24	700,000.00	
2. சடுதி விபத்து மரணம்	06	2,000,000.00	12,000,000.00
	1,402		143,528,966.00
ஊழியர்களின் மற்றும் குடும்ப அலகுகளின் காப்புறுதி தொடர்பாக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் செலுத்தப்பட்ட வருடாந்த தவணைப் பணம் (2022.01.01 முதல் 2022.12.31 வரை)			106,728,000.00

மேலும், துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான உல்லாச விடுதிகளின் நிருவாக மற்றும் பராமரிப்பு பணிகள் போன்று அறைகளை ஒதுக்கி கொடுக்கும் பணிகளும் இப்பகுதியினால் முன்னெடுக்கப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டினுள் அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் சுமார் 320 பேருக்கு அறைகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

மனிதவளப் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையில் மனிதவள பகுதி ஊழியர்களின் நலன்களிற்கு முன்னுரிமை வழங்குவதுடன் நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு பங்களிப்பினை வழங்குகின்றது. திறமையான ஊழியர்களை மனித வளப் பகுதியினால் முகாமைத்துவம் செய்வதுடன், மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு உரிய பயிற்சிகளை வழங்குவதுடன், நட்டஈடு வழங்குதல், ஊழியர் நலன்கள் மற்றும் வேலைத்தள பாதுகாப்பினை உறுதி செய்கின்றது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் வெற்றியை நோக்கி தகுதியான ஊழியர்களை உரிய பதவிகளில் நியமித்து ஈடுபடுத்துவது தீர்க்கமான காரியமாகும். 2022.12.31 ஆம் திகதிக்கு நிறைவேற்று, நிறைவேற்று அல்லாத, தொழில்நுட்ப, தொழில்நுட்பமல்லாத தரங்கள் உள்ளடங்கலாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 8,516 ஆகும். பெருமளவிலான ஊழியர்கள் கொழும்பு துறைமுகத்திற்கு

விடுவிக்கப்பட்டுள்ளதுடன் (7,838) காலி துறைமுகத்தில் 315 மற்றும் திருகோணமலை துறைமுகத்தில் 369 ஊழியர்களும் பணிபுரிகின்றார்கள்.

2022 ஆம் ஆண்டினுள் உள்ளக பதவி உயர்வுகள் மற்றும் வெளியக ஆட்சேர்ப்புக்கள் பற்றிய விபரங்கள்

2022 ஆம் ஆண்டினுள் உள்ளக பதவி உயர்வுகள் மூலமாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை முயற்சிகளை மேற்கொண்டதுடன் அவ்வாறு செய்ய இயலாத சந்தர்ப்பங்களில் ஒப்பந்த அடிப்படையில் வெளியிலிருந்து ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக வெளியிலிருந்து 09 ஊழியர்கள் மாத்திரம் சேவையில் இணைக்கப்பட்டதுடன் நிறைவேற்று தரம் அல்லாத தரங்களில் 139 பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. (79%) ஊழியர்களுள் 31 பேர் நிறைவேற்று தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டதுடன் இது வருடத்தில் முன்னெடுக்கப்பட்ட உள்ளக பதவி உயர்வுகளில் 14% ஆகும். நிறுவனத்திற்கு புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளும் போது இலங்கை துறைமுக அதிகாரசபையானது பாதுகாப்பான நடைமுறையொன்றை பின்பற்றுகின்றது.

ஓய்வு பெற்ற ஊழியர்கள் தொடர்பான விபரங்கள்

2022 ஆம் ஆண்டில் 490 ஊழியர்கள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளனர். இவர்களுள் 388 பேர் (79%) 60 வயது பூர்த்தியடைந்ததன் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்கள் மருத்துவ காரணிகள் தொடர்பில் எந்தவொரு ஊழியரும் பணியிலிருந்து நீங்கவில்லை.

விபத்துக்கள் மற்றும் நஷ்டஈடு

2022 ஆம் ஆண்டில் துறைமுக வளாகத்தினுள் 67 திடீர் விபத்துக்கள் இடம்பெற்றன. இவற்றுள் 03 பாரிய விபத்தாவதுடன் இவற்றுக்கு ரூபா 2,550,000 நஷ்டஈடாக வழங்கப்பட்டது. மேலும், ரூபா 2,000,000 தொகை ஆவணங்கள் தயாரிப்பில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக இன்னும் செலுத்தப்படவில்லை. திடீர் விபத்துக்களுக்கு முகங்கொடுத்த 53 ஊழியர்களுக்கு அவசர விபத்து விடுமுறை வழங்கப்பட்டதுடன் 11 திடீர் விபத்துக்கள் பாரதூரமற்ற விபத்துக்கள் என அறியப்பட்டுள்ளது.

பணிக்கொடை செலுத்துதல்

2022 ஆம் வருடத்தில் துறைமுக ஊழியர்களின் தங்கி வாழ்வோருக்கான பணிக்கொடை செலுத்தலாக ரூபா 563,999 மொத்த தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுக ஊழியர்களிற்காக ரூபா 454,999 தொகையும், காலி துறைமுக ஊழியர்களிற்காக ரூபா 61,000/= தொகையும் திருகோணமலை துறைமுக ஊழியர்களுக்காக ரூபா 48,000 தொகையும் செலுத்தப்பட்டுள்ளது.

ஊழியர்களின் மனக்குறைகள்

கொழும்பு துறைமுகம் மற்றும் திகோணமலை துறைமுக ஊழியர்களுள் 2022 ஆம் ஆண்டில் 73 ஊழியர்களின் மனக்குறைகள் குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளன. ஊழியர்களின் குறைகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஒழுக்காற்று நடவடிக்கைகள்

இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர்களின் ஒழுக்கத்தை பேணிச் செல்லும் பொருட்டு மனிதவள பகுதியின் ஒழுக்காற்று பிரிவினால் 126 ஒழுக்காற்று விசாரணைகள் ஆண்டின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டினுள் 149 ஒழுக்காற்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் அவற்றுள் 145 விசாரணைகள் வெற்றிகரமான முறையில் தீர்க்கப்பட்டுள்ளன.

நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபை தனது நோக்கங்களை அடையப்பெறுதலில் மனித வளம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துகின்றது. பௌதிக வளங்களை (Physical Resourse) முகாமைத்துவம் செய்யும் செயன்முறையை விட மனித வளம் (Human Resourse) முகாமைத்துவ செயன்முறை முற்றிலும் மாறுப்பட்டது. அது தொடர்பாக கவனம் செலுத்தி தமது ஊழியர்களின் திருப்தியை விட சிறந்த வாழ்க்கைத் தரத்தை பெற்றுக்கொடுப்பதற்கு உதவுகின்ற வசதிகள் மற்றும் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்தோடு நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதியின் பணிகள் பல்வேறு பிரிவுகள் ஊடாக 2022 வருடத்தினுள் பிரிந்து சென்றுள்ளது.

அலுவலக வகை ஊழியர்களுக்கு பகல் - இரவு உணவு மாத்திரமும் காவல்முறை அடிப்படையில் ஈடுபடுத்தும் ஊழியர்களுக்கு பகல், இரவு உணவுகளும் சிற்றுண்டியுடன் தேனீர் வழங்குவது மத்திய சமையலறைப் பகுதியினால் மேற்கொள்ளப்படுகிறது. 2022 ஆம் ஆண்டினுள் பகல் - இரவு உணவு வேளைகள் 2,806,722 க்காக 2,228,928,911/= ரூபாவும், (தேனீர் சிற்றுண்டி) 4,000,000 வேளைகளுக்கு 498,660,271/= ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப ஒட்டுமொத்த உணவுக்கான செலவு 1,712,789,182/= ரூபாவாகும்.

நடப்பு ஆண்டினுள் மூக்குக் கண்ணாடி பெற்றுக்கொடுப்பதற்காக 12,675,000/= ரூபாவும் ஏனைய வெளி நோய்க்கான மருத்துவ பில்களுக்கு 29,066,932/= ரூபா என்றவகையில் மொத்தமாக 41,742,232/= ரூபா ஊழியர்களுக்கு மீளச் செலுத்தப்பட்டுள்ளது.

க.பொ.த (சா/த) சித்தியடைந்த ஊழியர்களின் பிள்ளைகளுக்கு மாதமொன்றுக்கு 750/- ரூபா படி இரண்டு வருடங்களுக்கும், பல்கலைக்கழக கல்விக்காக மாதமொன்றுக்கு 2500/- ரூபா வீதமும் பட்டப் படிப்பு தொடர்பான வருட எண்ணிக்கைக்கு ஏற்ப புலமைப்பரிசில் பெற்றுக்கொடுக்கப்படும். 2022 நடப்பு ஆண்டினுள் புலமைப்பரிசில் தொடர்பில் மொத்தம் 13,397,000/= ரூபா செலவிடப்பட்டுள்ளது.

கொவிட் 19 தொற்று நோய் நிலை ஏற்பட்ட காலத்தில் சிறப்பாக துறைமுக பணிகளை தொடர்ச்சியாக பேணிச்செல்லும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர்களுக்கு வீட்டிலிருந்து காரியாலயத்துக்கும், காரியாலயத்திலிருந்து வீட்டுக்கும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதற்காக, இலங்கை போக்குவரத்து சபை பஸ் வண்டிகள் 23 வாடகை அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டதோடு, அதற்காக செலுத்தப்பட்ட தொகை 131,541,090 ரூபாவாகும்.

கொவிட் 19 வைரசு தொற்றுக்குள்ளான ஊழியர்களுக்கு ரூபா 10,000/- விகிதம் நிதியுதவி வழங்கியதன் விளைவாக 1,820,000/- ரூபா செலவாகியது.

பதினைந்து வருடத்துக்கு மேல் சேவைக்காலத்தை நிறைவு செய்து ஓய்வுபெறும் அல்லது கேட்டுவிலகும் ஊழியர்களுக்கு சேவைகாலத்துக்கு ஏற்ப தங்க நாணயம் பெற்றுக்கொடுக்கப்படும். அதேபோன்று 30 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த அனைத்து ஊழியர்களுக்கும் பெறுமதியான போசிலேன் தேனீர் கப் செட் வழங்கப்படும். 2022 ஆம் ஆண்டினுள் தங்க வெகுமதி வழங்கப்படாததோடு போசிலன் செட் 157 வழங்கப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டில் நூதனசாலையை பார்வையிடுவதற்காக இலங்கையர்கள் 16,797 பேரும் வெளிநாட்டவர்கள் 389 பேரும் வந்துள்ளனர்.

துறைமுக வளாகத்தினுள் பேணிச்செல்லப்படுகின்ற நலன்புரி உண்டிச்சாலைகள் மூலம் வாடகையாக ரூபா 5,107,659/= தொகையொன்று அறவிடப்பட்டுள்ளது.

உயர் முகாமைத்துவத்தின் பூர்வாங்க அங்கீகாரத்துடன் விசேட விழாக்கள் கருத்தரங்குகள் போன்றவற்றுக்கான உபசாரப் பணிகள் நடைபெற்றன.

மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலை

இலங்கை துறைமுக அதிகார சபையின் பயிற்றுவிக்கும் பிரிவான மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலையின் முன்னனி பங்களிப்பு துறைமுக ஊழியர்களின், துறைமுகத்தை பயன்படுத்துவோர் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிலுனர்கள் தொடர்பாக பாடநெறிகளை தயாரித்து நடாத்துதல், கடலகத் துறையில் பயிலுனர்களுக்கான சேவைக்கால பயிற்சி நெறிகளை நடாத்துவதுமாகும். இந்நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலையினால் தேசிய மற்றும் சர்வதேச தொழிலாளர்களின் அறிவு, தேர்ச்சி மற்றும் மனப்பாங்கினை அதிகரிப்பதற்காக பல்வேறு அறிவுறுத்தல் நிகழ்ச்சிகள், செயலமர்வுகள், கருத்தரங்குகள், தொழிற்சார் பரிசீலனைகள், தேர்ச்சி பரீட்சைகள் மற்றும் சேவைக்கால பயிற்சிகள் நடாத்தப்படும் இதற்கு மேலதிகமாக தேசிய தொழில் தகுதிகான் மட்டத்தை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்போர் தொடர்பாக தேர்ச்சிப் பரீட்சைகள் மற்றும் கடல்சார் தொழிலுனர் தொடர்பாக பாடநெறிகளை நடாத்துவதற்கு மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலை அர்பணிப்புடன் செயல்படுகிறது.

கொவிட் 19 தொற்று நிலை காரணமாக ஏற்பட்ட சவால்கள் மற்றும் நாட்டிலுள்ள ஏனைய சமூக சிக்கல்கள் மத்தியிலும் ஊழியர் செயற்திறனை மேம்படுத்துதல், தொழிநுட்ப திறமைகளை அதிகரித்தல், குழு உணர்வுடன் பணிபுரியும் ஆற்றலை உறுதிப்படுத்துதல், நுகர்வோர் சேவைகளை விஸ்தரித்தல் மற்றும் தரத்தினை பேணும் தேவைப்பாட்டினை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு செயலமர்வுகளை மிகவும் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளன. பெறுமதியான சான்றிதழொன்று பெற்றுக்கொடுக்கும் வாடிக்கையாளர் தொடர்பில் தயாரிக்கப்பட்ட பாடநெறிகள் மூலம் துறைமுக ஊழியர்களுக்கு தமது திறமைகளை விருத்தி செய்து துறைமுக இயக்கங்கள் தொடர்பான நிபுனத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கு மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலையினால் சந்தர்பங்கள் பெற்றுக்கொடுக்கப்படுகிறது.

இதற்கு முன்னைய வருடங்களில் மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலையினால் இலங்கை துறைமுக அதிகார சபையின் ஊழியர்களை ஆட்சேர்க்கும் விதிமுறையின் மீது அடிப்படையாக டிப்ளோமா மற்றும் சான்றிதள் பயிற்சிநெறிகள் திட்டமிட்டு அமுல்படுத்தப்பட்டதோடு, அதன் விளைவாக இலங்கை துறைமுக அதிகார சபையின் பல ஊழியர்கள் அதற்கடுத்த மட்டத்துக்கு பதவியுயர்த்தப்பட்டார்கள்.

2022 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட மொத்த பயிற்சி நிகழ்ச்சிகளின் செயலாற்றுகை

பயிற்சி நிகழ்ச்சிகள்	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை	மனித மணித்தியாலங்கள்
சமுத்திரவியல் மற்றும் கடலக	248	5,210	45,540
வேலைத்தள சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு	107	2,307	46,663
துறைமுக கையாளல் மற்றும் சேவை வழங்கல்	68	1,239	50,835
முகாமைத்துவம்	66	2,794	44,998
தகவல் கட்டமைப்பு	45	1,118	23,328
தொழிநுட்ப	49	688	8,203
மொத்த எண்ணிக்கை	**583**	13,356	219,567

ஈட்டிய வருமானம்

கொவிட் 19 தொற்று நிலைமை மற்றும் ஏனைய சமூக சிக்கல்கள் காரணமாக சவால்கள் ஏற்பட்டதோடு, கட்டண அடிப்படையில் மற்றும் கட்டண அடிப்படையில் இல்லாத பாடநெறிகள்

உள்ளக மற்றும் வெளியக பாடநெறிகளை கற்போர் இரு பிரிவினருக்காக பெற்றுக்கொடுத்தல் மூலம் குறிப்பிடத்தக்க வருமானமொன்று மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலையினால் ஈட்டிக்கொள்ளப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலை கட்டண அடிப்படை நிகழ்ச்சிகள் மூலம் 109,655,310/= ரூபா ஈட்டியுள்ளதோடு துறைமுக இயக்கங்களுடன் ஒப்பிடும் பொழுது செயற்திறனை அதிகரிப்பதற்காக இலங்கை துறைமுக அதிகார சபையின் பல்வேறு பகுதிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பயிற்சிகளினால் 19,716,417= ரூபா மேலதிக வருமானமொன்று ஈட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக 2022 ஆம் ஆண்டில் மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலையினால் 129,371,787/= ரூபா மொத்த வருமானமொன்று ஈட்டிக்கொள்ளப்பட்டுள்ளதோடு, அந்த வருடத்தில் மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலையினால் நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்காக செலவிடப்பட்ட தொகை 26,596,656/= ரூபாவாக இருந்தது.

இலங்கை துறைமுக அதிகார சபையினுள் பதவி உயர்வுகள் பெற்றுக்கொள்வதற்காக தேவைப்படுகின்ற தகுதிகான் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு புதிய பயிற்சி தேவைகளின் முக்கியத்துவம் அடையாளங் காணப்பட்டுள்ளது. இத்தேவையை நிறைவுச்செய்து கொள்வதற்காக மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலையினால் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்சார் பயிற்சிகள் அதிகாரசபையின் ஒத்துழைப்புடன் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு பொருந்தும் வகையில் கட்டமைப்பு ரீதியான நிறுவனங்களுக்கிடையிலான நிகழ்ச்சி திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் தகவல் தொழிநுட்பம், முகாமைத்துவம் மற்றும் உபகரணங்களை கையாளல் தொடர்பாக தேசிய தொழிற்சார் தகுதிகள் மட்டத்தில் பயிற்சி பாடநெறிகள் நடாத்தப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, துறைமுக இயக்க முகாமைத்துவம், சேவை வழங்கல் முகாமைத்துவம், தகவல் முறைமை முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், கணக்குகள் மற்றும் கணக்காய்வு, துறைமுக காப்பு மற்றும் ஆங்கில பாடம் தொடர்பான உயர் டிப்ளோமா போன்ற டிப்ளோமா பாடநெறிகள் இலங்கை துறைமுக அதிகார சபையின் நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத தரங்களின் பணியினருக்கு அறிவு மற்றும் தகுதிகளை அதிகரித்துகொள்வதற்காக மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலையினால் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. துறைமுக ஊழியர்களுக்கும் துறைமுக துறையில் ஏனைய எதிர்பார்த்த பயிற்சியாளர்களுக்கும் மற்றும் சேவைக்கால பயிற்சிகள் பெறுபேறுகளின் அறிவு, திறமை மற்றும் தேர்ச்சியை மேம்படுத்துவதற்காக இந்நிகழ்ச்சிகள் மூலம் நோக்காகக் கொண்டுள்ளது.

மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலையினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடலக துறையின் தரப்பினர்களுக்கும் அவர்களின் விசேட தேவைப்பாடுகளுக்கு ஏற்றவாறு மற்றும் அவர்களின் இயக்கங்களின் செயற்திறனை அதிகரித்துக்கொள்வதற்காக அவர்களின் தேவைப்பாட்டிற்கேற்ப தயாரிக்கப்பட்ட பணியக பயிற்ச நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகிறது. மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலையில் நவீன பயிற்சி அபிவிருத்தி வசதிகள் மற்றும் அனுபவமிக்க ஏனைய ஊழியர்கள் இருப்பதன் காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடலக தொழிலில் ஈடுபடுவோர்களுக்காக உயர்நிலை பயிற்சி நெறிகள் பெற்றுக்கொடுப்பதற்கு மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலை தமது பயிற்சி நெறிகளை மற்றும் வளங்களை கடலக தொழிலில் தற்போதைய போக்கினை மற்றும் அபிவிருத்தியுடன் இற்றைப்படுத்தி கடலக தொழில் தொடர்பாக தொடர்ச்சியாக ஒத்துழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இரு பிரிவுகளிலும் கப்பலோட்டிகளிற்கான பல்வேறு கடலக பயிற்சி நிகழ்ச்சிகளை முன்னெடுத்து உலகளாவிய கடலக துறையில் முக்கிய பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றது. சர்வதேச தொழிலாளர் சங்கம் (ILO) மற்றும் இலங்கை கப்பலோட்டிகளின் தேசிய ஒன்றியம் (NUSS) ஆகியவற்றுடன் ஒன்றினைந்து செயற்படுவதன் மூலம் மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலை தன்னுடைய பயிற்சி நிகழ்ச்சிகளை உயர் தரத்துடன் மற்றும் கைத்தொழிலில் சிறந்த தொழிநுட்ப நடைமுறைகளுக்கு அமைவாகுமாறு உறுதி செய்ய முடியும்.

மருத்துவப் பகுதி

இலங்கை துறைமுக அதிகார சபையின் மருத்துவ பகுதி அதன் பணிக்குழுவினரின் சுகாதாரம் மற்றும் சிறந்த ஒழுக்கம் தொடர்பாக விசேட கவனத்துடன் நடவடிக்கை மேற்கொள்கின்றது. வருடம் பூராகவும் சிறந்த சுகாதார பழக்கவழக்கங்களை விருத்தி செய்வதில் மற்றும் நோய்கள் பரவுவதை தடுப்பதற்காக பல்வேறு நிகழ்ச்சிகளை செயல்படுத்தி அது தொடர்பாக ஊழியர்களின் அறிவு மற்றும் உளப்பாங்கினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அந்நிகழ்ச்சிகளில் ஒரு சில கீழே காட்டப்பட்டுள்ளன.

- இலங்கை கடற்படையின் ஒத்துழைப்புடன் டெங்கு நிவாரணம் மற்றும் கட்டுப்படுத்தும் நிகழ்ச்சிகளுக்காக துறைமுக வளாகத்தை சுத்தம் செய்தல்இ புகை அடித்தல் மற்றும் ஒவ்வொரு பகுதிகளுக்குமிடையே சுகாதார சிக்கல்கள் தொடர்பான தகவல்களை இற்றைப்படுத்தல்
- அனைத்து ஊழியர்களுக்கும் கொவிட் 19 நோய் பரவுவதை தடுப்பதற்காக 4 ஆவது தடுப்பூசியை வழங்குதல்.
- துறைமுக வளாகத்திலுள்ள கட்டாகாலி நாய்களின் இனப்பெருக்க கட்டுப்பாட்டை முன்னெடுத்தல்
- சிறந்த போசனை மிக்க உணவு வேளையொன்றை ஊழியர்களுக்கு வழங்குவதற்காக உணவு பட்டியல்கள் மீள தயாரிக்கும் நிகழ்ச்சிகளை மேற்கொள்ளல்.
- சுகாதார பாதுகாப்பின்றிய உணவுகளை பயன்படுத்துதல் மற்றும் பிழையான வாழ்க்கை முறை காரணமாக கொண்டு ஏற்படுகின்ற தொற்றா நோயினால் ஏற்படுகின்ற அகால மரணங்களை குறைப்பதற்கு ஊழியர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சிகளை செயற்படுத்துதல்.
- கூடிய அவதானமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஊழியர் குழுவினருக்கு சுகாதார நிலையை சிறந்த முறையில் பேணிச் செல்வதற்காக மருத்துவ பரிசோதனைகளை நடாத்துதல்
- ஊழியர் குழுக்களுக்கு சரியான சேவை மற்றும் ஆலோசனைகளை வழங்கக்கூடியவாறு மருத்துவ பகுதியின் பணியினரின் அறிவை மேம்படுத்துவதற்காக பயிற்சி நிகழ்ச்சிகளை செயல்படுத்துதல்.
- இலங்கை துறைமுக அதிகார சபை ஊழியர்களுக்கு மது பாவனையின் ஆபத்தான விளைவுகள் தொடர்பாக அறிவுறுத்தும் நிகழ்ச்சிகளை செயல்படுத்துதல்.
- ஊழியர்களின் மருத்துவ அறிக்கைகளை கணனி தொகுதிக்கு உட்படுத்துதல்.
- சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் பிள்ளைகளுக்காக வெற்றிகரமாக மருத்துவ பரிசோதனைகளை செயற்படுத்துதல்.

தகவல் முறைமை பகுதி

2021 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட பிரதான N4 மாதிரிக்கு மேலதிகமாக Expert Decking, Prime route, Auto Stow மற்றும் XPS கண்காணிப்பு தொகுதி (Xps Monitiring Tool) போன்ற வேறு மேம்பாட்டு தொகுதியொன்றை வெற்றிகரமான முறையில் நடைமுறைப்பட்டுள்ளது.

Oracle இணைய வியாபார தொகுதி செயல் இழந்தால் தரவுகளை மீள பெற்றுக்கொள்ளும் பொருட்டு இணையத்தளமொன்றை செயற்படுத்துவதற்கு துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சுடன் கலந்துரையாடலொன்று முன்னெடுக்கப்படுகின்றது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்திற்கான பகுதி தன்னியக்க முனைய முகாமைத்துவ தொகுதியொன்றை செயற்படுத்தும் பொருட்டு தகுதியான விலைமனுதாரரொருவர் தேர்வுச் செய்யப்பட்டுள்ளார்.

சட்டப் பகுதி

1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகாரசபை சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கொழும்பு, காலி, திருகோணமலை காங்கேசன்துறை, ஒலுவில், புத்தளம், பருத்தித்துறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய துறைமுகங்களுக்கு

இலங்கை துறைமுக அதிகார சபையின் சட்ட அலுவலர்கள், சட்ட ஆலோசகர்களுக்கு அதேபோல் இலங்கை துறைமுக அதிகார சபையின் பணிப்பாளர் சபை, பணிப்பாளர்கள், பகுதித் தலைவர்கள் மற்றும் இலங்கை துறைமுக சபை பணிப்பாளர்களுக்கு பகுதி தலைவர்களுக்கு மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபையின் ஏனைய பகுதிகளுக்கும் சட்ட அலுவலர்கள் ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

சட்ட ஆலோசனைகள்

2022 ஆம் ஆண்டினுள் துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவத்திற்கும் மற்றும் பகுதித் தலைவர்களுக்கும் 138 க்கும் மேற்பட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, இலங்கை துறைமுக அதிகாரசபையின் தரப்பினரான மற்றும் சட்ட பகுதியின் விடயதானத்துக்கு உட்பட்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், பிணை முறிகள், உறுதிகள் (உரிமை கைமாற்றல்கள், குத்தகை, பிரகடனங்கள், அடகு வைத்தல்கள் போன்றவை) தொடர்பில் நகல் அறிக்கைகளை தயாரித்தல், அமுல்படுத்துதலோடு தொடர்பான ஏனைய விடயங்களில் ஈடுபடுவதும் சட்டப்பகுதியின் விடயதானத்துக்கு உள்ளடங்குகின்றது.

ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், பிணைமுறிகள், உறுதிகள்

2022 ஆம் ஆண்டில் 43, குத்தகை வாடகை ஒப்பந்தங்கள்/ 58 உடன்படிக்கைகள் சேர்க்கைகள், வணிகங்கள், பங்குதார ஒப்பந்தங்கள் நேரடி ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் சட்டப்பகுதியினால் அமுல்படுத்தப்படுகின்றது. அந்த ஆவணங்களுக்கு மேலதிகமாக கீழ்வரும் உடன்படிக்கைகள் மற்றும் பிணை முறிகளுக்குரிய பணிகளும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

- 38 வெளிநாட்டு தொழில்/ பயிற்சிகள்/ கல்வி நடவடிக்கைகள் தொடர்பான வாய்ப்புகளுக்கான ஊழியர்களின் சம்பளமற்ற விடுமுறைகள் பெற்றுக்கொள்ளல் தொடர்பிலான ஒப்பந்தங்கள் மற்றும் பிணைமுறி ஒப்பந்தங்கள் -
- 02 பரிந்துணர்வு ஒப்பந்தங்கள் -
- 18 குறைநிரப்பு, வியாபார, நேரடி மற்றும் பங்குதார ஒப்பந்தங்கள்

இலங்கை துறைமுக அதிகாரசபை தரப்பினரொருவராகக் கொண்ட அனைத்து நீதிமன்ற விடயங்கள் தொடர்பிலும் சட்டமா அதிபரின மற்றும் அதிகாரபூர்வ சட்டத்தரணிகள் குழுவின் உதவியோடு சட்டப் பகுதியின் நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

நீதிமன்ற செயற்பாடுகள்

2021 திசெம்பர் மாத இறுதியாகும் போது, மீயுயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல்நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், தொழில் நியாய சபைகள், நீதிவான் நீதிமன்றம், தொழில் திணைக்களம், மனித உரிமைகள் ஆணைக்குழு, பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் (Ombudsman) தொழில் நீதிமன்றம், தொழிலாளர் இழப்பீடு மற்றும் நடுவர் தீர்ப்பாய சபை மற்றும் சுங்க விசாரணை சபை ஆகியவற்றின் வழக்குகள்/ முறைப்பாடுகள்/ விண்ணப்பங்கள் 274 விசாரிக்கப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராக / இலங்கை துறைமுக அதிகாரசபையினால் புதிய வழக்குகளுக்கான முறைப்பாடுகள், விண்ணப்பங்கள் 80 உம் (அதாவது மீயுயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதி மன்றம், மாவட்ட நீதிமன்றம், தொழில் நியாய சபைகள், நீதிவான நீதிமன்றம், மனித உரிமைகள் ஆணைக்குழு, தொழில் ஆணையாளர், தொழில் திணைக்களம், தீர்ப்பளித்தல் மற்றும் தொழிலாளர் நட்டஈட்டு விசாரணை சபை மற்றும் சுங்க விசாரணை பிரிவு ஆகியவற்றில் சமர்ப்பிக்கட்டிருந்தன.) பதிவு செய்யப்பட்டிருந்தன. 332 வழக்குகளுள் 46 வழக்குகளின் பணிகள் 2022 ஆம் ஆணடில் முடிடைந்துள்ளன.

2022.12.31 ஆம் திகதிக்கு வழக்குகள்/ முறைப்பாடுகள;/ விசாரணைகள்/ விண்ணப்பங்கள் 286 மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் முடிவுறாத நிலையில் இருந்தன.

மீயுயர் நீதிமன்ற வழக்குகள்

2021 ஆம் ஆண்டின் இறுதியில் 51 வழக்குகள் விசாரணை நிலையில் இருந்தன 2022 ஆம் ஆண்டினுள் புதிதாக 03 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. மொத்தமான வழக்குகள் 54 இல் 05 வழக்குகளின் விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. (விசாரணை முடிவடைந்த வழக்கு 01, நிராகரிக்கப்பட்ட வழக்குகள் 04) 2022.12.31 ஆம் திகதிக்கு 49 வழக்குகள் விசாரணை நிலையில் இருந்தன.

மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள்

2021.12.31 திகதிக்கு 40 வழக்குகள் விசாரணை நிலையில் இருந்தன. 2022 ஆம் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராக புதிதாக 02 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. மொத்த 42 வழக்குகளில் 05 வழக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்ததோடு, மேலும் 01 வழக்கு மீளப்பெறப்பட்டது. 2022.12.31 ஆம் திகதிக்கு 36 வழக்குகள் மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

உயர் நீதிமன்ற வழக்குகள்

2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 08 வழக்குகள் விசாரணை நிலையில் இருந்தன. 2022 ஆண்டினுள் புதிதாக 02 வழக்குகள் தாக்கல் செய்யப்படிருந்தன. மொத்தம் 10 வழக்குகளில் 01 வழக்குகள் நிராகரிக்கப்பட்டது, 2022.12.31 ஆம் திகதிக்கு உயர் நீதிமன்றில் 09 வழக்குகள் விசாரணை நிலையில் உள்ளன.

மாவட்ட நீதிமன்ற வழக்குகள்

2021.12.31 ஆம் திகதிக்கு 25 வழக்குகள் விசாரணை நிலையில் இருந்தன. 2022 ஆம் ஆண்டில் புதிதாக வழக்குகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மொத்தமான 25 வழக்குகளுள் 04 வழக்குகள் நிறைவு செய்யப்பட்டன. 2022.12.31 ஆம் திகதிக்கு 21 வழக்குகள் மாவட்ட நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

நீதவான் நீதிமன்ற வழக்குகள்

2021.12.31 ஆம் திகதிக்கு 06 வழக்குகள் விசாரணை நிலையில் இருந்தன. 2022 ஆண்டினுள் புதிதாக 27 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மொத்த வழக்குகள் 33 இல் 10 வழக்குகள் நிறைவடைந்துள்ளன. 2020.12.31 ஆம் திகதிக்கு 23 வழக்குகள் நீதவான் நீதிமன்றில் விசாரணை நிலையில் இருந்தன.

தொழில் நியாய சபை வழக்குகள்

2022.12.31 ஆம் திகதிக்கு தொழிலாளர் நியாய சபையின் 23 வழக்குகள் விசாரணை நிலையில் இருந்தன. 2022 ஆம் ஆண்டில் புதிதாக 02 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளதோடு, தொழில் நியாய சபையின் 25 வழக்குகளில் 09 வழக்குகள் நிறைவடைந்துள்ளன. 2022.12.31 ஆம் திகதிக்கு 16 வழக்குகள் விசாரணை நிலையில் இருந்தன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள், தொழிலாளர் பிணக்குகள் (இணக்கம் தொடர்பிலான வழக்குகள்) பற்றியதில் தொழில் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பிலான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் ஊழியர் நட்டஈடு ஆணையாளரிடமும் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்.

2021.12.31 ஆம் திகதிக்கு புதிதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் 29 விண்ணப்பங்கள், தொழில் ஆணையாளர் முன்னிலையில் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்ளும் பொருட்டு 59 முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதோடு, பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பிலான

பாராளுமன்ற ஆணையாளர் (Ombudsman) முன்னிலையில் 21 முறைப்பாடுகள் விசாரணை நிலையில் உள்ளன. தொழில் தீர்ப்பாய சபையிடம் எதுவித முறைப்பாடுகளும் முன்வைக்கப்படவில்லை.

2022 ஆம் ஆண்டில் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு 07 புதிய விண்ணப்பங்களும், பொது மக்கள் முறைப்பாடுகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளரிடம் முன்வைக்கப்பட்ட 14 முறைப்பாடுகளும், சமர்ப்பிக்கப்படவில்லை. தொழில் தீப்பாய சபை மற்றும் பாராளுமன்ற ஆணையாளரிடம் எதுவித முறைப்பாடுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை.

மனித உரிமைகள் விண்ணப்பங்கள் 04 இணக்கப்பாட்டிற்கான முறைப்பாடுகள் 06 மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளருக்கு 01 முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு, தொழிலாளர் நட்டஈடு நியாய சபைக்கு எதுவித முறைப்பாடுகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

அதன்படி, 2022.12.31 ஆம் திகதிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 32 விண்ணப்பங்களும், இணக்கப்பாடு பெற்றுக்கொள்வதற்காக 67 முறைபாடுகளும், பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பாக பாராளுமன்ற ஆணையாளர் முன்னிலையில் சமர்பித்த 20 முறைப்பாடுகளும் தொழிலாளர் நட்டஈடு நியாய சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒரு முறைப்பாடு விசாரணை நிலையில் உள்ளன.

நடுவர் தீப்பாய வழக்குகள்

2021.12.31 ஆம் திகதிக்கு வணிக தீர்ப்பாய நடவடிக்கைள் 02 உம், கைத்தொழில் தீர்ப்பாய நடவடிக்கைகள் 08 உம் நிறைவடையாது இருந்தன. 2022 ஆம் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராக கைத்தொழில் தீர்ப்பாய வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்ததோடு, விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற கைத்தொழில் தீர்ப்பாய வழக்கு தொடர்பாக வேறொரு வழக்கு இலக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு கைத்தொழில் தீர்ப்பாய வழக்கு நிறைவடைந்ததோடு (விசாரணை நிலையிலுள்ள தீர்ப்பாய வழக்குகள் தொடர்பாக புதிய தீர்பாயர்களை நியமித்ததன் பின் புதிய வழக்கு இலக்கங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதன் காரணமாக) எதுவித வணிக தீர்ப்பாய வழக்கும் மற்றும் கைத்தொழில் தீர்ப்பாய வழக்குகள் 08 உம் நிறைவடையவில்லை. 2022.12.31 ஆம் திகதிக்கு வணிக தீர்ப்பாய வழக்குகள் 02 உம் மற்றும் கைத்தொழில் தீர்ப்பாய வழக்குகள் 08 உம் நிறைவடையாக நிலையில் இருந்தன. (தீர்ப்பாய் சபையினால் வழங்கப்பட்ட சலுகைகளுக்கு எதிராக இலங்கை துறைமுக அதிகாரசபை மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததனால் விசாரித்து முடிவடைந்த வணிக தீர்ப்பாயங்கள் இரண்டு தீர்க்கப்படாத தீர்ப்பாயங்களாக கருதப்படுகின்றது.

சுங்க விசாரணைகள்

2021.12.31 ஆம் திகதிக்கு சுங்கத்தினால் 02 விண்ணப்பங்கள் விசாரணைக்காக கிடைக்கப்பெற்றுள்ளன 2022.12.31 ஆம் திகதிக்கு இரண்டின் விசாரணைப்பணி முடிவுறாத நிலையில் இருந்தன.

பாதுகாப்புப் பகுதி

பாதுகாப்பு பகுதி துறைமுக அதிகாரசபையில் அதி விசேட பணிகளை முன்னெடுக்கின்றது. அனைத்து துறைமுக சேவைகள் தொடர்பாகவும் பாதுகாப்பு வழங்குதல், துறைமுக அதிகார சபையின் நிருவாகத்திற்கு உட்பட்ட சகல துறைமுகங்களிற்கும் உரிய சொத்துக்களை மற்றும் மனித வளங்களை பாதுகாத்தல், துறைமுகத்தை பயன்படுத்துவோர், துறைமுக வளாகம் மற்றும் கடல் எல்லைகளை பாதுகாத்தல், கையாளப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவை வழங்கும் கலங்களுக்கான பாதுகாப்பினை வழங்குதல் இப்பகுதியின் பிரதான பொறுப்புகளாகும். இதற்கு மேலதிகமாக இலங்கை துறைமுக அதிகார சபையின் அபிலாசைகள் நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு பாதுகாப்பு செயற்பாடுகளை உயர் மட்டத்தில் வழங்குவது இப்பகுதியின் பொறுப்பாவதுடன் இச்செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும்

மேற்கொள்ளப்படுவதுடன் வழங்கப்படுகின்ற ஏனைய பல்வேறு வகையான சேவைகள் மூலம் வருமானம் ஈட்டுவதற்கும் இப்பகுதிக்கு முடிந்துள்ளது.

அதன்படி, மீளாய்வு ஆண்டினுள் இப்பகுதியினால் கீழ்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

- கொழும்பு துறைமுகத்தின் அனைத்து வாயில் கதவுகளுக்குமான பாதுகாப்பு கண்காணிப்பு கமெரா (CCTV) கட்டமைப்பொன்றினை பொருத்தும் திட்டத்தை பல கட்டங்களாக முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. 2022 ஆண்டு இறுதியாகும் போது துறைமுக பிரவேச வாயில் கதவுகளுள் இல 01 A, இல 01 – பிரதான வாயில் கதவு மற்றும் இல 06 – புதிய வாயில்கதவு ஆகிய 03 வாயில்கதவுகளையும் இத்திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, 09 துறைமுக பிரவேச வாயில்கதவுகளுள் 03 வாயில் கதவுகளின் பாதுகாப்பு கண்காணிப்பு கமெராக்கள் (CCTV) பொருத்தப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 6 வாயில் கதவுகளுக்கு கெமராக்களை பொருத்துவதற்கு 2023 ஆண்டில் வருடாந்த வரவு செலவினூடாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

- பல்வேறு குழுக்களின் கீழ் துறைமுக பிரவேச அனுமதிபத்திரங்கள் வழங்குவதன் மூலமாக பாதுகாப்பு பகுதி ரூபா 460.65 மில்லியன் வருமானமொன்றை ஈட்டிக்கொண்டுள்ளது.

- பாதுகாப்பு ஊழியர்களின் அறிவு, உளப்பாங்கு மற்றும் திறமைகளை விருத்தி செய்வதற்காக 2022 ஆண்டினுள் பாதுகாப்பு பயிற்சி பாடசாலை மூலமாக பல்வேறு 08 பயிற்சி நிகழ்ச்சிகளின் கீழ் 28 பயிற்சி அமர்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டது. இப்பயிற்சி நிகழ்ச்சிகள் மூலமாக 1987 பாதுகாப்பு ஊழியர்களிற்கு (ஒரு நபர் பல பயிற்சி அமர்வுகளில் கலந்துக்கொண்டுள்ளார்கள்) பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

  2022 ஆண்டில் பாதுகாப்பு பயிற்சி பாடசாலையில் காற்று துப்பாகி, துப்பாக்கிசுடும் மைதானமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்துப்பாக்கிச்சூட்டு மைதானத்தில் 20 இலத்திரனியல் குறிபார்க்கும் அட்டைகளை மற்றும் 30 சாதாரண குறிபார்த்தல் அட்டைகளைக் கொண்ட ஒரு தடவையில் 50 பேர்கள் சுடக்கூடிய துப்பாக்கிசூட்டு மைதானமாகும். பணம் அறவிடும் அடிப்படையில் இக் காற்றுதுப்பாக்கி, துப்பாக்கிச்சூட்டு மைதானத்தை வெளிநபர்களுக்கும் பெற்றுக்கொடுத்து துப்பாக்கி சுடும் கட்டணமாக ரூபா 32500.00 தொகை 2022 ஆண்டினுள் ஈட்டிக்கொண்டுள்ளது.

தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்கள் மற்றும் வெளி நிறுவனங்களுக்கிடையிலுள்ள தொடர்புகளை மிகவும் உறுதி செய்து மற்றும் விருத்தி செய்து இலங்கை துறைமுக அதிகார சபையின் புகழை அதிகரிப்பதற்காக தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி அதன் ஆரம்பம் முதல் நடவடிக்கை எடுத்துள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடக நிறுவனங்கள், பொதுமக்கள், அரசாங்க திணைக்களங்கள் மற்றும் முகவர் நிறுவனங்கள் மற்றும் துறையின் தரப்பினர்களுடன் ஏற்படுத்தும் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகளை மிகவும் உறுதிப்படுத்துதல் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியின் பொறுப்புகளில் ஒன்றாகும். இலங்கை துறைமுக அதிகார சபையின் நோக்கங்களை அடைந்து கொள்ளலில் ஊடகவியலாளர்கள், ஆய்வாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பிரபல்யமான தரப்பினர்களுடன் தொடர்புகள் மற்றும் தொடர்பாடல் செயற்பாட்டினை முகாமைத்துவம் செய்தல் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியின் ஏனைய பங்களிப்புகளுள் பிரதான பொறுப்பாகும். இப்பகுதியில் இருக்கின்ற உற்பத்தி உபகரணங்கள் மற்றும் பயிற்சி பெற்ற மனிதவள பாவனையில் இலங்கை துறைமுக அதிகார சபையின் முக்கிய சந்தர்ப்பங்களை விளம்பரப்படுத்துவதற்காக தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி செயற்றிறனான நடவடிக்கை மேற்கொள்கிறது.

கடந்த வருடத்தினுள் இலங்கை துறைமுக அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பாக விளம்பரப்படுத்துவதனூடாக மென்மேலும் ஊடகங்களை கவர்ந்துகொள்வதற்கு மற்றும் ஆக்கபூர்வமான பிரச்சாரமொன்றை பெற்றுக்கொள்வதற்காக தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி ஆக்கப்பூர்வமான பாதைக்கு வழிவகுத்துள்ளது.

செய்திகள் மற்றும் விசேட கடிதங்களை நிர்மாணித்து தொகுத்து வழங்குதல், இலக்காக கொண்ட குழுக்களுக்கு பல்வேறு ஊடக பாவனையின் தகவல்களை பகிர்ந்தளித்தல், மரபு ரீதியான மற்றும் சமூக ஊடக இயக்கங்களை திட்டமிடுதல், முகாமைத்துவம் செய்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபையின் புகழை மேம்படுத்துவதற்கு மூலோபாய செயற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கொவிட் 19 தொற்றுநிலவிய கடந்த வருடத்தினுள் பத்திரிகை அறிவித்தல்கள், வீடியோ ஆவணப்படங்கள், புகைப்படங்கள் தொகுப்புகள் மற்றும் தயாரிப்பின் ஊடாக இப்பணிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதோடு, இலங்கை துறைமுக அதிகார சபையின் புகழை மற்றும் நம்பிக்கையை மேம்படுத்தி செயற்திறனாக மற்றும் ஆக்கப்பூர்வமாக இயக்க செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது.

பாரம்பரிய பத்திரிகை முறைமையில் முன்னர் தயாரிக்கப்பட்ட "தீர்த்த" பத்திரிகை வாசகர் பலருக்கிடையில் மேலும் புகழடையச் செய்வதற்கு தற்போதைய தலைப்பின் கீழ் இற்றைப்படுத்தி செய்திகளுடனான புதிய வடிவ கவரக்கூடிய சஞ்சிகையாக்குவதற்கு எமது பகுதிக்கு முடிந்துள்ளது.

உள்ளக கணக்காய்வு பகுதி

உள்ளக கணக்காய்வு பகுதியின் செயற்பாடு வருடாந்த கணக்காய்வு திட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்டு, அதனை கணக்காய்வு குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு, பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்படுகிறது. அடையாளங்கண்டு கொண்டு மதிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு பணியிலுமுள்ள இடர்களை கருத்திற் கொண்டு, இடர் மீது அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் இடர் முகாமைத்துவம், நிருவாகத்தின் போக்கு மற்றும் உள்ளக நிருவாக செயற்பாடுகளை வெற்றிகரமாக கையாள்வதாக உறுதி செய்வதன் மூலம் அதிகார சபையினுள் உறுதியான நிருவாகத்தை ஸ்தாபிப்பதற்கு காலம் மற்றும் வளங்களை முகாமைத்துவம் செய்து கணக்காய்வு திட்டம் முறையாக செயற்படுத்துவதற்கு உள்ளக கணக்காய்வு பகுதி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வருமானம் தொடர்பான கணக்காய்வு

வருடத்தின் வருமானத்தின் கணக்காய்வு, கணக்காய்வு திட்டத்திற்கேற்ப மேற்கொள்ளப்படுவதோடு, துறைமுக கட்டணங்கள், கடன்பட்டோர் கணக்குகள், பிணக்கிற்குரிய சிட்டைகள் மற்றும் நிராகரிக்கப்பட்ட காசோலைகள், கடன்பட்டோர்களிடம் அறவிட வேண்டிய நிதி தொடர்பாக அறியப்பட்ட பிணக்குகள் பரீட்சிக்கப்பட்டது. தரையிறக்கல் மற்றும் விநியோக அலகு தொடர்பில் தொடர்ச்சியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

செலவினக் கணக்காய்வு

மூலதன மற்றும் மீண்டு வரும் செலவினங்கள், அதேபோன்று களஞ்சிய கொடுப்பனவு வவுச்சர்கள் தொடர்பில் கணக்காய்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதோடு, மேலதிக செலுத்தல்கள் மற்றும் ஏனைய முறைகேடுகள் வெளிப்படுத்திக்கொள்ள முடிந்துள்ளது. வாகன ஓட்ட குறிப்புகள் மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் பரீட்சிக்கப்பட்டதோடு, அவை தொடர்பான குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன. சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் தயாரித்தல் தொடர்பில் தொடர்ச்சியாக பரீட்சிக்கப்பட்டதோடு, கண்டறியப்பட்ட குறைப்பாடுகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டது.

களஞ்சியங்களின் பௌதிக ஆய்வுகள்

கொழும்பு துறைமுகத்தின் களஞ்சியங்கள் தொடர்பான பௌதிக ரீதியான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டதோடு, ஏனைய துறைமுகங்களில் வருடாந்த தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஒத்துழைப்பு வழங்கப்பட்டன. இத்தொகை ஆய்வு நடவடிக்கைகளில் பயன்படுத்தாது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள பொருட்களை அடையாளங் கண்டுள்ளதோடு, அது தொடர்பான விபரங்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காக வளங்கல் பகுதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நிதி தொடர்பான கணக்காய்வு

நிதி மற்றும் சிறுகையிறுப்பு நிதி தொடர்பாக அடிக்கடி விசாரணைகள் நடாத்தப்படுவதோடு, கண்டறியப்பட்ட முரண்பாடுகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டன.

ஊழியர்கள் வருகை தொடர்பான கணக்காய்வு நடவடிக்கைகள்

பகல் சேவை முறை மற்றும் இரவு சேவை முறை, தொழிலாளி தரம் மற்றும் தொழிலாளர் அல்லாத தரங்களிலுள்ள ஊழியர்களின் வருகை தொடர்பாக சடுதியான பரிசீலனைகள் சடுதி சுற்றிவளைப்பு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. அச்சந்தர்ப்பங்களில் சேவை தளங்களிலிருந்து வெளியே இருந்த ஊழியர்கள் தொடர்பான விபரங்கள் தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காக அறிவிக்கப்பட்டன. இதன் மூலம் ஊழியர்களின் வருகையில் முன்னேற்றமொன்று ஏற்பட்டது.

விசாரணைகள்

தலைவரின் வேண்டுகோளிற்கிணங்க வருடத்தினுள் விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

நிதி அறிக்கைகள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப அதிகாரசபையின் நிதி அறிக்கை தயாரிக்கப்படுகின்றதா என்பதை அவதானிப்பது இப்பகுதியின் பொறுப்பாகும்.

பூர்வாங்க கணக்காய்வு

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தினுள் வைப்பு நிதி மீண்டும் செலுத்துதல் மற்றும் துறைமுக கட்டணங்களுக்கு சலுகைகள் பெற்றுக்கொடுத்தல் தொடர்பாக பூர்வாங்க கணக்காய்வு செயற்பாடு மேற்கொள்ளப்பட்டன.

காலி துறைமுகம் மற்றும் திருகோணமலை துறைமுகம்

காலி துறைமுகத்தில் மற்றும் திருகோணமலை துறைமுகத்தில் களஞ்சிய ஆய்வுகள் தொடர்பான விசேட கணக்காய்வு விசாரணைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.



நிதி மீளாய்வு

ஆண்டறிக்கை 2022

வருமானம் (சகல துறைமுகங்களினதும்)

விபரம்	2022	2021	(துறைமுக நடவடிக்கைகள் சாரம்சம்) விபரம்	வருமானம் (ரூபா.மில்) 2022	2021
துறைமுக செயற்பாடுகளிலிருந்து வருமானம்	68,408	45,455	கப்பலோட்டம்	18,396	10,793
ஏனைய வருமானம்	30,666	15,152	கப்பற் சரக்கு ஏற்றுதல்/ இறக்குதல்	28,901	20,441
			வாப்பு கையாளல்	8,014	6,260
			துறைமுக வசதிகள்	9,250	6,176
			ஏனைய சேவை இயக்கம்	3,848	1,785
மொத்த வருமானம்	**99,074**	**60,607**	**உப மொத்தம்**	**68,408**	**45,455**

இயக்க மற்றும் ஏனைய செலவினங்கள் (சகல துறைமுகங்களினதும்)


(ரூபா.மில்லியன்)

விபரம்	2022 செலவினங்கள்	2021 செலவினங்கள்	(அதிகரித்தல்)/ குறைதல்	%
சொத்துக்களை பராமரித்தல்	1,852	1,457	(395)	(27)
எரிபொருள் , மின்சாரம் மற்றும் நீர்	5,760	2,509	(3,251)	(130)
வெளிநாட்டுக் கடன் மீதான வட்டி	2,400	800	(1,600)	(200)
மேலதிக நேரம்	6,425	5,850	(575)	(10)
தேய்மனாம் (தவணை முறையில் நிதி செலுத்துதல்)	4,120	3,957	(163)	(4)
சம்பளங்கள் வேதனங்கள் மற்றும் கொடுப்பனவுகள்	19,585	16,410	(3,175)	(19)
ஏனையவை	6,097	2,752	(3,345)	(122)
செலவினம்	**46,239**	**33,735**	**(12,504)**	**(37)**
வெளிநாட்டு நாணய மாற்று இழப்பு அடங்கலான மொத்தச் செலவினம்	**42,048**	**35,005**	**(7,043)**	**(20)**

துறைமுகங்களின் செயலாற்றுகை

கொழும்பு துறைமுகம்


2022 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்தில் ரூபா 46,270 மில்லியன் இயக்க இலாபமொன்று பதிவாகியுள்ளது. 2021 ஆம் ஆண்டில் தேறிய வருமானம் ரூபா 58,715 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் தேறிய இலாபம் ரூபா 94,897 மில்லியனாவதோடு இது ரூபா 36,182 மில்லியன் அதிகரிப்பாகும். 2022 ஆம் ஆண்டில் வரிக்கு முன்னரான மொத்த செலவினம் ரூபா 39,584 மில்லியன்களாகும். (ரூபா 4,523 மில்லியன் அந்நிய செலாவணி நட்டம் அடங்கலாக) 2021 ஆம் ஆண்டில் வரிக்கு முன்னரான செலவு ரூபா 33,232 மில்லியன்களாகும். (ரூபா 1,291 மில்லியன் அந்நிய செலாவணி நட்டம் அடங்கலாக) இது 19% அதிகரிப்பாகும்.



காலி துறைமுகம்

2022 ஆம் ஆண்டில் காலி துறைமுகத்தில் 238 மில்லியன் இயக்க நட்டம் பதிவாகியுள்ளது. 2021 ஆம் ஆண்டில் தேறிய இலாபம் ரூபா 956 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் தேறிய இலாபம் 1,470 மில்லியன் ஆனதோடு அது ரூபா 514 மில்லியன் அதிகரிப்பாகும்.


2022 வருடத்தில் வரிக்கு முன்னரான மொத்த செலவினம் ரூபா 1,320 மில்லியன் ஆனதோடு (ரூபா 335 மில்லியன் அந்நிய செலாவனி நட்டம் அடங்கலாக) 2021 ஆம் அண்டில் வரிக்கு முன்னரான மொத்த செலவினம் ரூபா 828 மில்லியன் ஆகியது. (ரூபா 21 மில்லியன் அந்நிய செலாவணி இலாபம் அடங்கலாக) இது 59% அதிகரிப்பாகும்.



திருகோணமலை துறைமுகம்

2022 ஆம் ஆண்டில் திருகோணமலை துறைமுகம் ரூபா 1,176 மில்லியன் இயக்க வருமானமொன்றை பதிவு செய்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் தேறிய மொத்த வருமானமான ரூபா 936 மில்லியனுக்கு ஒப்பாக 2022 வருடத்தில் தேறிய மொத்த வருமானம் ரூபா 2,707 மில்லியன் ஆக பதியப்பட்டது. இது ரூபா 1,771 மில்லியன் அதிகரிப்பாகும்.

2022 ஆண்டில் வரிக்கு முன்னரான மொத்த செலவினம் ரூபா 1,144 மில்லியன் ஆனதோடு, (ரூபா 2 மில்லியன் அந்நிய செலாவணி இலாபம் அடங்கலாக) 2021 ஆம் ஆண்டில் செலவு ரூபா 946 மில்லியனாக பதிவாகியது . (ரூபா 0.3 மில்லியன் அந்நிய செலாவணி இலாபம் அடங்கலாக) இது 21% அதிகரிப்பாகும்.



இலங்கை துறைமுக அதிகாரசபை அதன் மனித மூலதனத்திலுள்ள முக்கயத்துவத்தினை அடையாளங் கண்டு ஊழியர்களின் திறமைகள் மற்றும் அறிவை மதிப்பீட்டுக்குட்படுத்துகின்றது. 2022.12.31 ஆம் திகதி பல்வேறு குழுக்களுக்குரிய ஊழியர்களின் எண்ணிக்கை 8,516 இனைக் கொண்ட துறைமுக அதிகாரசபை தமது நோக்கங்கள் மற்றும் அபிலாசைகளை அடைந்து கொண்டுள்ளதோடு அவர்களின் சம உரிமைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு மற்றும் சமூக பொறுப்புளை நிறைவேற்றுவதற்கு கடமைப்பட்டுள்ளது.

மனித மூலதனத்தினை முதலீடு செய்வது, இலாபகரத் தன்மையை அதிகரிப்பதற்கு காரணமான விசேட பொருளாதார உள்ளீடொன்று மற்றும் உற்பத்தித்திறனொன்றுமாகும். இலங்கை துறைமுக அதிகாரசபை கல்வி மற்றும் பயிற்சி பெறும் சந்தர்ப்பங்களை உருவாக்கி தமது ஊழியர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதோடு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகள் மூலம் நிபுணத்துவ அறிவை பெற்றுக்கொள்வதற்காக நிதி வசதிகளும் ஏற்பாடு செய்து கொடுக்கின்றது.

கடலக, முகாமைத்துவ, தொழில்நுட்ப உபகரணங்களை கையாள்வது தொடர்பாக ஆரம்பக் கட்ட டிப்ளோமா சான்றிதழ் பாடநெறிகள் மற்றும் செயல்முறை அமர்வுகள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஆரம்ப பயிற்சி வசதிகளை ஏற்படுத்தும் நிறுவனமாகக் கருதுகின்ற மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலையினால் இயக்கப்படுகின்றது. மேலும், பயிற்சி ஊழியர்களின் தரங்கள் தொடர்பாக செயல்முறை பரீட்சைகள் நடாத்துவது மூலம் அவர்களுக்கு தேசிய தொழிர்சார் தகுதிகள் (NVQ) சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கும் இலங்கை துறைமுக அதிகாரசபை நடவடிக்கை மேற்கொள்கின்றது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்கள் தமது நிறுவனத்துக்கு சிறந்த விசுவாசத்துடன் நடவடிக்கை மேற்கொள்வதோடு, அவரகளின் மற்றும் நிறுவனத்தின் முன்னேற்றம் தொடர்பாக அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றனர். அவர்கள் பணிச்சூழலுக்கு மிகவும் ஒத்துப்போவதோடு, இலங்கை துறைமுக அதிகாரசபையின் அபிலாசைகள், பணிக்கூற்று மற்றும் தொலை நோக்கினை உயர் மட்டத்தில் பேணிச்செல்லும் ஆர்வத்துடன் மற்றும் பொறுப்புடன் செயற்படுகின்றனர்.

இலங்கை தறைமுக அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு விதிமுறை (SOR) சிறந்த மட்டத்தில் பேணிச் செல்வதனூடாக நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு நிறுவனத்தின் நிறைவேற்று மற்றும் நிறைவேற்றுத் தரமல்லாத தரங்களின் பணிக்குழுவினர் நித்தம் மீளாய்வு செய்யப்படும். பதவியுயர்வு, இடமாற்றம் செய்தல் மற்றும் ஒழுக்காற்று செயற்பாடுகள் போன்ற மனிதவள செயற்பாடுகள் சமமாக மற்றும் சமத்துவத்துடன் மேற்கோள்ளப்படுகின்றன. ஊழியர் மனக்கவலைகளை விசேட கவனத்துடன் ஆராய்ந்து பார்ப்பதுடன், அவற்றை தீர்ப்பதற்காக தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

சவாலான நிலைமைகளிலும் கூட, நம்பிக்கையுடன் கூடிய பணிச் சூழலொன்றை ஊழியர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்காக, இலங்கை துறைமுக அதிகாரசபையின் சேவைமுறை, வீட்டிலிருந்து கடமைகளை மேற்கொள்ளுதல் போன்ற புதிய செயற்பாடுகளை அறிமுகப்படுத்தி மற்றும் போக்குவரத்து வசதிகளையும் ஏற்படுத்தி ஊழியர்களை ஊக்குவிப்பதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மீளாய்வுக்குட்படும் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஒன்றிணைந்த சமூகப் பொறுப்புக்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

- க.பொ.த. (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சைகளில் மிகவும் சிறந்த முறையில் சித்தி பெற்ற துறைமுக ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்கள் வழங்குதல்.

- துறைமுக ஊழியர்களது சிறு பிள்ளைகளின் நலன்புரி தொடர்பிலான சகல வசதிகளையும் கொண்ட பகல்நேர பராமரிப்பு நிலையம் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

- சகல வசதிகளையும் கொண்ட துறைமுக தீயணைப்புப் படைப்பிரிவு அதன் பணிகளில் கொழும்பு மாநகர சபைக்கு உதவியுள்ளதுடன் கொழும்பு மற்றும் அண்டிய பிரதேசங்களில் அவசர நிலைமைகளின் போது தீயணைக்கும் நடவடிக்கைகளில் தனது ஒத்துழைப்பையும் நல்கியுள்ளது.

பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுகின்ற பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் மற்றும் உப குழுக்கள்

இலங்கை துறைமுக அதிகார சபைக்கு பணிப்பாளர் சபை 09 அங்கத்தவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது

(அ) துறைசார் அமைச்சரினால் பரந்த அனுபவம் கொண்ட துறைமுக இயக்க அபிவிருத்தி தொடர்பாக அல்லது சட்டரீதியான அல்லது நிதி விடயங்கள் அல்லது கப்பலோட்ட, வணிக அல்லது பொறியியல் நடவடிக்கைகள் அல்லது நிருவாக ரீதியான அல்லது தொழிலாளர் உறவுகள் தொடர்பான பரந்த அனுபவத்துடன் கூடிய தலைவரொருவர், உப தலைவரொருவர் மற்றும் மேலும் பணிப்பாளர்கள் (03) மூவர் நியமிக்கப்படல் வேண்டும்.

(ஆ) துறைச்சார் அமைச்சரினால் தேர்ச்சியான மற்றும் அனுபவமுள்ள நபரொருவர் பணிப்பாளராக பெயரிடப்படல் வேண்டும்.

(இ) நிதி துறைச்சார் அமைச்சரினால் பொது திறைசேரியை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக பொது திறைசேரியின் உத்தியோகத்தரொருவர் பணிப்பாளர் சபையின் அங்கத்தவரொருவராக நியமிக்கப்பட வேண்டும்.

(ஈ) சுங்க பணிப்பாளர் நாயகம்.

(உ) மீன்பிடி துறைச்சார் அமைச்சரினால் மீனவ விடயம் தொடர்பான பிரதிநிதியொருவரை பெயரிடல் வேண்டும்.

மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டினுள் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் தொழில்சார் விபரங்கள் பக்க இல 17 முதல் 22 வரை குறிப்பிடப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பிரதான பொறுப்புக்களாவன

- மூலோபாய நோக்கங்கள், கொள்கைகள், குறிக்கோள்களை நிர்ணயிப்பதன் மூலம் வழிகாட்டுதல்.
- குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற செயலாற்றுகையை மேற்பார்வை செய்தல்.
- போதிய உள்ளக கட்டுப்பாட்டு முறையொன்று மற்றும் சிறந்த நெறிமுறைகளைப் பேணுவதற்கு ஏற்பாடு செய்தல்.
- நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு வழிக்காட்டுதல்களை தயாரித்து அவற்றின் கால எல்லையை உறுதிசெய்தல்.

பணிப்பாளர் சபையின் பிரதான செயற்பாடுகள் கீழ்க்காட்டப்பட்டுள்ளவாறு அமையும்.

தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் அனைத்து அங்கத்தவர்களுடன் கலந்துரையாடி பணிப்பாளர் சபையின் செயலாளரினால் பணிப்பாளர் சபை கூட்டங்கள் தொடர்பான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும். பணிப்பாளர் சபையின் கூட்டங்கள் வழக்கமாக நடத்தப்படுவதோடு, மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் வழக்கமாக நடத்தப்பட வேண்டிய மற்றும் விசேட கூட்டங்கள் உட்பட பணிப்பாளர் சபை 14 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு, பணிப்பாளர் சபை பத்திரங்கள், கடந்த பணிப்பாளர் சபை கூட்ட அறிக்கை, பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்ற அறிக்கை, இயக்கம் மற்றும் நிதி செயலாற்றுகை சுட்டிகள், பிரதான மூலதன செலவினத் திட்டங்கள் மற்றும் பிரேரனைகள் ஆகியன உள்ளடங்கும். Boad PAC என்ற பெயரில் கணணிக் குறியீடொன்று உருவாக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் அமுல்படுத்தலின் போது போதிய தகவல்களுக்கு பிரவேசிக்கும் சந்தர்பம் கிடைக்கின்றது.

உயர் மட்டத்திலான முகாமைத்துவ குழு (TLMC)

இலங்கை துறைமுக அதிகார சபையின் நிருவாக நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் மேற்பார்வை செய்வதற்குரிய அரசாங்க தொழில் முயலுனர் சுற்று நிருப விதிமுறைகளின் பிரகாரம் 2022 நவம்பர் மாதம் வரை முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இல 01/2021 மற்றும் 2021.11.16 திகதி கொண்ட அரசாங்க நிறுவனங்களின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அரசுக்குரிய தொழில் முயலுனர்கள் தொடர்பில் நிருவன நிருவாக விதி மற்றும் இயக்க வழிக்காட்டல்களின் தேவைப்பாடான முகாமைத்துவக் குழு இரத்துச் செய்யப்பட்டதோடு, அதற்கு பதிலாக நிறைவேற்றுக் குழுவொன்று நியமிப்பது உகந்ததென பணிப்பாளர் சபை புரிந்து கொண்டது.

2022.09.22 ஆம் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் கடந்த நிருவாகக் கட்டமைப்பு – 2022 மூலம் நிருவனக் கட்டமைப்பு ஒப்பீடு செய்யப்பட்டது. அதற்கேற்ப இலங்கை துறைமுக அதிகார சபையின் நோக்கங்களை வெற்றிக்கொள்ளும் பொருட்டு, சிறந்த உள்ளக நிருவாக வரையறையொன்றை அமைப்பதற்கு நிறைவேற்றுக் குழுவுக்கு பதிலாக உயர் முகாமைத்துவக் குழு நியமிக்கும் தேவைப்பாடு உருவாகியது.

உயர் மட்டத்திலான முகாமைத்துவக் குழு அதன் செயலாளராக செயல்படுகின்ற பணிப்பாளர் சபையின் செயலாளர் உட்பட 14 அங்கத்தவர்களுடன் கூடியது. அதாவது,

(அ) பணிப்பாளர் சபையின் தலைவர், உப தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் உட்பட அங்கத்தவர்கள் மூவர் (03)

(ஆ) முழு நேர அங்கத்தவர்கள் 10 பேர். அதாவது,

- பதில் கடமையாற்றும் மேலதிக முகாமைத்துவப் பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் இயக்கம்)
- பணிப்பாளர் (இயக்கம்)
- பணிப்பாளர் (மனிதவள அபிவிருத்தி)
- பணிப்பாளர் (தொழிநுட்பம்)
- பணிப்பாளர் (நிதி)
- பணிப்பாளர் (சந்தைப்படுத்தல் மற்றும் ஊடகம்)
- பணிப்பாளர் (சேவை வழங்கல்)
- பணிப்பாளர் (பாதுகாப்பு)
- ஹாபர் மாஸ்டர்

(இ) பணிப்பாளர் சபையின் செயலாளர்.

ஒவ்வொரு பணிப்பாளர் சபை கூட்டமொன்றும் நடாத்துவதற்கு முன் மாதத்துக்கு ஒரு முறை உயர் மட்ட முகாமைத்துவ குழு கூட்டம் நடைபெறும். மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டினுள் இக்கூட்டங்கள் இரண்டு (02) நடைபெற்றன. எவ்வாறாயினும். மீளாய்வாண்டினுள் உயர் மட்டத்திலான முகாமைத்துவ குழு நியமிப்பதற்கு முன் நிறைவேற்றுக் குழு கூட்டங்கள் ஒன்பது (09) நடைபெற்றன.

உயர் மட்டத்திலான முகாமைத்துவக் குழுவின் பிரதான பங்களிப்புக்கள்

(அ) கொள்கை ரீதியான சிக்கல்கள் தொடர்பாக இறுதி அங்கீகாரம்/ பரிந்துரைகள் பெற்றுக் கொள்வதற்கு பணிப்பாளர் சபைக்கு சமர்பிப்பதற்கு முன் அவற்றை மீளாய்வு செய்து கலந்துரையாடுவதற்கு,

(ஆ) துறைமுக பயனாளிகள் மற்றும் தரப்பினர்களின் சேவை நிலையை உயர் மட்டத்துக்கு கொண்டு வருவதற்காக வளங்களின் உச்ச பயனை

அடைந்துக்கொள்ளல், ஆக்கத்திறனான மேம்படுத்துதல் தொடர்பான வழமையான நிருவாக மற்றும் இயக்க நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானங்கள் எடுத்தல்.

(இ) வணிக ரீதியில் சாத்தியமான நிறுவனமொன்றாயிருப்பதற்கு மத்தியிலும் வழமையான பொறுப்புக்களைக் கொண்ட அரச பிரிவின் நிறுவனமொன்றாக செயற்படுவதற்கான தீர்மானங்கள் எடுத்தல்.

1505 போர்த்துக்கேயரினால் கடற்படைத்தளமாக / துறைமுகமாக உபயோகித்த ஆரம்பிக்கப்பட்டதுடன் மேற்கு உலகில் கொழும்பு பற்றித் தெரிந்து கொள்ளக் கிடைத்தமை.

1875 7 ஆம் எட்வெட் மன்னரினால் டிசெம்பர் 09 ஆம் திகதி தென்மேற்கு அலைதாங்கிக்கான அடிக்கல் நாட்டப்படல்.

1882 கொழும்பு துறைமுகத்தின் நிர்வாகப் பணிக்காக "ஹாபர் போர்ட்" என்னும் பெயரில் சபையொன்று நிறுவப்படல்.

1885 1285 மீட்டர் நீளமான தென்மேற்கு அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாகக்கப்படல்.

1898 335 மீட்டர் நீளமான வடகிழக்கு அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்.

1899 உலர் துறைமேடையின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படல்.

1906 814 மீட்டர் நீளமான "ஐலன்ட்" அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்.

1906 உலர் துறைமேடையின் நிர்மாணப்பணிகள் பூர்த்தியாக்கப்படல்.

1909 உலர் துறைமேடைக்கான 250 மீட்டர் நீளமான வழிகாட்டிப் பாலத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல் (ஆழமான நீரில் அமைந்த முதல் கரையோர நங்கூரத்தளம் இதுவாகும்.)

1912 தற்போது ஜய கொள்கலன் முனையம் அமைந்திருக்கும் பிரதேசத்தில் நிலக்கரி இறக்கும் 18 துறைமேடைகளின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்.

1912 தென்மேற்கு அலைதாங்கியின் பகுதி 550 மீற்றர் வரை நீடிக்கப்படல்.

1913 துறைமுக அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக துறைமுக ஆணைக்குழு அமைக்கப்படல்.

1922 பெற்றோலிய எண்ணெய் வழங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்படல்.

1950 9 முதல் 11 மீட்டர் ஆழத்துடன் கூடிய 15 கரையோர நங்கூரத்தளங்கள் 7.5 மீட்டர் ஆழமான நீரில் 02 நங்கூரத்தளங்கள், 55,800 சதுர மீற்றர் கொண்ட அண்மித்த களஞ்சியங்கள் மூலம் மேலும் குத வசதிகள் ஏற்படுத்தப்படுவதற்கான வசதிகள் வழங்கப்படுவதற்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1954 தென்மேற்கு அலைதாங்கியின் கரையோர நங்கூரத்தளத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 02 ஆம் எலிசபெத் இராணியினால் அங்குரார்ப்பணம் செய்து வைப்பப்பட்டதனால் அது "எலிசபெத் இராணி இறங்குதுறை" எனப் பெயரிடப்பட்டது. அதில் நங்கூரமிடப்பட்ட முதல் கலம் இங்கிலாந்து அரசுக்குரிய "கோதிக்" எனும் கப்பலாகும்.

1956 17 கரையோர நங்கூரத்தளங்கள், அண்மித்த களஞ்சியங்கள் மற்றும் குதங்கள் நிர்மாணிக்கப்படல்.

1958 கொழும்புத் துறைமுகத்தின் கப்பற்சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்பட்டு துறைமுக கப்பற்சரக்கு கூட்டுச்சபை ஸ்தாபிக்கப்படல்.

1964 காலி துறைமுகத்தில் கப்பற்சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்படல்.

1967 துறைமுக ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவைக் கூட்டுத்தாபனம் நிறுவப்படல்.

1967 திருகோணமலை துறைமுகத்தில் கப்பற்சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்படல்.

1979 துறைமுக ஆணைக்குழு துறைமுக கப்பற்சரக்கு கூட்டுச்சபை மற்றும் துறைமுக ஒத்துப்பார்த்தலும் பாதுகாப்புக்குமான சேவைகள் கூட்டுத்தாபனம் போன்றவற்றினை ஒன்றிணைத்து இலங்கை இலங்கை துறைமுக அதிகாரசபை நிறுவப்படல்.

1980 ஜப்பான் நாட்டின் உதவியுடன் கொழும்பு துறைமுகத்திற்கான பாரிய திட்டமொன்று தயாரிக்கப்படல்.

1980 எலிசபெத் இராணி இறங்குதுறையின் புதிய முனையம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

1982 முதலாவது "கென்ட்ரி" பாரம்தூக்கியான "டன்கோ 80" சேவையில் ஈடுபடுத்தப்படல்.

1982 ஜப்பானிய வ/ப "பென்றாஓசன் வக்கச்சிக்கு" ஒன்றிணைந்த கம்பனியுடன் புதிய கொள்கலன் முனையமொன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடல்.

1983 சகல அங்கங்களுடன் கூடிய கொளகலன் முனையத்தின் 1 ஆம் கட்ட நிர்மாணப் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

1984 சகல அங்கங்களுடன் கூடிய கொள்கலன் முனையத்தின் ii ஆம் கட்ட நிர்மாணப் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

1984 ஹிற்ராச்சி வகையின் 04 றான்ஸ்பர் பாரம்தூக்கிகள் எலிசபெத் இராணி கொள்கலன் முனையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படல்.

1985 ஜய கொள்கலன் முனையத்தின் 01 ஆம் கட்ட வேலைகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல்.

1987 இலங்கை துறைமுக அதிகார சபையின் மஹபொல பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படுதல்.

1987 ஜய கொள்கலன் முனையத்தின் II ஆம் கட்ட வேலைகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1988 கப்பல்களைக் கட்டிவைப்பதற்கு கரைக்கு அப்பால் அமைந்துள்ள ஒருமுனை மிதவை நங்கூரத்தளத்தை அமைத்து சேவையில் ஈடுபடுத்தப்படல்.

1994 புதிய துறைமுக உட்புகு பாதையின் வேலைகள் பூர்த்தி செய்யப்படல்.

1995 ஜய கொள்கலன் முனையத்தின் III ஆம் கட்ட பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1996 ஜய கொள்கலன் முனையத்தின் IV ஆம் கட்ட பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1998 ஐக்கிய கொள்கலன் முனையத்தின் வேலைகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1998 இணைந்த துறைமுகங்கள் (அபிலயேற்றட் போட்ஸ்) சம்மேளனம் நிறுவப்படல்

1999 கிழக்கு கடற்கரையின் ஒலுவில் வெளிச்ச வீட்டை சேவையில் ஈடுபடுத்துதல் அத்தோடு ஒலுவில் கடல்சார் பயிற்சி நிலையத்தையும் திறந்து வைத்தல்.

1999 இராணி இறங்குதுறையில் சவுத் ஏசியா கேட்வே டேர்மினலின் (எஸ்.ஏ.ஜீ.ரீ) அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1999 திருகோணமலை துறைமுகத்தில் கரையோர நங்கூரத்தளங்களை நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படல்.

2000 கொழும்பு தென் துறைமுகத்தின் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படல்.

2000 காலி துறைமுகத்தில் புதிய நங்கூரத்தளம் நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படல்.

2000 பேலியகொடை கொள்கலன் கப்பற்சரக்கு நிலையம் ஆரம்பித்து வைக்கப்படல்.

2000 காலி துறைமுகம் பிராந்திய துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்படும் குறிப்பிட்ட திட்டத்தின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல்.

2000 வட பாலத்தின் 11 ஆம் கட்ட அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

2000 ஒரே இடத்திலான ஆவணமாக்கல் நிலையம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல்.

2001 காலி துறைமுகத்தின் புதிய துறைமேடை திறந்து வைக்கப்படல்.

2003 ஒலுவில் துறைமுக உட்புகு பாதையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

2003 குறைகொள்கலன் (எல்.சி.எல்) மற்றும் பிரித்த மொத்த கப்பற் சரக்குகளுக்கான சேவைகள் வழங்கும் நிலையம் ஆரம்பித்து வைக்கப்படல்.

2003 இலங்கை துறைமுக அதிகாரசபையின் கடலக நூதனசாலை திறந்து வைக்கப்படல்.

2003 சிவில் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டதன் பின்னர் ஐக்கிய கொள்கலன் முனையம் திறந்து வைத்தல்.

2004 ஐக்கிய கொள்கலன் முனையத்தின் கொள்கலன் கையாளும் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல்.

2004 இலங்கை துறைமுக அதிகாரசபையின் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது.

2004 பாரிய அளவிலான சேவைப் பிரிவான ஜய கொள்கலன் முனையம் தேசிய உற்பத்தித் திறனுக்கான விருதை பெற்றுக்கொள்ளல்.

2004 கொழும்பு துறைமுகத்தினால் 02 மில்லியன் கொள்கலன் கையாளப்படுதல்.

2005 ஒலுவில் துறைமுகம் மற்றும் வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

2005 தேசிய உற்பத்தித் திறன் தொடர்பான செயலகத்தினால் மத்திய தர சேவை பிரிவிற்கான திறன் சான்றிதழ் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மஹபொல பயிற்சி நிலையத்துக்கு வழங்கப்படல்.

2006 கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் பாதுகாப்பு மற்றும் மெகா போர்ட் உபகரணங்கள் அறிமுகம் செய்து வைக்கப்படல்.

2006 கொழும்பு தென் துறைமுக நிர்மாணம் தொடர்பிலான உத்தேச கொழும்புத் துறைமுக விரிவாக்கல் செய்திட்டத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல்.

2006 ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் (முதலாம் கட்டம்) விபரமான வடிவமைப்பு வேலைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல்.

2007 ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைத்தல் மற்றும் நிதி ஒப்பந்தம் கைச்சாத்திடல்.

2008 ஒலுவில் துறைமுக திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுதல்.

2008 கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுதல்.

2008 ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் எண்ணெய்த் தாங்கித் தொகுதிகளின் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பான உடன்பாடு கைச்சாத்திடல்.

2009 ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் வசதிகள்,எண்ணெய்த் தாங்கித் தொகுதி மற்றும் நிர்வாக கட்டட நிர்மாணப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டுதல்.

2009 ஜய கொள்கலன் முனைய முகாமைத்துவத் தொகுதி “NAVIS” வரை தரமுயர்த்துதல்.

2010 2010.08.15 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக நீர்த்தடாகத்துக்கு கடல் நீர் பரப்பும் வைபவம்.

2010 2010.11.18 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல்.

2010 ஜய கொள்கலன் முனையத்தில் 02 மில்லியன் கொள்கலன் கையாளப்படுதல்.

2010 கொழும்பு துறைமுகத்தில் 04 மில்லியன் கொள்கலன் கையாளப்படுதல்.

2011 06 புதிய கென்ட்ரி பாரம்தூக்கிகளும் 30 றான்ஸ்பர் பாரமுயர்த்திகளும் துறைமுகத்துக்கு கிடைக்கப்பெறுதல்.

2011 இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொழும்பு எண்ணெய் முனையத்தின் கொள்ளளவு அதிகரிக்கப்படுதல்.

2011 50 முனைய டிரக்டர்கள் துறைமுகத்துக்கு கிடைக்கப்பெறல்.

2011 கொழும்பு துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் கீழ் தென் கொள்கலன் முனைய ஒப்பந்தம் கைச்சாத்திடல்.

2011 ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் புதிய வர்த்தகங்கள் ஆரம்பிக்கப்படுவதனைக் குறிக்கும் நிலம் தோண்டும் வைபவம்.

2011 தென் கொள்கலன் முனையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுவதனைக் குறிக்கும் நிலம் தோண்டும் வைபவம்.

2012 ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் ரோ ரோ கப்பல்களின் கையாளல் ஆரம்பிக்கப்படல்.

2012 கொழும்பு துறைமுக புளுமெண்டல் எண்ணெய் களஞ்சியத்தில் பழுதடைந்திருந்த எண்ணெய்க் குழாய் வழி மீள் மாற்றம் செய்யப்படல்.

2013 6.8 கி. மீட்டர் கொண்ட பாரிய அலைதாங்கி மற்றும் தெற்கு கொள்கலன் முனையத்துடனான கொழும்பு துறைமுகம் விரிவாக்கும் செய்திடடம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

2013 ஒலுவில் துறைமுகம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

2013 கொள்கலன் முனையத் தொகுதியின் இறக்குமதி செய்யப்படும் நிறைவான கொள்கலன்களை ஏற்றும் மொடியூல் நடைமுறைப்படுத்தப்படல்.

2013 ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் நிர்வாகக் கட்டடம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

2014 ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் வசதிகள் மற்றும் எண்ணெய்த் தாங்கித் தொகுதி வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல்.

2014 கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி செய்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்தல்.

2015 கிழக்கு கொள்கலன் முனையம் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல்.

2015 தர முகாமைத்துவ முறைமை தொடர்பிலான ISO 9001 – 2008 தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளல்.

2015 மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் கட்டம் II இன் நீர்த்தடாகத்துக்கு கடல் நீர் நிரப்பும் வைபவம்.

2015 கொழும்பு துறைமுகத்தில் இருபது சம அலகு கொள்கலன் 05 மில்லியன் கையாளல்.

2016 கொள்கலன் கப்பற்சரக்கு நிலையத்தை(CFS 1) மீள் நிறுவுதல் (2016.08.10).

2016 இயந்திர உபகரண பொறியியல் பகுதியினால் ஜய கொள்கலன் முனையத்தில் உயரத்தில் குறைந்த புதிய டிரேலர் ஒன்றை நிர்மாணித்தல் (2016.08.31).

2016 பாரிய கொள்கலன் கப்பலான MSC Maya கொழும்பு துறைமுகத்தின் கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையத்துக்கு (CICT) வருகை தரல் (2016.09.16).

2017 பூரணமாக மீள் நிர்மாணிக்கப்பட்ட கொள்கலன் கப்பற்சரக்கு நிலையத்தின் (CFS 1) கையாளல் பணிகள் ஆரம்பிக்கப்படுதல் (2017.05.31).

2017- ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் துறைமுக கையாளல் தொடர்பில் சீனா மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கிடையில் சலுகைக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படுதல்.(2017.07.29)

2017 இணைந்த துறைமுகங்களின் சர்வதேச வலையமைப்பு தொடர்பிலான 19 ஆவது (International Network of Affiliated Ports (INAP) Conference (2017-11-07,08) மாநாடு இலங்கையில் ஆரம்பிக்கப்படுதல்.

2017 ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான பங்காளர்களின் உடன்படிக்கை (Shareholders Agreement) மற்றும் காணி குத்தகைக்கு வழங்கும் உடன்படிக்கை (Land Lease Agreement) (2017/12/08).

2017 இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் சைனா மேர்சன்ட் ஹோல்டிங்ஸ் கம்பனிக்கிடையில் ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான சலுகை உடன்படிக்கையின் கீழ் முதலாவது கொடுப்பனவு மேற்கொள்ளப்படுதல்.(2017.12.09)

2017 கொழும்பு துறைமுகத்தில் 6 மில்லியன் இருபது சம அலகு கொள்கலன் கையாளப்படுதல் (2017.12.20).

2018 இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் வ.்.ப சைனை மேர்ச்சன்ட் போர்ட் ஹேல்டிங்ஸ் கம்பனிகளுக்கிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஹம்பாந்தோட்டை துமைக சலுகைக்கான ஒப்பந்தத்தின் கீழ் 02 ஆவது கொடுப்பனவை ஏற்படுத்துதல்.

2018 கொழும்பு துறைமுகம் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி செய்வதற்காக சவுத்ஏசியா கேட்வே டர்மினல் (SAGT) மற்றும் கழம்பு இன்டநெஷனல் கன்டெயினர் டேர்மினல் (CICT) கம்பனிகளுக்களுடன் இலங்கை துறைமுக அதிகாரசபை புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு உட்படுதல்.

2018 2018 ஆம் ஆண்டில் சிறந்த துறைமுகத்திற்கன விருதை இலங்கை துறைமுக அதிகாரசபையினால் சர்வசே துறைமுகங்கள் ஒன்றியத் (Global Port Forum) திலிருந்து பெற்றுக்கொள்ளல்.

2018 இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் சைனா மர்ச்சன்ட் போர்ட் ஹோல்ட்டிங்ஸ் கம்பனிகளுக்கிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஹம்பாந்தோட்டை துறைமுக சலுகைக்கான ஒப்பந்தத்தின் கீழ் செலுத்த வேண்டிய இறுதிப்பங்கை (last franche) ஏற்பாடு செய்தல்.

2018 கொழும்பு துறைமுகத்தினால் முதன்முறையாக நடாத்தப்பட்ட "Colombo Port Award" விருது வழங்கும் விழாவை ஏற்பாடு செய்தல்.

2018 2018 முதலாவது அரையாண்டில் உலகில் அதிகூடிய கொள்கலன்களைக் கையாழும் துறைமுகமாக கொழும்பு துறைமுகம் தரப்படுத்தில் ஒப்படல் அல்பாலைனர் தரப்படுத்தலுக்கு ஏற்ப

2018 கொழும்பு துறைமுகம் இருபதின் சம அலகுகள் 7 மில்லியன் கொள்கலன்களை கையாழ்வதற்கு சக்தி பெற்றமை.

2019 பூகோளவியல் துறைமுக ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட விருது வழங்கும் நிகழ்வில் "2019 ஆம் ஆண்டிற்கான துறைமுக அதிகார சபை" க்குரிய விருதினை இரண்டாம் முறையாக இலங்கை துறைமுக அதிகார சபை வெற்றிக்கொண்டது.

2019 பூகோளவியல் துறைமுக ஒன்றிய விருது வழங்கும் நிகழ்வில் 2019 ஆம் ஆண்டிற்கான துறைமுக அரச பங்குதாரருக்குரிய விருதினை தொடர்ச்சியாக மூன்றாம் முறையாக இலங்கை துறைமுக அதிகார சபை வெற்றிக்கொண்டது.

2019 இலங்கை துறைமுக அதிகார சபைக்கான புதிய பிரதான அலுவலக கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2019 இலங்கை துறைமுக அதிகார சபையின் 40 ஆண்டு பூர்த்தியினை/ பூர்திவிழாவினை கொண்டாடுதல்.

2019 கொழும்பு துறைமுகத்தினால் இரண்டாம் தடவையாக / முறையாக ஏற்பாடுச் செய்யப்பட்ட கொழும்பு துறைமுகத்தின் விருது வழங்கல் மாலை ஆகஸ்ட் 31 ஆம் நாள் நடைப்பெற்றது.

2020 ஜய கொள்கலன் முனையத்தின் IV ஆம் கட்டத்தின் கீழ் அலை தாங்கியை 120 மீட்டர்களினால் நீட்டுவதற்கான நிர்மாணப்பணிகளை ஆரம்பித்தல்.

2020 ஜய கொள்கலன் முனையத்தின் V வது கட்டத்திற்காக கொண்டுவரப்பட்ட புதிய மூன்று கிரன்டி பாரந்தூக்கிகளை கிழக்கு கொள்கலன் முனையத்தின் இயக்க செயற்பாடுகளிற்காக பொறுத்துதல்.

2021 இலங்கை துறைமுக அதிகார சபையின் பணியாளர்களுக்காக 17 மாடிகளைக் கொண்ட கடல்சார் சேவைகள் வழங்கும் நிலையத்தை நிர்மாணித்தலை ஆரம்பித்தல்.

2021 கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை நிர்மாணிப்பதற்காக Adani Ports Economics Zone Limited கம்பனி உள்நாட்டு பங்குதாரரான ஜோன் கீல்ஸ் நிறுவனம் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபைக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட நிர்மாணித்து, இயக்கி, கையளிக்கும் ஒப்பந்தத்துக்கு கைச்சாத்திடல்.

2022 கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தில் (2 ஆவது கட்டம்) 2022 சனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2022 ஐக்கிய அரபு அமீர் இராச்சியத்தில் 2022 செப்தெம்பர் 28 ஆம் திகதி நடைபெற்ற 2022 "Global Port Forum Awards" விருது வழங்கும் விழாவில் வருடத்தின் சிறந்த துறைமுக அதிகாரசபைக்குரிய விருதை பெற்றுக்கொண்டுள்ளது.



துறைமுக புள்ளி விபரங்கள்

ஆண்டறிக்கை 2022

கொழும்பு துறைமுகம்

துறைமுக பரிமாணம்

துறைமுக பிரதேசம்

துறைமுக தடாக பிரதேசம்	184.6 ஹெக்டயார்
வட மேல் அலைதாங்கியின் நீளம்	810 மீட்டர்
வட கிழக்கு அலைதாங்கியின் நீளம்	330 மீட்டர்
மேற்கு நுழைவாயில்	230 மீட்டர் X 16 மீட்டர்
வடக்கு நுழைவாயில்	190 மீட்டர் X 13 மீட்டர்

புதிய கொழும்பு தெற்கு துறைமுகம்

துறைமுகப் பிரதேசம்

துறைமுக தடாக பிரதேசம்	192.0 ஹெக்டயார்
தென்மேற்கு அலைதாங்கியின் நீளம்	5,140 மீட்டர்
வடமேல் அலைதாங்கியின் நீளம்	1,550 மீட்டர்
பிரதான நுழைவாயில்	570 மீட்டர் X 18 மீட்டர்

நங்கூர வசதிகள்

நங்கூரத்தளம்	முழு நீளம் (மீ)	கரையோர ஆழம் (மீ)
கிழக்கு கொள்கலன் முனையம்	5,140	18
தெற்கு கொள்கலன் முனையம் (CICT)	5,140	18

வேலை நேரங்கள்

வருடத்தின் சகல நாட்களிலும் கொழும்பு துறைமுக வேலைகள் 24 மணித்தியாலய அடிப்படையில் இடம் பெறும்.

காலி துறைமுகம்

துறைமுக பரிமாணம்

நீர் பிரதேசம்	15.3718 ஹெக்டயார்
உட்பிரவேச கால்வாய்	140 மீட்டர்
நிலப் பிரதேசம்	17.1914 ஹெக்டயார்
மொத்த அதிகூடிய நீள அளவு	130 மீட்டர்
அதிகூடிய ஆழம்	7.3 மீட்டர்

வேலை நேரங்கள்

மே தினம் பகல் நேரத்தில் மாத்திரம் கப்பல் நடவடிக்கைகள் இடம்பெறும் என்பதோடு காலி துறைமுகத்தில் வருடத்தின் சகல நாட்களிலும் காலி துறைமுக வேலைகள் 24 மணித்தியாலய அடிப்படையில் இடம் பெறும்.

வழி விலகும் காலம்

கிழக்கு - மேற்கு பிரதான கடல் மார்க்கத்திலிருந்து பயணக் காலம் எதுவுமில்லை.

நங்கூரத்தள வசதிகள்

மொத்த கரையோர நங்கூரத்தளங்கள் – 05

நங்கூரத்தளம்	முழு நீளம் (மீ)	கரையோர ஆழம் (மீ)
குளோசன்பேர்க் ஜெட்டி	420	8.9
புதிய பாலம்	162	8.9
புதிய பாலம் / குறுக்காக	84	8.9

களஞ்சிய வசதிகள்

களஞ்சியத்தின் பெயர் அல்லது அமைவிடம்	அலகுகளின் எண்ணிக்கை	சராசரி உயரம் (அடி.)	பிரதேசம் (ச.அ)	கொள்ளளவு (கன. அடி)	கொள்கலன் அடுக்கும் உயரம் (அடி)
இல. 01	06	23	20,000	460,000	10 உயரம்
இல. 02	12	23	40,000	920,000	10 உயரம்
காலி துறைமுகத்தின் நிலக்கீழ் கேபள் மத்திய நிலையம் (GSCD)	10	23	33333.3	766666.68	10 உயரம்
இலங்கை துறைமுக அதிகார சபை	02	23	6666.7	153333.3	10 உயரம்

இல.2 களஞ்சியசாலையின் 7 அலகுகள் 15.01.2018 – 14.01.2023 வரையிலான காலப்பகுதிக்கு காலி நிலக்கீழ் கேபள் டிபோர்ட்(GSCD)இற்கு வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகம்

துறைமுக பரிமாணம்

நீர் பிரதேசம்	1,536 ஹெக்டயார்
உட்பிரவேச கால்வாய் (ஆகக் குறைந்த அகலம்)	500 மீட்டர்
நில பிரதேசம்	2,254 ஹெக்டயார்

வேலை நேரங்கள்

திருகோணமலை துறைமுகத்தில் மே தினத்தில் பகல் நேரத்தில் மாத்திரம் கையாளல் நடவடிக்கைகள் இடம்பெறுவதோடு வருடத்தின் அனைத்து நாட்களிலும் 24 மணித்தியால அடிப்படையில் சேவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நங்கூரத்தள வசதிகள்

இலங்கை துறைமுக அதிகார சபையின் நங்கூரத்தளங்கள்

நங்கூரத்தளம்	முழு நீளம் (மீ)	கரையோர ஆழம் (மீ)
அஷ்ரப் இறங்குதுறை	250	12.5
பக்க துறைமேடைகள் (அஷ்ரப் இறங்குதுறை)	90 X 2	8.5
மட்கோவ் துறைமேடை	45	3.5
ரீரீஏ துறைமேடை (TTA)	190	2.0-4.0
சிலோன் துறைமேடை	50	2.5
நகர துறைமேடை	50	2.5
மூதூர் துறைமேடை	60	3.0
வீஎஸ்ஓ துறைமேடை (VSO)	25	1.5
பழைய நகர துறைமேடை	60	2.0
எண்ணெய் துறைமேடை	130	9.75

ஏனைய துறைமேடைகள்

நங்கூரத்தளம்	முழு நீளம் (மீ)	கரையோர ஆழம் (மீ)
பிரிமா துறைமேடை (உள்ளக)	122	5.9
பிரிமா துறைமேடை (வெளியக)	227	14.3
பிரிமா துறைமேடை (பன்நோக்கு)	170	10.3
டோக்கியோ சீமெந்து துறைமேடை	160	9.5

குதங்கள் பற்றிய விபரங்கள் – ரீரீஏ (TTA)

குதம்	பரிமாணம் (அடி	சராசரி உயரம் (அடி)	பரப்பளவு (ச.அடி)	கொள்கலன் அடுக்கும் உயரம் (அடி)	கொள்ளளவு (க.அடி)
இல. 01	75 X 34	-	2,550	12	30,600
இல. 02 மற்றும் 03	90 X 70	15	6,300	12	75,600
இல .04	190 X 95	19	18,050	14	252,700
இல. 05 A	150 X 110	25	16,500	15	247,500
இல 05 B	150 X 80	15	12,000	12	144,000
இல. 06	300 X 110	20	33,000	15	495,000
இல. 07	96 X 36	-	3,456	12	41,472

ஹம்பாந்தோட்டை துறைமுகம்

கட்டம் - I

துறைமுக பரிமாணம்

துறைமுகப் பிரதேசம்

துறைமுக நீர் பிரதேசம்	70 ஹெக்டயர்
மேற்கு அலைதாங்கியின் நீளம்	988மீட்டர்
கிழக்கு அலைதாங்கியின் நீளம்	312மீட்டர்
உட்பிரவேச கால்வாய்	210மீட்டர்
திருப்பும் வட்டம்	600 மீட்டர்

துறைமேடையின் நீளம்

பொதுவான கப்பற் சரக்கு துறைமேடை	600 **மீட்டர்**
சேவைத் துறைமேடை	105 மீட்டர்
எண்ணெய் துறைமேடை 1	310 மீட்டர்
எண்ணெய் துறைமேடை 2	300 மீட்டர்
நீர்த் தடாக ஆழம்	16 மீட்டர்
கப்பல் வடிவமைப்பு	100,000 நிறை தொன்

ஹம்பாந்தோட்டை துறைமுகம் - இரண்டாம் கட்டம்

துறைமுக பரிமாணம்

துறைமுகப் பிரதேசம்

பூர்த்தியடைந்ததன் பின்னர் மொத்த நீர்ப் பிரதேசம்	77 ஹெக்டயார்
திருப்புவட்டம்	600 மீட்டர்
உட்பிரவேசக்கால்வாய்	210 மீட்டர்

துறைமேடையின் நீளம்

பிரதான கொள்கலன் நங்கூரத்தளம்	838.5 மீட்டர்
ஊட்டச்சேவை கொள்கலன் முனையம்	460 மீட்டர்
பல் நோக்கு நங்கூரத்தளம்	838.5 மீட்டர்
பரிமாற்ற நங்கூரத்தளம்	208 மீட்டர்
நீர்த்தடாகத்தின் ஆழம்	17 மீட்டர்
கப்பல் வடிவமைப்பு	100,000 நிறை தொன்



நிதி அறிக்கைகள்

ஆண்டறிக்கை 2022

2022.12.31 ஆம் திகதிக்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபை பின்வருமாறு:

திரு கீத் டி பேர்னாட்
தலைவர்

திரு ஜி. யு. கே. அல்கேவத்தகே
உப தலைவர்

திரு உபுல் ஜயதிஸ்ஸ
முகாமைத்துவ பணிப்பாளர்

திரு பீ. எ. எஸ். அத்துலகுமார
பணிப்பாளர்

திரு பி. பீ. எஸ். சி. நோனிஸ்
பணிப்பாளர்

திருமதி என். ஏ. ஏ. பீ. எஸ். நிஸ்ஸங்கா
பணிப்பாளர்

திரு. ஜே. ஆர். யூ. த. சில்வா
பணிப்பாளர்

திரு நீல் ராஜகருணா
பணிப்பாளர்

டாக்டர் அஜித் மென்டிஸ்
பணிப்பாளர்

2022 ஆம் ஆண்டினுள் பணிப்பாளர் சபை கூட்டங்கள் 14 நடாத்தப்பட்டன. மேலும், பணிப்பாளர் சபையின் உப குழுவொன்றாக அமுலாகும் உயர் மட்டத்திலான முகாமைத்துவ குழு அதே கால எல்லையினுள் 02 கூட்டங்கள் நடாத்தியுள்ளன. எவ்வாறாயினும் மீளாய்வுக்குட்பட்ட கால எல்லையினுள் உயர் மட்ட முகாமைத்துவக் குழு நியமிப்பதற்கு முன் நிறைவேற்றுக்குழு கூட்டங்கள் 09 நடாத்தப்பட்டிருந்தன. பணிப்பாளர் சபையின் மேலும் உப குழுவொன்றான கணக்காய்வு குழு 2022 ஆம் ஆண்டில் 05 கூட்டங்கள் நடாத்தியுள்ளன.

கடந்த வருடத்தை விட 5.3% குறைவொன்றை காட்டுகின்ற 2022 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கொள்திறன் கொள்கலன்கள் இருபதின் சம அலகு 6.86 மில்லியனாகியிருந்தது. இந்த மொத்த கையாளல் பிரமாணத்தில் களம்பு இண்டர்நெஷனல் கண்டேனர் டர்மினல் கம்பனி கொள்கலன்கள் இருபதின் சம அலகு 3.18 மில்லியனும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்கள் கொள்கலன்கள் இருபதின் சம அலகு 1.92 மில்லியனும் சவுத் ஏசியா கேட்வே முனையம் கொள்கலன்கள் இருபதின் சம அலகு 1.75 மில்லியனும் கையாளப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, மீள் ஏற்றுமதி கொள்கலன்கள் கையாளல் 3.7 % இனால் குறைவடைந்து காணப்பட்டதோடு, கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது உள்நாட்டு கொள்கலன்கள் கையாளல் பிரமாணம் 14.1 % இனால் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் பொழுது கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட கொள்கலன்கள் பரிமாணம் மற்றும் மொத்த தொன் பிரமாணம் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் பின்னடைவு காட்டப்பட்டுள்ளது. விசேடமாக துறைமுகத்தின் கொள்கலன்கள் கையாளல், கொள்கலன் இருபதின் சம அலகு 2021 ஆம் ஆண்டில் கையாளப்பட்ட பரிமாணம் 7,249,358 மில்லியன் முதல் 2022 ஆம் ஆண்டில் 6,862,184 மில்லியன்கள் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. இதன் மூலம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் பொழுது

கொள்கலன்கள் இருபதின் சம அலகு 387,174 மில்லியன் அதாவது 5.3 % இனால் குறைவொன்று காட்டப்படுகின்றது. மேலும் துறைமுகத்தில் மொத்த கையாளல்கள் தொன் பிரமாணம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் பொழுது 7.4% இனால் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த வருடத்தில் கொழும்பு துறைமுகத்துக்கு வருகைதந்த 3674 மொத்த கப்பல்களின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 3,648 வரையான சிறு பின்னடைவொன்று காட்டப்பட்டுள்ளதுடன் இது 0.7% ஆன குறைவொன்றாக காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 3.4% வளர்ச்சியொன்று குறிப்பிடப்பட்டு கடந்த ஆண்டில் துறைமுகத்துக்கு வருகைதந்த கொள்கலன் கப்பல்கள் 3,180 இற்கு ஒப்பாக 2022 ஆம் ஆண்டில் கொள்கலன் கப்பல்கள் 3,287 வருகையுடன் கொள்கலன் கப்பல்களின் வருகையில் சிறு அதிகரிப்பொன்று காட்டப்பட்டுள்ளது. கொள்கலன்கள் கப்பல்களின் வருகை இவ்வதிகரிப்பு கொழும்பு துறைமுக வளாகத்தில் மீள் ஏற்றுமதி மைய துறைமுகமொன்றாக தொடர்ச்சியான செயல்படுத்தலாக குறிப்பிடப்பட்டதாகும்.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்களிற்கு மற்றும் கொழும்பு துறைமுகத்திற்கு அதிகளவிலான கொள்கலன்கள் கப்பல்களை கவர்ந்துக்கொள்ளும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவத்தினால் சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி மூலோபாயங்கள் பல செயற்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டும் பேணிச் செல்வதற்கும் தொடர்புகளை பலப்படுத்திக் கொள்வதற்கு பிரதான கப்பல் சேவைகளுடன் முனைய சேவை ஒப்பந்தங்கள் இரண்டு (02) கைச்சாத்திடப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக எதிர்பாராமல் வருகை தருகின்ற கப்பல்களை எமது முனையங்களில் கையாண்டு அதன் மூலம் மேலக கொள்கலன்கள் பரிமானததை கவர்ந்து கொள்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை சாத்தியம் பெற்றுள்ளது.

அதி விசாலமான கொள்கலன்கள் கப்பல்களை கையாளுவதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கொழும்பு தெற்கு துறைமுகத்தின் ஆழமான நங்கூரதள வசதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அதன் விளைவாக களம்பு இண்டர்நெஷனல் கண்டேனர் டர்மினலுக்கு 14.25 மீட்டரை விட கூடுதலான ஆழத்துடன் கூடிய கொள்கலன் கப்பல்கள் 230 வந்துள்ளதோடு, கிழக்கு கொள்கலன் முனையத்திற்கு அவ்வாறான 17 கப்பல்கள் வருகைதந்துள்ளன.

எவ்வாறாயினும், கப்பல்களின் பரிமாணம் அதிகரித்தல், புதிய ஒன்றிணைப்புக்கள் கையாளளுக்காக மற்றும் ஏனைய தனியார் முனைய இயக்குனர்களால் வழங்கப்பட்டுள்ள போட்டியான கட்டணங்கள் உட்பட பல சவால்களுகிடையில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனைய இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறன. இச்சவால்களுக்கு மத்தியிலும் வலயத்தினுள் கப்பலோட்ட தொழிலின் முன்னனி கப்பற் பொருட்கள் இயக்குனரொருவராக இலங்கை துறைமுக அதிகாரசபை தமது சேவைகளை அதிகரித்துக்கொள்வதற்கு மற்றும் தமது நிலைமையினை பேணிச் செல்வதற்கும் தொடர்ச்சியாக நடவடிக்கை மேற்கொள்கின்றது.

இலங்கை துறைமுக அதிகரசபையில் கடந்த ஆண்டில் ரூபா 24.9 பில்லியன் இயக்க இலாபத்துக்கு ஒப்பாக 2022 ஆம் ஆண்டில் ரூபா 47.2 பில்லியன் இயக்க இலாபமொன்று அறியப்பட்டது. 2021 ஆண்டில் ரூபா 60.6 பில்லியன் மொத்த வருமானத்துடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் ரூபா 99.1 பில்லியன் ஆனதோடு, அது ரூபா 38.5 பில்லியன் அதிகரிப்பாகும். 2021 ஆம் ஆண்டில் ரூபா 32.9 பில்லியன் அந்நிய செலாவனி இலாபம்/ நட்டம் மற்றும் வெளிநாட்டுக்கடன் வட்டி மற்றும் வரிகளுக்கு முன்னரான மொத்த செலவுடன் ஒப்பிடும் போது 2022 ஆண்டில் அது ரூபா 43.7 பில்லியனாவதோடு, அது 33% அதிகரிப்பாகும்.

இலங்கை ரூபாவின் பெறுமதி குறைவடைவதன் காரணமாக முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன் மீது வட்டி 200% ஆல் அதிகரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் அந்நிய செலாவணி நட்டமான ரூபா 1.27

பில்லியனுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் அந்நிய செலாவணி இலாபம் ரூபா 4.19 பில்லியனாகியது.

அமெரிக்க டொலருக்கு ஒப்பாக இலங்கை ரூபாவின் பெறுமதி குறைவடைந்ததன் காரணமாக இலங்கை துறைமுக அதிகாரசபை 2021 ஆம் ஆண்டில் ரூபா 20.7 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 42.3 பில்லியன் வரிகளுக்கு பின்னரான தேறிய இலாபமொன்று அறியப்பட்டுள்ளது.

நிதி அறிக்கை வெளியிடல் தொடர்பான பணிப்பாளர் சபையின் அறிக்கை

இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல நிதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கணக்குப் புத்தகங்கள் முறையாக பேணப்படுதலையும், அச்செயற்பாட்டின் நிலைமை மற்றும் வருடத்தின் இலாபம்/நட்டம் தொடர்பான உண்மையானதும் தெளிவான எண்ணப்பாடும் ஏற்படும் வண்ணம் அதன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றதென்பதனை 1971 இன் 38 ஆம் இலக்கச் சட்டத்தின் (12) மற்றும் (13.6) ஆம் பிரிவின் மீது உறுதிப்படுத்துதல் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர்களினது பொறுப்பாகும்.

இதன்படி கணக்குப் புத்தகங்கள் முறையாகப் பேணி நடாத்திச் செல்வதற்கு அதிகாரசபைக்கு பணிப்பாளர் சபை வழிகாட்டியுள்ளதுடன் வழமையான கூட்டங்களின் போது கணக்காய்வுக் குழு ஊடாக நிதி நிலைமைகளின் அறிக்கையிடல் முறைமைகள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டன.

இவ்வறிக்கையில் குறிப்பிடப்படும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் நீதியானதும், தூரநோக்குடனான தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் மூலம் கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ச்சியான அடிப்படையின் மீது ஏற்றுக்கொள்ளப்படுவது தொடர்பில் பணிப்பாளர்களினால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதிகாரசபையின் சொத்துக்களைப் பாதுகாத்தல், நிதி மோசடி மற்றும் வேறு ஒழுங்கீனங்களை தடுப்பதற்கும் கண்டுபிடிப்பதற்குமாக தம்மால் எடுக்கக்கூடிய சகல நடவடிக்கைகளையும் பணிப்பாளர் சபை எடுத்துள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் வர்த்தக நடவடிக்கைகளை முறையான முகாமைத்துவம் செய்வதற்கும் எமது ஆவணங்களின் உண்மை மற்றும் நம்பிக்கைத் தன்மையை செயன்முறையாக முடிந்தளவு பாதுகாக்கப்படும் பொருட்டு உள்ளக பரீட்சிப்புக்கள், உள்ளக கணக்காய்வுகள், நிதி மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள் அடங்கலான பயனானதும் பூரண கட்டுப்பாடும் கொண்ட முறையொன்றினை பணிப்பாளர் சபை ஸ்தாபித்துள்ளது.

பணிப்பாளர் சபையின் உத்தரவின் பிரகாரம்



திருமதி செஹாரா நவரத்ன
பணிப்பாளர் சபையின் செயலாளர்

கணக்காய்வு குழு – 2022 வருடத்தினுள் அமைப்பு

திரு.பீ.ஏ.எஸ்.அத்துல குமார

சுயாதீன, நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்
பொது திறைசேரியன் பிரதிநிதி
2022.04.22 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி. ஜே.சி.வெலிகம

சுயாதீன, நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்
பொது திறைசேரியின் பிரதிநிதி
2020.02.17 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.
2022.03.02 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இராஜினாமா செய்துள்ளார்.

உறுப்பினர்கள்

திரு.பீ.பி.எஸ்.நோனிஸ்

சுங்க பணிப்பாளர் நாயகம்
பணிப்பாளர் (இ.து.அ.ச பணிப்பாளர் சபை)
2022.09.21 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. எம்.எம்.பீ.பீ.கே.கே.நவரத்ன

சட்டதரணி
பணிப்பாளர் (இ.து.அ.ச பணிப்பாளர் சபை)
2022.09.21 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.
2022.11.29 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இராஜினாமா செய்துள்ளார்.

திரு.எச். இசுறு பாலபட்டபெந்தி

பணிப்பாளர் (இ.து.அ.ச பணிப்பாளர் சபை)
2021.08.23 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.
2022.08.05 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இராஜினாமா செய்துள்ளார்.

மேஜர் ஜெனரால் ஜீ.வி. ரவிப்பிரிய

சுங்கப் பணிப்பாளர் நாயகம்
பணிப்பாளர் (இ.து.அ.ச பணிப்பாளர் சபை)
2020.06.30 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.
2022.07.26 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இராஜினாமா செய்துள்ளார்.

குழுவின் செயலாளர்

இலங்கை துறைமுக அதிகார சபையின் பணிப்பாளர் சபை செயலாளர் கணக்காய்வு குழுவின் செயலாளராகவும் பணியாற்றுகின்றார். அரச பொது நிறுவனங்களின் நிருவாக ரீதியான அளவுகோல்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக பிரதான உள்ளக கணக்காளரினால் கணக்காய்வு குழு கூட்டப்படும்.

கட்டாய பங்கேற்பாளர்கள்

முகாமைத்துவ பணிப்பாளர்
அல்லது
மேலதிக முகாமைத்துவ பணிப்பாளர்
பிரதான நிதி முகாமையாளர்

கண்காணிப்பாளர்கள்

கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதி

நேரொத்த அமைச்சின் பிரதான உள்ளக கணக்காளர்

குழு கூட்டங்கள்

2022 நிதி ஆண்டு முழுவதும் கணக்காய்வு குழு செயற்பாட்டிலிருந்ததுடன், ஆண்டினுள் 05 கணக்காய்வு குழு கூட்டங்களை நடாத்த முடிந்துள்ளது. மீளாய்வு ஆண்டினுள் கணக்காய்வு குழு கூட்டங்களில் பங்குபற்றிய குழு உறுப்பினர்களின் விபரங்கள் கீழ்வருமாறு

பெயர்	பங்கேற்க தகுதியுடைய / பங்குபற்றிய
திருமதி. ஜே.சி.வெலிகமகே	1/1
திரு.பீ.ஏ.எஸ்.அத்துல குமார	4/4
மேஜர் ஜெனரால் ஜீ.வி. ரவிப்பிரிய	1/2
திரு.எச். இசுறு பாலபட்டபெந்தி	2/2
திரு.பீ.பி.எஸ்.சி.நோனிஸ்	3/3
திரு. எம்.எம்.பீ.பீ.கே.கே.நவரத்ன	0/2

கணக்காய்வு குழுவின் நிறைவெண் (கோரம்) உறுப்பினர்களின் சாதாரண பெரும்பான்மையாகும்.

கணக்காய்வு குழுவின் செயற்பாடுகள்

கணக்காய்வு குழுவானது பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுகின்றது. இது பணிப்பாளர் சபையின் உப குழுவாகும்.

நிறுவனரீதியான குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான சீர்செய்யும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு மற்றும் அவற்றின் கால தாமதங்கள் தொடர்பான பொறுப்புக்களை செயற்படுத்தும் பொருட்டு கணக்காய்வு குழு தமது பரிந்துரைகளை பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கின்றது. இந்நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது, குழுவின் பிரதான பொறுப்புக்களாவது;

நிதி அறிக்கையிடல் மற்றும் ஒழுங்குப்படுத்தும் இணக்கப்பாடு

அதிகார சபையின் நிதி அறிக்கையிடலிலுள்ள வழுக்கள் மற்றும் குறைப்பாடுகளை ஆராய்வதற்கான முறையான செயற்பாடுகளை முன்னெடுப்பது, நிதி அறிக்கையை உரிய முறையில் தயாரித்து சமர்ப்பிப்பதை உறுதி செய்யும் பொருட்டு, ஒழுங்குப்படுத்தும் அதிகாரம், அரசாங்க சுற்றறிக்கைகள், ஏனைய குறித்த நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் நியமங்களை அறிக்கையிடும் தரத்தை பின்பற்றி குறித்த தகவல்கள் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதனை ஆராயும் பொருட்டாகும்.

நிறுவன சட்டமூலம் மற்றும் நிதி சட்டமூலம் உள்ளடங்கலாக ஏனைய குறித்த சட்ட மூலங்களுடன் தற்போதைய முறையான ஒழுங்குப்படுத்தலை மீளாய்வு செய்தல்.

உள்ளக நிருவாகம்

உள்ளக நிருவாகத்தின் போதிய தன்மை மற்றும் ஆக்கத்திறனை மீளாய்வு செய்து, மதிப்பீடு செய்து விசேட கவனம் செலுத்த வேண்டிய துறைகளை அடையாளங் காணல்.

உள்ளக கணக்காய்வு

உள்ளக கணக்காய்வு பணிகளின் சுயாதீனத்தன்மை, ஆக்கத்திறன் மற்றும் தேர்ச்சி மற்றும் அவற்றின் மூலோபாய தேவைகளை மீளாய்வு செய்து முன்னேற்றுவதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல்.

உள்ளக கணக்காய்வு பகுதி மற்றும் வெளி கணக்காளர்களிடையேயான தொடர்புகளை உறுதிப்படுத்துதல்.

உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளிலுள்ள இடர்களை அடிப்படையாகக் கொண்டு உள்ளக கணக்காய்வு திட்டத்தை மீளாய்வு செய்வதன் ஊடாக மற்றும் அங்கீகரிப்பதனூடாக அதிகார சபையின் செயற்பாடுகளிலுள்ள இடர்களின் மதிப்பீட்டின் மீது மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துதல்.

வெளியக கணக்காய்வு

கணக்காய்வின்போது கண்டறியப்படும் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு வெளியக கணக்காளருடன் உரிய முறையில் தொடர்புகளை பேணி சிக்கல்களை சீர்செய்வதற்காக பணிப்பாளர் சபையிடம் பரிந்துரைத்தல்.

2022 ஆண்டினுள் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள்

2022 ஆம் ஆண்டில் கணக்காய்வு குழுவினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கீழ்வரும் விசேட துறைகளின் கீழ் சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதி அறிக்கையிடல் மற்றும் ஒழுங்குப்படுத்தும் இணக்கப்பாடு

இலங்கை கணக்காய்வு தரங்கள் உள்ளடங்கலாக ஒழுங்குப்படுத்தும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இலங்கை துறைமுக அதிகார சபையின் கணக்காய்வு அறிக்கைகளுக்கு அமைவாக, நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு மற்றும் அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் செயலாற்றுகை தொடர்பாக உண்மையான மற்றும் சாதாரணமான நிலைப்பாடொன்றை பிரதிபலிக்கும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடு பணிப்பாளர் சபைக்கு பதிலாக கணக்காய்வு குழுவினால் மீளாய்வு செய்யப்படுகின்றது.

கணக்காய்வு கொள்கைகள் மற்றும் அத்தியாயங்கள் உகந்த மற்றும் போதுமானதென, நிதி அறிக்கையிடல் முறை ஆக்கப்பூர்வமானதென சாதாரணமாக உறுதி செய்யக் கூடிய

வகையில் உள்ளக நிருவாகம் மற்றும் செயற்பாடு இருப்பதாகவும், நம்பகத்தன்மை மற்றும் காலத்துக்கேற்ற தகவல்களை வழங்குவதற்கு உரிய முறையில் முகாமைத்துவப்படுத்தப்பட்டுள்ளதாக கணக்காய்வு குழு திருப்தி அடைந்துள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதி அறிக்கையிடலுடன் தொடர்பான விசேடமான இடர்நிலை மற்றும் நிச்சயமற்ற தன்மை மற்றும் அதிகாரசபையின் நிதி அறிக்கையிடலுடன் தொடர்பான பிரதான மதிப்பீடு மற்றும் தீர்மானங்கள் தொடர்பாக கணக்கீட்டு கொள்கைகளுக்கு தாக்கம் செலுத்தல் மற்றும் வெளியிடப்படும் நிதி அறிக்கை மூலமாக வெளிப்படுத்தப்பட்ட காரணிகள் போதுமானது, உகந்தது மற்றும் சாதாரணமானதா என்பது மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

உள்ளக நிருவாகம்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் உள்ளக நிருவாக செயற்பாடு போதியதன்மையானது, ஆக்கப்பூர்வமானது மற்றும் வினைத்திறனானது என்பதனை மதிப்பீடு செய்வது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உள்ளக கணக்காய்வு

உள்ளக கணக்காய்வு செயன்முறையின் சுயாதீனத்தன்மை, இலக்குத்தன்மை மற்றும் செயலாற்றுகை, பூரணப்படுத்தப்பட்ட உள்ளக கணக்காய்வு மூலமாக கண்டறியப்பட்ட காரணிகள் மற்றும் அதிகாரசபையினால் அவற்றின் உள்ளக நிருவாக தொகுதியை மதிப்பீட்டுக்குற்படுத்தும் முறை மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.
இடர் மீது அடிப்படையான செயற்பாடு மீது அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டம் மீளாய்வு செய்து அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
உள்ளடக்கப்படும் போதியதன்மை மற்றும் அதிர்வெண்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

உள்ளக அறிக்கைகள் மூலமாக கண்டறியப்பட்ட பிரதான காரணிகளை மற்றும் அவற்றுக்கு முகாமைத்துவத்தினால் வழங்கப்பட்ட பதில்கள் மீளாய்வு செய்யப்பட்டதுடன், பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப்பட்ட முறைகள் மீளாய்வு செய்யப்பட்டன.

உள்ளக கணக்காய்வு பகுதியின் வளங்களின் தேவைப்பாடுகள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டன.

வெளியக கணக்காய்வு

இடைகால மற்றும் இறுதி கணக்காய்வுகளின் மூலம் எழுந்த அனைத்து விடயங்களுடன் தொடர்பான முகாமைத்துவத்தின் பதில்கள் அனைத்தும் ஒன்றாக கலந்துரையாடப்பட்டன.

கணக்காய்வு விசாரணைகள் மூலம் வெளிப்படுத்திக்கொள்ளப்பட்ட அனைத்து விடங்கள் தொடர்பாகவும் பரிந்துரைகள் பணிப்பாளர் சபைக்கு சமர்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்கால பயணம்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் செயற்பாடுகளை மிகவும் வெளிப்படைதன்மையாக முன்னெடுப்பதற்கு உதவுவதற்காக நிறுவனத்தின் நிருவாகம் மற்றும் நிதி ஒழுக்கத்தை உயர் தரத்தில் பேணும் பொருட்டு கணக்காய்வு குழுவினால் முக்கிய பங்களிப்பொன்று வழங்கப்பட்டுள்ளது. அதேப்போல், அதிகாரசபையின் இலக்கு மற்றும் நோக்கத்தை அடைந்துக்கொள்ளும் பொருட்டு நிதி அறிக்கையிடல், உள்ளக நிருவாகம், இடர் முகாமைத்துவம் மற்றும் நிருவாக முறைமை உள்ளடங்கலான பிரதான துறைகளுடன் தொடர்புடைய விடயங்கள் பணிப்பாளர் சபையின் கண்காணிப்பிற்கு மற்றும் அறிக்கையிடலுக்கு உட்படுத்துவதற்கு கணக்காய்வு குழு தொடர்ச்சியாக பிரயத்தனம் எடுக்கின்றது.



திரு. பீ. ஏ. எஸ். அத்துல குமார
தலைவர்
கணக்காய்வு குழு

சட்டபூர்வ தேவைகளுக்கு இணங்குதலின் முக்கியத்துவம் தொடர்பான விடயங்கள் விபரமாக கீழே காட்டப்பட்டுள்ளது.

1. ஊழியர் சேமலாப நிதி - அதிகாரசபையினதும் ஊழியர்களினதும் பங்களிப்பு

இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல நிரந்தர ஊழியர்களுக்குமுரிய இலங்கை துறைமுக அதிகாரசபையினது பங்களிப்பு 15% மற்றும் ஊழியர்களின் பங்களிப்பு 10% ஆக எதிர்வரும் மாதத்தின் கடைசி தினத்திற்கு முன்னர் தொழில் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

ஊழியர்களிடமிருந்து குறைக்கப்படுகின்ற சகல பங்களிப்பு தொகை மற்றும் ஊழியர்களுக்கான அதிகாரசபையின் பங்களிப்பு நிதி உரிய திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்படுகின்றது.

2 ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

அதிகாரசபையின் மாதாந்த பங்களிப்பான 3% இனை உரிய திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்படுகின்றது.

3 வருமான வரி

2017 இல : 24 கொண்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 113 ஆவது பிரிவின் பிரகாரம் ஈட்டப்படும் வருமானம் தொடர்பாக, வருமான வரி செலுத்துதல், வரி செலுத்த வேண்டிய வருமானமொன்று ஈட்டியுள்ள சகல சந்தர்ப்பங்களிலும் உரிய திகதிகளில் காலாண்டுகளாக செலுத்தப்பட்டுள்ளது.

4 வருடாந்த வருமானம்

அதிகாரசபையின் வருமானவரி தொடர்பாக வருடாந்த அறிக்கை 2021 திசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடம் தொடர்பாக, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வருடாந்தம் கோவையிடப்பட்டுள்ளது. இந்த வருமானம் தயாரிப்பதை நிறைவு செய்து நவம்பர் 30 ஆந் திகதிக்கு அல்ல அதற்கு முன் மீளாய்வு ஆண்டின் பின் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

5 வருடாந்த அறிக்கையிடல்

வருடாந்த வரவு செலவு மற்றும் கணக்குகள், வருடாந்த அறிக்கைகள் ஆகியவை இலங்கை பாராளுமன்றம், பொது திறைசேரி மற்றும் அமைச்சிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

6. சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி (SSCL)

இலங்கை துறைமுக அதிதகாரசபையினால் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி 2.5% விகிதத்துக்கு செலுத்த வேண்டிய ஆகுசெலவின் மீது செலுத்தப்பட்டுள்ளதோடு அத்தொகை குறிப்பிடப்பட்டுள்ள தினத்தில் அல்லது அதற்கு முன் செலுத்தப்பட்டுள்ளது.

டிசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது				இதுஅச	
	கொழும்பு	திருகோணமலை	காலி	2022	2021
வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை					
சரக்கு கப்பல்கள்	3,547	84	3	3,634	3,804
ஏனைய கப்பல்கள்	101	11	4	116	102
ஏனைய கலங்கள்	718	35	34	787	697
	4,366	**130**	**41**	**4,537**	**4,603**
கொள்கலன் பரிமாணம்					
கொள்கலன் இருபதின் சம அலகு (இ.து.அ.ச)					
மாற்றியேற்றல்	1,633,176			1,633,176	1,846,264
உள்நாடு	256,318			256,318	321,121
மீளடுக்குதல்	36,401			36,401	30,949
மொத்த கொள்கலன் இ.ச அலகுகள்	**1,925,895**	-	-	**1,925,895**	**2,198,334**
கொள்கலன் இ.ச.அலகுகள் (எஸ்ஏஜீரீ)					
மாற்றியேற்றல்	1,481,563			1,481,563	1,521,373
உள்நாட்டு	229,711			229,711	265,285
மீளடுக்குதல்	40,962			40,962	52,035
மொத்த கொள்கலன் இ.ச அலகுகள்	**1,752,236**	-	-	**1,752,236**	**1,838,693**
கொள்கலன் இ.ச.அலகுகள் (சீஐசீரீ)					
மாற்றியேற்றல்	2,520,946			2,520,946	2,482,410
உள்நாட்டு	544,201			544,201	612,649
மீளடுக்குதல்	118,906			118,906	117,272
மொத்த கொள்கலன் இ.ச அலகுகள்	**3,184,053**	-	-	**3,184,053**	**3,212,331**
கொள்கலன் ரீயூக்கள் (கொழும்பு துறைமுகம்)					
மாற்றியேற்றல்	5,635,685	-	-	5,635,685	5,850,047
உள்நாட்டு	1,030,230	-	-	1,030,230	1,199,055
மீளடுக்குதல்	196,269	-	-	196,269	200,256
மொத்த கொள்கலன் இ.ச அலகுகள்	**6,862,184**	-	-	**6,862,184**	**7,249,358**
மரபு முறையான கப்பற்சரக்குகள் மெ.தொ	1,915,755	1,711,281	1,169	3,628,205	6,988,678
திரவ மெ.தொ	4,333,670	377,475		4,711,145	5,535,505
	6,249,425	**2,088,756**	**1,169**	**8,339,350**	**12,524,183**
கப்பற்சரக்குகள் (மெ.தொ) (இ.து.அ.ச)					
கொள்கலனிலிடப்பட்ட சரக்கு	25,472,397			25,472,397	28,133,393
மரபு முறையான சரக்கு	1,915,755	1,711,281	1,169	3,628,205	6,988,678
திரவம்	4,333,670	377,475		4,711,145	5,535,505
மொத்த கப்பற் சரக்குகள்	**31,721,822**	**2,088,756**	**1,169**	**33,811,747**	**40,657,576**
கப்பற் சரக்குகள் (மெ.தொன்) (எஸ்.ஏ.ஜீ.ரீ)					
கொள்கலனிலிடப்பட்ட சரக்கு	22,731,145			22,731,145	24,061,998
மரபு முறையான சரக்கு				-	-
திரவம்				-	-
மொத்த கப்பற்சரக்குகள் (மெ.தொன்)	**22,731,145**	-	-	**22,731,145**	**24,061,998**
கப்பற் சரக்குகள் (மெ.தொன்) சீ.ஐ.சீ.ரீ					
கொள்கலனிலிடப்பட்ட சரக்கு	41,716,844			41,716,844	42,399,804
மரபு முறையான சரக்கு				-	-
திரவம்				-	-
	41,716,844	-	-	**41,716,844**	**42,399,804**
கப்பற் சரக்குகள் (மெ.தொன்) கொழும்பு துறைமுகம்					
கொள்கலனிலிடப்பட்ட சரக்கு	89,920,386	-	-	89,920,386	94,595,195
மரபு முறையான சரக்கு	1,915,755	1,711,281	1,169	3,628,205	6,988,678
திரவம்	4,333,670	377,475	-	4,711,145	5,535,505
மொத்த கப்பற்சரக்குகள் (மெ.தொன்)	**96,169,811**	**2,088,756**	**1,169**	**98,259,736**	**107,119,378**
கையாளப்பட்ட மெ.தொன் (இ.து.அ.ச)					
கொள்கலனிலிடப்பட்ட சரக்கு	25,472,397			25,472,397	28,133,393
மரபு முறையான சரக்கு	1,915,755	1,711,281	1,169	3,628,205	6,988,678
ஏனையவை	4,333,670	377,475		4,711,145	5,535,504
மொத்த தொன் பிரமாணம்	**31,721,822**	**2,088,756**	**1,169**	**33,811,747**	**40,657,575**
கையாளப்பட்ட மொத்த தொன் பிரமாணம் (எஸ்.ஏ.ஜீ.ரீ)					
கொள்கலனிலிடப்பட்ட சரக்கு	22,731,145			22,731,145	24,061,998
மொத்த தொன் எடை	**22,731,145**	-	-	**22,731,145**	**24,061,998**
கையாளப்பட்ட மொத்த தொன் பிரமாணம் (சீ.ஐ.சீ.ரீ)					
கொள்கலனிலிடப்பட்ட சரக்கு	41,716,844			41,716,844	42,399,804
மொத்த தொன் பிரமாணம்	**41,716,844**	-	-	**41,716,844**	**42,399,804**
கையாளப்பட்ட மொத்த தொன் பிரமாணம் (கொழும்பு துறைமுகம்)					
கொள்கலனிடப்பட்ட சரக்கு	89,920,386	-	-	89,920,386	94,595,195
மரபு முறையான சரக்கு	1,915,755	1,711,281	1,169	3,628,205	6,988,678
ஏனையவை	4,333,670	377,475	-	4,711,145	5,535,504
கையாளப்பட்ட மொத்த தொன் பிரமாணம் (கொழும்பு துறைமுகம்)	**96,169,811**	**2,088,756**	**1,169**	**98,259,736**	**107,119,377**
ஆளணி					
ஊழியர்களின் எண்ணிக்கை	**7,838**	**363**	**315**	**8,516**	**8,997**

நிதி நிலைமை தொடர்பான அறிக்கை

(இலங்கை ரூபாய்களில் காட்டப்பட்டுள்ளன)

திசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலை தொடர்பான கூற்று	குறிப்பு	குழுமம் 2022	குழுமம் 2021	இதுஅச 2022	இதுஅச 2021
சொத்துக்கள்					
நடைமுறையற்ற சொத்துக்கள்					
சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்கள்	3	251,719,813,895	148,971,536,673	251,628,153,511	148,870,349,879
குத்தகை வாடகை சொத்துக்கள்	3.2	69,817,698	81,745,116	69,817,698	81,745,116
உணரா சொத்துக்கள்	4	2,254,637,128	738,795,770	2,254,347,128	738,795,770
முதலீடு செய்யப்பட்ட சொத்துக்கள்	5	212,988,096,316	168,606,924,280	212,988,096,316	168,606,924,280
இணைக் கம்பனிகளின் மீதான முதலீடுகள்	6	100	100	76,000,100	76,000,100
துணைக் கம்பனிகளின் மீதான முதலீடுகள்	7	36,704,085,016	37,469,717,172	39,196,120,030	39,196,120,030
FVOCI ஏனைய விபரமான வருமானத்தின் மூலம் உருவாக்கப்பட்ட நிதிச் சொத்துக்களின் இருப்பு	8	67,584,339,272	35,623,899,913	67,584,339,272	35,623,899,913
அரச அடகு மற்றும் முதலீட்டு வங்கியினால் கிடைக்கப்பட வேண்டிய நிதி தொகை	9	40,989,023	53,926,469	40,989,023	53,926,469
